Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு - 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஆவணி 12 புதன்கிழமை (28.08.2013) பக்கங்கள் 20 ஓசை - 332

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/2967)

# தேர்தல் பிரசாரத்தில் குறுக்கீடு; சாவகச்சேரியில் துப்பாக்கிச்சூடு!

## இருதரப்பு மோதலில் பலர் காயம்

(சாவகச்சேரி)

ஏட்டிக்குப் போட்டியான பிரசார நடவடிக்கைகளின்போது ஏற்பட்ட முரண்பாடுகள் முற்றியதால் நேற்று தென்மராட்சியில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

நேற்றிரவு நடைபெற்ற இச் சம்பவத்தின்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் யாழ். வேட்பாளர் அங்கஜனின் மெய்க்காப்பாளர் ஒருவர் காயமடைந்திருக்கிறார்.

அங்கஜன் தலைமையிலான குழுவினர் நேற்று மாலை தென்மராட்சியில் பிரசார நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றனர். இவர்களின் பிரசார நடவடிக்கைகள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மற்றுமொரு வேட்பாளரான சர்வானந்தம் என்பவரின் பிரசாரங்களை ஏதோஒரு வகையில் பாதிப்பதாக அமைந்ததாகக் கூறப்படுகிறது.

இதனால் இரு தரப்புக்குமிடையில் நேற்று மாலை முறுகல் நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த முறுகல் நிலை நேற்றிரவு உச்சமடைந்தது.

பிரசார வேலைகளை முடித்துக்கொண்டு அங்கஜன் குழுவினர் யாழ். நோக்கி பயணித்துக்

(19) ஆம் பக்கம் பார்க்க

## மனித உரிமை மீறல்; முறையிட விசேட கருமபீடம்

(கொழும்பு)

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் முறைப்பாடு செய்ய விசேட கருமபீடம் ஒன்றும் விசேட தொலைபேசி இலக்கமொன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவினால் இந்த தொலைபேசி இலக்கம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

மனித உரிமை விவகாரங்கள் தொடர்பில் மக்கள் முறைப்பாடு செய்யக் கூடிய வகையில் இந்த விசேட தொலைபேசி இலக்கம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. 1996 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முறைப்பாடுகளை

(19) ஆம் பக்கம் பார்க்க

## காணாமற்போனோரை கண்டுபிடிக்க உதவுங்கள்

### நவிப்பிள்ளையிடம் மகஜர்

(யாழ்ப்பாணம்)

காணாமற்போனோர் மற்றும் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பான மகஜர் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவிப்பிள்ளையிடம் கையளிக்கப்பட்டதாக பிரஜைகள் குழு சார்பாக நவிப்பிள்ளையுடன் சந்திப்பை மேற்கொண்ட வண.பிதா செபமாலை தெரிவித்தார்.

ஐ.நா. யாழ். அலுவலகத்தில் இடம்பெற்ற சிவில் சமூகத்துடனான சந்திப்பிலேயே நவிப்பிள்ளையிடம் இம்மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

காணாமற்போனோர் தொடர்பாகவும் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பாகவும் காணி அபகரிப்பு, மீள்குடியேற்றம் தொடர்பாகவும் மீனவர் பிரச்சினை, அபிவிருத்தி என்ற வடிவில் இடம்பெறும் ஏமாற்று தொடர்பாக நாம் எழுத்துமூலம் மகஜர் வழங்கியுள்ளோம்.

இவற்றால் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவரினாலும் வழங்கியதாகவும், மனப்பூர்வமாக அம் மகஜர்களைப் பெற்றுக்கொண்ட

(19) ஆம் பக்கம் பார்க்க

## எங்கள் உறவுகள் எங்கே? கதறி அழுது கவனயீர்ப்பு

### கண்டுகொள்ளாமல் பின்கதவால் வெளியேறினார் நவி



(யாழ்ப்பாணம்)

எங்கள் உறவுகள் எங்கே? எங்கள் குழந்தைகளை எங்களிடம் திருப்பித் தாருங்கள், இதற்கு விசாரணை இல்லையா? என்ற அழுகைக் குரல்கள் நேற்று யாழ். நூலகத்திற்கு முன்னால் ஓங்கி ஒலித்தது.

யாழ். பொதுநூலகத்தில் நவநீதம்பிள்ளை கலந்து கொண்ட கலந்துரையாடல் இடம்பெற்ற வேளையில் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களின் பிரஜைகள் குழுக்கள், காணாமற்போனோர் சங்கம், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம், கிராமிய உழைப்பாளர் சங்கம் என பல்வேறு அமைப்புக்கள் இவ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன.

இதில் காணாமற்போனவர்களின் உறவுகள் கண்ணீர் மல்க தமது பிள்ளைகள் எங்கே என கதறி அழுதனர்.

சிறு பாலகர்கள் தமது தந்தையை, அக்காவை,

(19) ஆம் பக்கம் பார்க்க

10



சம்பந்தி உறவு

11



தமிழ் அழகி

18



பாதிப்பு

## இந்திய மீனவர்கள் 35 பேருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

35 இந்திய மீனவர்களை செப்ரெம்பர் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு புத்தளம் நீதவான் உத்தரவிட்டுள்ளார். இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இதனையடுத்து நேற்று

(19) ஆம் பக்கம் பார்க்க



நல்லூர் கந்தன் ஆலயத்தில் நேற்று மாலை இடம்பெற்ற கார்த்திகை திருவிழாவின் காட்சி...

## சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு உடனடியாகத் தேவை

### ஐ.தே.க. அவசர கோரிக்கை

(கொழும்பு)

சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு நிறுவப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.


புதிய அமைச்சு ஒன்றை உருவாக்குவதன் மூலம் பொலிஸ் திணைக்களத்தை சுயாதீனமாக்க முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

சுயாதீனமான பொலிஸ் திணைக்களத்தை அமைப்பதன் மூலமே பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொலிஸ் திணைக்களம் சுயாதீனமாக இயங்கும் என எதிர்பார்க்க முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

17 ஆம் திருத்தச் சட்டத்தின் மூலம் சுயாதீன ஆணைக்குழுக்களை அமைக்கும் சந்தர்ப்பம் காணப்பட்டதாகவும் அதனை அரசாங்கம் இரத்து செய்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(19) ஆம் பக்கம் பார்க்க



5ஆம் பக்கத்தில் சிறப்பு நேர்காணல்

# தியாகத்தின் பலாபலன்களை மக்கள் அடைய முடியும்



எமது இனத்தின் போராட்டத்தில் இழந்த இழப்புக்களை அர்த்தமுள்ள உரிமை அரசியலாக்க வேண்டும். இல்லையேல் முப்பது வருடகாலப் போராட்டத்தின் தியாகங்கள் வீணாகிப்போகும்.

எனவே மாகாணசபைத் தேர்தலில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேட்பாளர்களுக்கு வாக்களிப்பதன் ஊடாக இதுவரை செய்த தியாகத்தின் பலாபலனை மக்கள் அடையமுடியும் என பருத்தித்துறை பிரதேசசபையின் எதிர்க்கட்சித் தலைவரும், வடக்கு மாகாண சபையின் வேட்பாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

கரவெட்டி, துன்னாலை, கோயிற்கடவை சனசமூக நிலையத்தடியில் நேற்று முன்தினம் மாலை ஓய்வுபெற்ற நீதிமன்ற உத்தியோகத்தர் நவராஜசிங்கம் தலைமையில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

2004இல் நாடாளுமன்றத் தேர்தலின் போது கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லச் சமாதியில் தீபமேற்றி உறுதிமொழி எடுத்துக் கொண்டு வேட்புமனுக்களைத் தாக்கல் செய்து கொண்ட கூட்டமைப்பினர், பின்னர் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முள்ளிவாய்க்கால் அழிவுக்குக் காரணமாக இருந்த சரத்பொன்சேகாவுக்கு வாக்களிக்குமாறு வாய் கூசாமல் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இன்று மாவீரர் வணக்கத்தோடு மாகாணசபை பிரசாரக் கூட்டத்தை ஆரம்பித்ததாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. உண்மையில் 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தும் இறுதி யுத்தத்தில் மக்களையும், புலிகளையும் பாதுகாக்காமல் வெளிநாடுகளில் பதுங்கியிருந்த கூட்டமைப்பினர், தற்போது வாக்குகளைக் களவாடும் நோக்கத்தோடு மாவீரர் வணக்கம் செலுத்திக் கூட்டம் போட்டுள்ளனர்.

கூட்டமைப்பினர் மாவீரர் குடும்பத்தினருக்கோ அல்லது முன்னாள் போராளிகளுக்கோ, அவர்களது குடும்பத்தினருக்கோ ஏதாவது வாழ்வாதாரத்திற்கு உதவி செய்தார்களா? என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். ஆனால் அவர்களது ஆத்மாக்களை வைத்து வியாபாரம் செய்யும் மிகக்கேவலமான அரசியலைச் செய்ய முனைந்து விட்டனர்.

மாகாண சபைக்காக அவர்கள் உயிர்த்தியாகம் செய்யவில்லை. அவர்களது இலட்சியங்கள் கூடத் தற்போது எள்ளி நகையாடும் அளவுக்கு தமது பதவி மோகங்களுக்காக அவர்களது தியாகங்களை விற்பனை செய்யத் துணிந்து விட்டனர்.

மாகாணசபையில் எதுவும் இல்லையெனக் கூறிவந்த கூட்டமைப்பு 2008 இல் கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நிராகரித்திருந்தனர். பின்னர் கிழக்கு மாகாண சபையில் போட்டியிட்டதன் மூலம் வடக்கு - கிழக்கு பிரிப்பை அங்கீகரித்தனர்.


தற்போது வடக்கு மாகாண சபையில் போட்டியிடுவதன் மூலம் தமிழ் மக்களுக்கான எவ்வித அரசியல் தீர்வும் தம்மிடமில்லை என்பதையும் ஒப்புக்கொள்கின்றனர்.

தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்கான ஆரம்பப் புள்ளியாக மாகாண சபையை செயற்படுத்த வேண்டும் என்று டக்ளஸ் தேவானந்தா உறுதியாகக் கூறிவந்தார். அவ்வழிமுறைக்கே கூட்டமைப்பினரும் தற்போது வந்துள்ளனர்.

கிழக்கு பிரிப்பை அங்கீகரித்தனர். தற்போது வடக்கு மாகாண சபையில் போட்டியிடுவதன் மூலம் தமிழ் மக்களுக்கான எவ்வித அரசியல் தீர்வும் தம்மிடம். இல்லை என்பதையும் ஒப்புக்கொள்வதுடன், தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்கான ஆரம்பப் புள்ளியாக மாகாண சபையைச் செயற்படுத்த வேண்டும் என டக்ளஸ் தேவானந்தா உறுதியாகக் கூறிவந்தார். அவ்வழிமுறைக்கே கூட்டமைப்பினரும் தற்போது வந்துள்ளன.

எனவே எமது இனத்தின் போராட்டத்தில் இழந்த இழப்புக்களை அர்த்தமுள்ள உரிமை அரசியலாக்க வேண்டுமாயின் மாகாண சபைத் தேர்தலில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேட்பாளர்களுக்கு வாக்களிப்பதன் ஊடாகத் தியாகத்தின் பலாபலனை மக்கள் அடையமுடியும் எனத் தெரிவித்தார்.

# சுகாதாரத்திற்கு கேடான சண்டிலிப்பாய் சந்தி வடிகால்



சண்டிலிப்பாய் சந்தி, போக்குவரத்துக்கும், மக்களின் சுகாதாரத்திற்கும் மிகவும் அசௌகரியமாகக் காணப்படுவது குறித்து பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

சண்டிலிப்பாய் சந்தியின் நான்கு திசை வீதிகளும் மிகவும் ஒடுங்கி; அகலம் குறைந்து; நெருக்கடி மிகுந்து; குண்டும் குழியுமான வீதிகளாகக் காணப்படுகின்றன.

சந்தியில் வீதி ஓரமாகக் காணப்படும் வெள்ள நீர் ஓடும் வடிகான் மிகவும் அசுத்தமாகவும், புல் பூண்டுகள், குப்பை கூழங்கள் நிறைந்தும் காணப்படுகின்றது.

வீதியின் நடுவே காணப் படும் வடிகான் குழாய்க்குள் வெள்ள நீர் வழிந்தோட முடியாதபடி குப்பை கூழங்கள் நிரம்பிக்காணப்படுகின்றது.

இந்த வடிகானுக்கு அருகில் பேருந்து தரிப்பு நிலையங்கள் காணப்படுகின்றன. பேருந்திற்காகக் காத்திருக்கும் பயணிகள் குறித்த இடங்களில் நின்று பயணம் செய்வதற்கு முடியாத நிலை காணப்படுகின்றது.

வடிகால் பகுதியில் சுகாதாரம் அற்றிருப்பது குறித்துச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து சீரமைத்து பொதுமக்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனக் கோரப்படுகின்றது. (66)

# வடமராட்சியில் விபத்து; தந்தை மரணம்; மகன் காயம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி உடுப்பிட்டிப் பகுதியில் நேற்று முற்பகல் இடம்பெற்ற வீதி விபத்தில் தந்தை பலியானார். மகன் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.


நல்லூர் கோவிலுக்கு நேற்று முற்பகல் மோட்டார் சைக்கிளில் பயணித்த குறித்த தந்தையும், மகனும் உடுப்பிட்டிப் பகுதியில் பயணிகள் பஸ்வண்டி ஒன்றுடன் விபத்திற்குள்ளாகியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த தந்தை அந்த இடத்திலேயே உயிரிழந்ததாகவும், அவரது எட்டு வயது மதிக்கத்தக்க மகன் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

இந்நிலையில், படுகாயமடைந்த சிறுவன் தம்மை அடையாளப் படுத்தும் நிலையில் இல்லாததினால் நேற்று மாலை வரை உயிரிழந்தவர் மற்றும் காயமடைந்த சிறுவனின் பெயர் முகவரி தெரியவரவில்லை. (பா, 18)

# சிங்கர் பினான்ஸ் நிறுவனத்தின் கிளை யாழில் திறப்பு

(யாழ்ப்பாணம்)



சிங்கர் பினான்ஸ் நிறுவனத்தின் இருபதாவது கிளை நேற்று யாழ். காங்கேசன்துறை வீதியில் யாழ். பிரதம தபாலகத்துக்கு அருகாமையில் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் 11.30 மணிக்கு நடைபெற்ற இந்த திறப்பு விழா நிகழ்வில் சிங்கர் நிறுனத்தின் நிறைவேற்று அதிகாரி அசோகா பீரிஸ் சிறப்பு விருந்தினரா கக் கலந்து கொண்டு நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில், சிங்கர் நிறுவனத்தின் நிதிசம்பந்தமான நிறைவேற்று அதிகாரி சாந்த விஜயவீரவும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

சிங்கர் பினான்ஸ் நிறுவனத்தின் கிளை திறப்பு விழா நிகழ்வையடுத்து அங்கு பால் காய்ச்சும் நிகழ்வு நடைபெற்றது. தொடர்ந்து நிறுவனத்தின் வாடிக்கையாளர்களுக்கான சேவையை நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி அசோகா பீரிஸ் ஆரம்பித்து வைத்ததுடன், வைப்புச் செய்த வாடிக்கையாளர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்களையும், சிறப்புப் பரிசில்களையும் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் நிறுவனத்தின் ஏனைய பிரதிநிதிகளும் பங்கேற்றுக் கொண்டனர். இக்கிளை நிறுவனத்தின் முகாமையாளராக சி.தனுசன் நியமிக்கப்பட்டிருக்கின்றார். (பா)

# கூட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையால் கடந்த 25 ஆம் திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டு பிற்போடப்பட்ட 2013 ஆம் ஆண்டுக்கான ஏழாவது (யூலை மாத) மாதாந்தப் பொதுக்கூட்டம் நாளை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறும் எனவும்,

2013 ஆம் ஆண்டுக்கான எட்டாவது (ஆகஸ்ட் மாத) மாதாந்தப் பொதுக்கூட்டம் நாளை பிற்பகல் 2.00 மணிக்கு மாநாட்டு மண்டபத்தில் மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறும் எனவும் சபையின் செயலாளர் சி.தா.தர்மரட்ணம் அறிவித்துள்ளார்.


சிறுவிளம்பரம்

**கஜன் பிளாஸ்ரிக் வேக்ஸ்**

மோட்டார் வாகன பிளாஸ்ரிக்ஸ் திருத்த வேலைகளுக்கு : 160, கண்டி வீதி (மாம்பழச்சந்தி பஸ் நிலையம் முன் ஒழுங்கையில்) தொ.பே : 0771607752 (R/254)



## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 985

திகதி 26.08.2013

வெற்றி எண்கள்: 02 15 36 41 — ஆங்கில எழுத்து: S

ஜக்பொட் பரிசு ரூ. 10,912,620/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 10,912,620/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 15 | 50,000/= | ரூ. 7,50,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 267 | 1,000/= | ரூ. 2,67,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 471 | 1,000/= | ரூ. 4,71,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11872 | 60/= | ரூ. 7,12,320/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6122 | 40/= | ரூ. 2,44,880/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 155666 | 20/= | ரூ. 31,13,320/= |
| ஆங்கில எழுத்து | 22595 | 20/= | ரூ. 4,51,900/= |
| | | மொத்தம் ரூ. | 70,10,420/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கொழும்பு | 604734377-7-17 |
| கண்டி | 604721620-0-40 |
| கொழும்பு | 604723662-3-33 |
| ஹம்பாந்தொட்டை | 604722300-9-39 |
| கம்பஹா | 604723316-8-38 |
| கம்பஹா | 604729829-9-49 |
| பொலன்னறுவை | 604721515-8-18 |
| இரத்தினபுரி | 604724368-3-03 |

வெல்லப்பட்ட மொத்த பரீசுத் தொகை ரூ. 74,10,420/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா 11,217,080/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2013.08.29 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை (C/3035)

356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02. தொலைபேசி: 2 333546/7

# சித்தங்கேணி சந்திப்பகுதியில் பஸ்தரிப்பிடம் அமைக்குமாறு மக்கள் கோரிக்கை

(சுன்னாகம்)

சித்தங்கேணிச் சந்தியில் பஸ்தரிப்பிடம் இல்லாமையால் பேருந்துக்காக காத்திருக்கும் பயணிகள் பலவேறு சிரமங்களை நாளாந்தம் எதிர்கொள்வதாக கவலை தெரிவிக்கின்றனர்.

சித்தங்கேணி சந்தியிலிருந்து காரைநகர் செல்வதற்காகவும் மற்றும் பண்டத்தரிப்பு அராலி, சங்கானை சண்டிலிப்பாய் செல்வதற்கும் பயணிகள் சந்திக்கு வரும் நிலையில் இச்சந்தியின் நான்கு பகுதிகளிலும் பஸ்தரிப்பிடம் எதுவும் இல்லாமல் மரநிழலில் கீழும் கடைகளுக்கு முன்பாகவும் காத்து நிற்பதாக தெரிவிக்கின்றனர்.

பேருந்துக்காக வெயிலில் காத்திருக்கும் நிலையில் நிழலை தேடி அலைவதாகவும் நிழலான இடங்களில் நின்று பேருந்தை தவறவிட்ட சந்தர்ப்பங்களும் ஏற்பட்டுள்ளதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இச்சந்திப்பகுதி பேருந்து பயணங்களை மேற்கொள்ளும் பயணிகளுக்கு முக்கிய இடமாக காணப்படுகின்ற நிலையில் நாளாந்தம் பாடசாலை மாணவர்கள், நோயாளர்கள், வர்த்தகர்கள் எனப் பலர் பிரயாணத்தை மேற்கொள்கின்றனர்.

எனவே, இவ்வாறு பயணத்தை மேற்கொள்வோரின் நன்மை கருதி இச்சந்திப்பகுதியில் பஸ்தரிப்பிடம் அமைக்க உரியவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (66)

## கிருஷ்ண ஜெயந்தி விழா

(வடமராட்சி)

வடமராட்சி துன்னாலை அருள் மிகு ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் இன்று புதன்கிழமை கிருஷ்ண ஜெயந்தி விழா இடம் பெறவுள்ளது.

இன்று மாலை 7 மணிக்கு நடைபெறும் விசேட பூசையை தொடர்ந்து விசேட சொற்பொழிவுடன் கலை நிகழ்வுகள் என்பன இடம் பெறும்.

நாளை வியாழக்கிழமை அதிகாலை வசந்தமண்டப பூசை இடம் பெற்று சக்கரத்தாழ்வார் வீதியுலா வருவதுடன் ஆலய வடக்கு வீதியில் உறியடி உற்சவம் இடம்பெறவுள்ளது.

## சுகாதாரமற்ற மலசலகூடம் நெருக்கடியில் நோயாளர்கள்

(அச்சுவேலி)

அச்சுவேலி வைத்தியசாலையின் ஆண்கள் விடுதியில் உள்ள மலசலகூடமானது சுகாதாரமற்றுக் காணபபடுவதாக நோயாளிகள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது.


இதனால் விடுதியில் தங்கி நின்று சிகிச்சையை மேற்கொள்வோர் பல்வேறு இடையூறுகளைச் சந்திப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

மலசல கூடத்தைப் பயன்படுத்தும் சிலரின் அசண்டையீனம் காரணமாகவே இவை இவ்வாறு துப்புரவற்றுக் காணப்படுவதாக பலரும் தெரிவிக்கின்றனர்.

மலசல கூடத்தைப் பயன்படுத்துவோர் உரிய முறையில் பயன்படுத்தினால் இவ்வாறான நிலை ஏற்படாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் சுத்திகரிப்பு பணிகளும் சீரான முறையில் மேற்கொள்ளப்படல் வேண்டும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (85)

# முறிந்துள்ள மின்கம்பத்தூண் அச்சத்தில் செல்லும் மக்கள்



(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்திற்கு முன்பாக உள்ள வீதியில் மின்சாரசபைக்குரிய மின்கம்பம் ஒன்று முறிந்த நிலையில் காணப்படுவதால் இப்பகுதியூடாக பயாணத்தை மேற்கொள்ளும் மக்கள் அச்சத்துடன் செல்லவேண்டியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வோர் செல்லும் பிரதான பாதையாக காணப்படும் இப்பகுதியில் குறித்த மின்கம்பம் முறிந்துள்ள நிலையில் எப்போது விழும் எனத் தெரியாது அபாய கட்டத்தில மின்கம்பத்தூண் காணப்படுகிறது.

இதைவிட இப்பகுதியால் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் செல்கின்ற நிலையில் தற்போது இதனூடாக செல்வதற்கு அவர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

எனவே ஆபத்தான நிலையில் காணப்படும் மின்கம்பத்தை அகற்ற மின்சார சபையினர் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் இப்பகுதி மககள் கோரிக்கை விடுக்கின்றனர். (18)

## மாணவர்களுக்கான விசேட அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் நடைபெறவிருப்பதால் யா.நெல்லயடி மத்திய மகாவித்தியாலயம் மூன்றாம் தவ ணைக்காக எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை கல்விச் செயற்பாடுகளுக்காக மீண்டும் திறக்கப்படும்.

எனினும் தரம் 10 மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமையிலிருந்து நடைபெறும் என வித்தியாலய அதிபர் எஸ். சேதுராஜா அறிவித்துள்ளார்.

## 10 ரூபா தாளுக்கு தட்டுப்பாடு

(வரணி)



யாழ்.குடாநாட்டில் வர்த்தக நிலையங்கள், சந்தைகளில் பத்து ரூபா தாளிற்கு தட்டுப்பாடு நிலவி வருகிறது.

ஏற்கனவே புழக்கத்தில் இருந்து பாவனையில் உள்ள தாள்களும் மிக மோசமாக பழுதடைந்து வருகின்றன.

ஏற்கனவே யாழ்.குடாவில் சில்லறை நாணயங்களுக்கும் தட்டுப்பாடு நிலவும் நிலையில் பத்துரூபா தாள் இன்னும் சில நாட்களில் முற்றாக காணமுடியாத நிலை ஏற்படுமா என வர்த்தகர்கள் பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (150)

## வரதராஜப் பெருமாளுக்கு இன்று இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வரலாற்று சிறப்புமிக்க பொன்னாலைவரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த இரதோற்சவம் இன்று நடைபெறவுள்ளது.

காலை 5.30 மணிக்கு 108 கலச அபிசேகம், விசேட பூசை இடம் பெற்று கொடித்தம்ப பூசையை தொடர்ந்து முற்பகல் 10.30 மணிக்கு வசந்தமண்டப பூசை, தீபாரதனை என்பன இடம்பெறும்.

ஸ்ரீதேவி பூமாதேவிசமேத வரதராஜப் பெருமாள் முற்பகல் 11.30 மணிக்கு தேரில் ஆரோகணித்து அடியார்களுக்கு அருள் வழங்குவார்.

நாளை வியாழக்கிழமை திருவடி நிலைக்கடற்கரையில் தீர்த்தோற்சவம் இடம்பெறும்.

## காண்பியல்களுடனான உரையரங்கு


(யாழ்ப்பாணம்)

கலைவட்டம் மற்றும் நுண்கலைத்துறையின் ஆதரவில் உரையரங்கு இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக புதிய கலைப்பீடக் கட்டடத் தொகுதியில் இடம்பெறவுள்ளது.

இலங்கையின் தலையாய காண்பியல் மற்றும் ஆற்றுகைக்கலை பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவுரையாளரான சந்திரகுப்த தேனுராவின் கலையென்பது எதிர்ப்பு என்னும் தலைப்பிலான காண்பியல்களுடன் கூடியதாக இவ் உரையரங்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஓவியங்கள், பாடசாலையில் சித்திரம் கற்கும் மாணவர்கள்,கலைஆர்வலர்கள் அனைவரும் கலந்துகொண்டு பயன்பெறமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## நல்லைக் கந்தனுக்கு இன்று பதினேழாம் திருவிழா



### நல்வாழ்வு தரும் முருகனே!

நல்லூரில் நாயகனே ஞான வடிவேலவனே முருகனே
பல்லோரும் பணிந்தேத்தும் பாலசுப்பிரமணியனே ஆறுமுகனே
எல்லோரும் உன்னையே ஏத்தித்துதித்து நிற்கின்றோம்
பொல்லாத வினைபோக்கி நல்வாழ்வு தருவாய் முருகாசரணம்!

கலாபூஷணம்
இராசையா ஸ்ரீதரன்

## நல்லூர் ஆலய சூழலில் இன்று...

நல்லூர் கந்தசுவாமி ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசாரத் திணைக்களத்தால் தினமும் மாலை 3 மணியளவில் ஆன்மீக நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. நல்லூர் ஸ்ரீல்ஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் நடைபெறும். இதில் இன்று பகவத்கீதை காட்டும் வாழ்வியல் என்னும் விடயம் பற்றி பு.சந்தரவேல் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

தொடர்ந்து மல்லாகம் பழம்பதி, நீர்வேலி ஸ்ரீ கணேசா, அச்செழு மதுரை மீனாட்சி அம்மன், வல்வெட்டித்துறை வல்லை ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆகிய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பளை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடாத்தும் தெய்வீக இசையரங்கம் தினமும் மாலை 6.45 மணிக்கு நல்லூர் துர்க்காமணிமண்டபத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் இன்று திருமதி யசோதா ஸ்ரீகுமரன், திருமதி கவிதா தில்லைராசா ஆகியோரின் பாட்டுக் கச்சேரி, பக்கவாத்திய கலைஞர்கள் சகிதம் இடம் பெறவுள்ளது.

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் ப்ரம்மகான சபா நடாத்தும் தெய்வீக இசைச்சங்கம நிகழ்வு தினமும் மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீன புதிய மண்டபத்தில் இடம்பெற்று வருகிறது.

இதில் இன்று நல்லூர் கலாவித்தகர் திருமதி குமுதா உமாகாந்தனின் வீணை இசைக்கச்சேரி இடம்பெறவுள்ளது.

சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகத்தினால் நடராசா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் மாலை 6.30 மணிக்கு தெய்வீகப் பேருரை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதில் இன்று ஆலயமும் ஆன்மிகமும் என்னும் விடயம் பற்றி சிவத்திரு எஸ்.கே.என்.தவராசா சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (42,06)

மகோற்சவம் சிறப்புற வாழ்த்துவோர்



ஒழுக்கமும், தன்னம்பிக்கையுடன் கூடிய் ஆற்றலும் மதிப்புள்ள முதலீடுகள்.
-லிட்டீன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## கூசாமல் ஏமாற்றும் கூட்டமைப்பு!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதனது பத்திரிகைகளும் வெளியில் எங்கேனுமிருந்து மந்திர மாங்காய்கள் வந்து விழும் என்ற கனவை ஊட்டியபடி தமிழ் மக்களை மேலும் மேலும் புதைகுழிப் பாதையிலேயே அழைத்துச் செல்கின்றனர். காலத்துக்குக் காலம் ஏதாவது ஒரு ஏமாற்றைக் கண்டுபிடித்து மக்களுக்குப் போலியான ஒரு நம்பிக்கையை வழங்குகிறார்கள்.

மக்களுக்கு யதார்த்த நிலைமைகளை உணர்த்தி விழிப்பூட்ட வேண்டிய ஊடகங்களும் இதற்குத் துணைபோவதுதான் இலங்கைத் தமிழ்ச் சமூகத்தின் மகா அவலம். வருடா வருடம் மார்ச் மாதத்தில் ஜெனீவா மாநாடு வரும்போது, மூன்று நான்கு மாதங்களுக்கு அந்தக் குதிரையிலேயே தமிழ் மக்களின் நம்பிக்கைகள் அனைத்தையும் அள்ளியெடுத்துச் சென்று கட்டிவிட்டு, இதோ தமிழ் மக்களுக்கான தீர்வுக் கோட்டை முந்தி ஓடிவந்து தொடப்போகிறது பார் குதிரை என்று பரபரப்போடு பார்த்திருக்க வைக்கிறார்கள்.

மார்ச் மாத முடிவில், இவர்கள் விசிலடித்துக் கத்திக் காண்பித்துக் கொண்டிருந்தது மண்குதிரையைத்தான் என்பது தெரிந்துவிடுகிறது. அதைப் பற்றி அவர்கள் அலட்டிக் கொள்வதில்லை. மக்களை அப்படியே கண்களைக் கட்டியபடி செப்டெம்பர் நியூயோர்க் திருவிழாவுக்கு அழைத்துச் சென்றுவிடுவார்கள்.

ஐ.நா. மாநாட்டுத் திருவிழாவிலும் "இலங்கை அரசு கவிழ்கிறது; தமிழர்க்குத் தீர்வு வந்து சேர்கிறது" என்ற பஜனையை ஓங்கி ஆரம்பித்து, மக்களை ஒரு மூன்று மாதங்களுக்கு விறுவிறுப்பூட்டிப் பின்னர் எல்லாம் "புஸ்ஸ்ஸ்" என்று ஆக, சிறிது காலம் காணாமல் போய்விடுகிறார்கள். பின்னர் யாராவது ஒரு வெளிநாட்டு இராஜதந்திரி நாட்டுக்கு வரும்போது ஓய்வை முடித்துக்கொண்டு மீண்டும் உசாரடைகிறார்கள்.

அவரது ஒவ்வொரு வாக்கியத்தையும் வேதாந்தமாக விரித்துப் பொருளுரைத்து, "தமிழ் மக்களுக்கு நல்லகாலம் வருகுது... நல்லகாலம் வருகுது" என்று குடுகுடுப்பை அடிக்கிறார்கள். தமிழ் மக்கள் அதையும் நம்பிச் சிலகாலம் காத்திருக்க வைக்கப்படுகிறார்கள். அதே மாதிரியில்தான் இப்போது ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் வருகையையும் ஏதோ ரட்சகரின் வருகையைப் போல 'பில்டப்' கொடுக்கிறார்கள்.

"தகவல்களைத் திரட்டுவதில் நவநீதம்பிள்ளை மும்முரம்" என்று ஒரு பத்திரிகை தலைப்புச் செய்தி போடுகிறது. அந்தச் செய்தியின் பின்னால் மறைந்திருக்கும் தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற நோக்கம் அப்பட்டமானது. அவர் ஐ.நா. திரும்பியதும் இலங்கை அரசு தண்டிக்கப்படப் போகிறது; அதற்கே நவநீதம்பிள்ளை தகவல்கள் சேகரிக்கிறார் என்று மக்களுக்கு ஒரு நம்பிக்கையைக் கொடுப்பதே நோக்கம்.

உண்மை என்னவென்றால் நவநீதம்பிள்ளை அவர்கள் ஒன்றும் இலங்கை அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய நிறுவனத்தின் பிரதிநிதி அல்ல. ஐ.நா. மனித உரிமை அமைப்பானது யார் யாருடைய நெருக்குவாரங்களின் பேரில் தீர்மானங்களை உருவாக்குகிறது; யாரெல்லாம் அதை நீர்த்துப்போக செய்கிறார்கள்; ஒரு சின்ன விசாரணை என்றாலே எப்படி சுற்றிவளைத்து மூக்கைத் தொட முயல்கிறார்கள் என்பதையெல்லாம் கடந்த இரண்டு வருடங்களாகப் பார்த்துக் கொண்டுதானிருக்கிறோம்.

இதெல்லாம் தெரிந்த பிறகும், தமிழ் மக்களுக்குத் தீர்வைத் தருவதற்காக ஒரு சர்வதேசப் பேருருவின் வருகை நிகழ்ந்துள்ளது; இதோ நாங்கள் சொன்ன சர்வதேசப் போராட்டம் ஆரம்பமாகிவிட்டது என மக்கள் தலையில் மிளகாய் அரைப்பது எவ்வளவு பெரிய வஞ்சகம்!

– ஆசிரியர்

# அனுமதி பெற்ற முகவர் மூலமே "ஹஜ்" செல்ல வேண்டுகோள்

"ஹஜ்" யாத்திரை செல்வதற்காக முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களத்தின் அனுமதிக் கடிதம் உள்ள முகவர்களுடனேயே ஹஜ்ஜுக்குச் செல்லுங்கள் என்றும், திணைக்களத்தின் அனுமதிக் கடிதம் கிடைத்தவர்கள் தவிர்ந்த வேறு எவரும் ஹஜ் முகவர் நிலையங்களில் பணம் செலுத்தி ஏமாற வேண்டாம் என்றும் ஹஜ் குழுவின் இணைத் தலைவரும் நகர அபிவிருத்தி விவகார சிரேஷ்ட அமைச்சருமான ஏ.எச்.எம். பௌசி தெரிவித்தார்.

இம்முறை புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்கு 2,240 பேருக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 7,566 பேர் ஹஜ் கடமையை நிறைவேற்றச் செல்வதற்காக முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களத்தில் பதிவு செய்திருந்தனர்.

நேர்முகப் பரீட்சையின் பின்னர் ஹஜ் கடமை நிறைவேற்றத் தகுதி பெற்றவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. திணைக்களத்தின் அனுமதிக் கடிதம் அனுப்பப்பட்டவர்களுக்கு மட்டுமே இம்முறை ஹஜ் கடமையை நிறைவேற்ற அனுமதி வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். முகவர் நிலையங்களில் தம்மை பதிவு செய்தவர்களும் ஹஜ்ஜுக்கு அழைத்துச் செல்லப்பட உள்ளதாக கூறி சிலர் பணம் பெறுவதாக தகவல் கிடைத்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த விடயத்தில் கலாசாரத் திணைக்களமும் சவுதி அரேபிய அரசும் உறுதியாக உள்ளதாகவும் யாரிடமும் பணம் செலுத்தி ஏமாற வேண்டாம் எனவும் அவர் குறிப்பிட்டார் .

# லக்ஷ்மன் கதிர்காமருக்கு உரித்தான காணி சுவீகரிப்பு வழக்கு ஒத்திவைப்பு

காணி சுவீகரிப்புக்கு எதிராக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் மகன் தாக்கல் செய்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டவேளை அவ்வழக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 7 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் பிரதிவாதிகளாக காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக்க பண்டார தென்னகோன் மற்றும் யாழ். மாவட்ட காணி சுவீகரிப்பு அதிகாரி ஏ.சிவசாமி உள்ளிட்ட மூவர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

குறித்த ரீட் மனு கடந்த 05 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது பிரதிவாதிகளை விளக்கமளிக்குமாறு கோரி கட்டளை அனுப்புமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

யாழ்ப்பாணம் வலி.வடக்கு கீரிமலைப் பகுதியில் உள்ள தமது குடும்பச் சொத்தான காணி சுவீகரிக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் மகன் மேன்முறையீட்டு நீதிமன்றில் கடந்தமாத இறுதியில் மனுத் தாக்கல் செய்தார். 1968 ஆம் ஆண்டு யாழ்.மாவட்ட நீதிமன்றின் ஊடாக இக்காணி பிரிக்கப்பட்டு லக்ஷ்மன் கதிர்காமருக்கு உடமையாக்கப்பட்டிருந்தது. லக்ஸ்மன் கதிர்காமர் இறந்துவிட்ட நிலையில் தேசவழமைச் சட்டத்தின் அடிப்படையில் இக்காணி அவரது மகனான சிறிராகவனுக்கு உரித்துடையதாகியுள்ளது. காணி சுவீகரிப்பு சட்ட மூலத்தினூடாக இந்தக் காணியில் எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்வதைத் தடுப்பதற்கான இடைக்கால நிவாரணத்தைப் பெற்றுத்தருமாறும் தனது மனுவில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள தனது காணிக்கு இறுதியாக இராணுவ அனுமதியுடன் கடந்த 2011ஆம் ஆண்டு தான் சென்றதாகவும் காணிக்கு அருகில் பெருமெடுப்பில் கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்படுவதைக் கண்டு, தான் அதிர்ச்சியடைந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். உயர் பாதுகாப்பு வலய எல்லையை பின் நகர்த்துவதன் ஊடாக தனது காணியை தான் முழுமையாகப் பயன்படுத்த முடியும் எனவும் தனது மனுவில் அவர் குறிப்பிட்டுள்ளார். தேசவழமைச் சட்டத்தின் படி எனக்கு உரித்துடைய எனது முன்னோர்களின் காணியை எனது அனுமதியின்றி சுவீகரிப்பதானது எதேச்சாதிகாரமானது. அநீதியானது எனவும் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இலங்கை -பெலாரஸ் இடையே 7 ஒப்பந்தங்கள் கைச்சாத்து

இலங்கைக்கும் பெலாரஸுக்குமிடையில் இருதரப்பு உடன்படிக்கைகள் ஏழு கைச்சாத்திடப்பட்டுள்ளன. பெலாரஸ் நாட்டுக்கான மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் அந்நாட்டு ஜனாதிபதி அலெக்சாண்டர் லுகன்ஷன்கோ ஆகியோர் முன்னிலையில் இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பான உடன்படிக்கை, இராஜதந்திர மற்றும் உத்தியோகபூர்வ விமான பயணச் சீட்டுடையவர்களை விசாக்களிலிருந்து விடுவித்தல், குற்றவியல் தொடர்பான விடயங்களின்போது பரஸ்பர சட்ட ஒத்துழைப்பு தொடர்பான சாசனம், சட்டம் தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை, இரு நாடுகளுக்குமிடையிலான இரட்டை வரிவிதிப்பை தடுக்கும் உடன்படிக்கை, சுற்றுலாத்துறையின் ஒத்துழைப்பு தொடர்பான உடன்படிக்கை மற்றும் இராணுவத் துறையில் தொழில்நுட்ப ஒத்துழைப்பு தொடர்பான உடன்படிக்கைகளே கைச்சாத்திடப்பட்டன.

இதேவேளை, பல துறைகளில் இருதரப்பு தொடர்புகளை வளர்த்துக்கொள்வதை இலங்கை, பெலாரஸ் தலைவர்கள் உறுதிப்படுத்தினர். பொருளாதாரம், வர்த்தகம், முதலீடு, கல்வி, தொழில்நுட்பம் உள்ளிட்ட பல துறைகளில ஒத்துழைப்பை மேம்படுத்திக்கொள்வதை இலங்கை, பெலாரஸ் தலைவர்கள் உறுதிப்படுத்தினர்.

இரு நாட்டு ஜனாதிபதிகள் தலைமையில் நடைபெற்ற இந்த பேச்சுவார்த்தை ஆரம்பமாவதற்கு முன்னர் பெலாரஸ் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லவளாகத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இராணுவ அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்டது.

அதன் பின்னர் இரு அரச தலைவர்களுக்கிடையில் நேரடி பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின. பெலாரஸ் ஜனாதிபதி, இலங்கையின் யதார்த்தம் பற்றி மிகுந்த புரிந்துணர்வுடன் இருப்பது பற்றி ஜனாதிபதி ராஜபக்ஷ தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். எந்தவொரு நாட்டுக்கும் சமாதானம் இல்லாமல் அபிவிருத்தியை அல்லது அபிவிருத்தி இல்லாமல் சமாதானத்தைப் பேண முடியாது என்பதை அவர சுட்டிக்காட்டினார். பயங்கரவாதத்தை முடிவுறுத்தியதன் பின்னர் இலங்கையால் துரித அபிவிருத்தியை அடையமுடிந்தது என அவர் குறிப்பிட்டார்.

கடந்த ஆண்டுகளில் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி வேகம் 7 - 8 சதவீதங்களுக்கு இடையிலான பெறுமதியைக் கொண்டிருந்தது. அத்துடன் மோதல் இடம்பெற்ற பிரதேசங்களில் பொருளாதார வளர்ச்சி வேகம் 22 சதவீதமாக இருந்தது எனவும் தெரிவித்தார்.

கடந்த சில வருடங்களில் பெலாரஸ் அடைந்துள்ள சமூக பொருளாதார முன்னேற்றத்தைப் பாராட்டிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, நமது நாடுகள் இரண்டும் கடந்த காலத்தில் சமமான கருத்துக்களுடன் செயற்பட்டதைப் போன்று எதிர்காலத்திலும் நண்பர்களாக இருக்க வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டினார். பெலாரஸும் இலங்கையும் பல விடயங்களில் சமமான அரசுகளாக இருக்கின்றன எனக் குறிப்பிட்ட பெலாரஸ் ஜனாதிபதி, பயங்கரவாதத்தை தோல்வியுறச் செய்ததன் பின்னர் இலங்கை பெற்றுள்ள முன்னேற்றம் பாராட்டுக்குரியது.

பெலாரஸ் அரசு சமூக நலனை முதன்மையாகக் கொண்ட கொள்கைகளைப் பின்பற்றுகின்றது எனத் தெரிவித்த பெலாரஸ் ஜனாதிபதி, ஏனைய நாடுகளிலும் அத்தகைய செயல்முறைகள் உறுதிப்படுத்தப்படவேண்டும் என்பது தனது கருத்து எனவும் தெரிவித்தார். அந்த அடிப்படையில் இலங்கையுடன் தொடர்ந்து பொருளாதார, வர்த்தக, சமூக தொடர்புகளை வளர்த்துக் கொளவதற்கு தமது நாடு அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றது எனவும் தெரிவித்தார். இலங்கையுடன் ஒருங்கிணைந்த வியாபாரங்களை ஆரம்பிப்பதற்கு நமது நாடு விரும்புகிறது எனத் தெரிவித்த பெலாரஸ் ஜனாதிபதி, உழவு இயந்திரம், மோட்டார் வாகனங்கள் மற்றும் கைத்தொழில், தொழில்நுட்ப உபகரணங்களுக்கு இலங்கைக்கு உதவுவதற்கு தாம் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மாகாணசபையின் செயற்திட்டங்களில் கீழ்மட்ட மக்களது அபிலாசைகள் பிரதிபலிக்கப்பட வேண்டும்

## ஈ.பி.டி.பி சார்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளராகப் போட்டியிடும் சுந்தரம் டிவகலாலா

நேர்கண்டவர் : ஆர். இராஜகுமார்



> **மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி அவர்களது தேவைகளை நிறைவு செய்து அரசியல் சமூக பொருளாதார மேம்பாடுகளை ஏற்படுத்த வேண்டுமானால் கடந்தகால அணுகு முறைகள் பொருத்த மற்றவை என்பதை தெளிவாக நாம் புரிந்து கொள்ளலாம். அரசியல் என்பது அறிவியல் சார்ந்த விடயமாகும். தேர்தல்கள் அரசியல் அதிகாரத்தை பெற்றுக்கொள்வதற்கான ஒரு கருவி. ஆகவே வாக்காளர்கள் இந்த மாகாணசபைத் தேர்தலை ஒரு அறிவியல் நிலையிலிருந்து பார்த்து சிந்தித்து வாக்களிக்க வேண்டும்.**

**கேள்வி:-** சிவில் நிர்வாக சேனீவயில் முதிர்ச்சியடைந்த உங்களுக்கு அரசியலில் ஈடுபடும் எண்ணம் எப்படி உண்டானது? உங்கள் பின்னணி பற்றியும் சொல்லுங்கள்.

**பதில்:** நான் வடமராட்சியைச் சேர்ந்த வல்வெட்டிக் கிராமத்தில் பிறந்தேன். எனது ஆரம்பக்கல்வியினை யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையிலும், வல்வெட்டி அமெரிக்கன் மிசன் பாடசாலையிலும் பின்னர் உயர்கல்வியினை யாழ். இந்துக் கல்லூரியிலும் பெற்றுக்கொண்டேன். 1963இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து, 1967 ஆம் ஆண்டு பொருளியல் பட்டதாரியாக வெளியேறினேன். யாழ். இந்துக் கல்லூரியில் கல்வி கற்ற காலத்தில் அமரர் தோழன் கார்த்திகேசு அவர்களது சித்தாந்தத்தினால் கவரப்பட்டு இன்று வரை அதைக் கடைப்பிடித்து வருகின்றேன். எனது பெருமதிப்புக்குரிய ஆசான் கார்த்திகேசு அவர்கள் நான் இலங்கை நிர்வாக சேவையில் 1970ஆம் ஆண்டு சேர்ந்த போது தனது மகிழ்ச்சியைத் தெரிவித்து ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். அக்கடிதத்தில் "இன்றில் இருந்து நீ எதிர்காலத்தில் வகிக்கப்போகும் பதவிகள் ஊடாக சமூகத்தில் பல்வகையான பாதிப்புக்கு உள்ளாகி வர்க்க ரீதியாக கீழ்மட்டத்தில் வாழும் மக்களை உயர்மட்டத்திற்கு கொண்டு வருவதற்கு செயற்படவேண்டும். உரிமைகள் இழந்து வாழும் மக்களது உரிமைக்காக குரல் கொடுக்க வேண்டும்" என கூறியிருந்தார். இன்று வரை எனது இலக்கு அதுதான். கார்த்திகேசனது சிந்தனைக்கு உட்பட்ட நான் பின்னர் அமரர் தோழன் சண்முகதாஸனின் அரசியல் வாழ்வைக் கடைப்பிடித்து செயற்பட்டேன்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மாணவனாக இருந்த காலத்தில் இடதுசாரிக் கொள்கையில் இருந்த பேராசிரியர்களான அமரர் க.கைலாசபதி, அமரர் நா.பாலகிருஸ்ணன், அமரர் எச்.ஏ.டீ.குணசேகர ஆகியோரோடு நெருங்கி உறவாடி எனது சமூக நலப் பார்வையை வலுப்படுத்திக் கொண்டேன். அதேவேளை பேராசிரியர்களான சு.வித்தியானந்தன், சதாசிவம், வி.செல்வநாயகம், கனம் ஜெயராஜசிங்கம் போன்றோரிடம் இருந்து தமிழ் உணர்வினை தமிழர்களின் இருப்பையும் வாழ்வியல் மரபினையும் பண்பாட்டு சிறப்பினையும் ஆழமாக கற்றுத் தெளிந்தேன். பேராசிரியர் அமரர் ராஜரட்ணம் போன்றோரிடம் இலங்கையின் பொருளாதார வரலாற்றையும் அதன் ஏற்றத்தாழ்வையும் கற்றறிந்து கொண்டேன்.

மக்கள் நேசம் கொண்டவராக மக்கள் நலம் கொண்டவராக செயற்பட்ட எம் போன்ற அதிகாரிகளுக்கு, அரச அதிகாரத்தில் உள்ளோரின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய அணுகுமுறைகளை கடைப்பிடிக்க வேண்டியது மிக அவசியமாகும். பிரதேச மட்ட சமூக நலத் திட்டங்கள் தேசிய மட்ட செயற்திட்டங்களுக்கு முரணாக அமையக்கூடாது என்பதை உள்வாங்கிக் கொள்ளும் அதேவேளையில், அத்தகைய கொள்கைகள் பிரதேச மட்ட நலனுக்கு ஒவ்வாதவையாக அமையும் சந்தர்ப்பங்களில் அத்தகைய கொள்கைகளை பிரயோகிக்கின்ற போது ஏற்படக்கூடிய அனுகூலமற்ற விளைவுகள் தேசத்தின் நலனை எவ்வாறு பாதிக்கும் என்பதை எடுத்துக் கூறவேண்டியது அவசியம். இதனை நான் வகித்த பதவி நிலைகளில் இருந்து செயற்படுத்தி இருக்கின்றேன். உதாரணம் ஒன்று கூறுவதானால், நான் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராக இருந்த போது, பாடசாலைகளின் பழையமாணவர்களின் சங்கங்களின் தலைவராக கல்லூரி அதிபரே இருக்க வேண்டும் என்ற கொழும்பு கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்தினை வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சில் ஏற்க முடியாது என, வடக்கு கிழக்கு உதவிக் கல்விப்பணிப்பாளர்களுக்கு கல்விக்கட்டமைப்புக்கு ஏற்றவகையில் தற்துணிவோடு நியமித்தமையையும் கூறலாம். இதில் நான் முக்கியமாகக் கூறவிரும்புவது என்னவென்றால் எனது இச் செயற்பாடுகளை மத்திய கல்வி அமைச்சரும், அமைச்சும் பூரணமாக ஏற்றுக்கொண்டனர்.

எனது இந்தப் பின்னணி எனது அரசியல் பிரவேசத்திற்கு காரணமாக இருந்தது. நான் அரசியலுக்கு வந்தது ஒரு தற்செயலான விடயமாக இருந்தாலும் எனது மக்கள் நலன் சேவையை தொடர்ந்து செய்வதற்கு இது பொருத்தமானது என ஏற்றுக் கொண்டேன். 70 வயது வரை நேரடி அரசியலில் ஈடுபடாது நான் வகித்த அரச பதவிகள் ஊடாகவும் ஓய்வின் பின் தமிழ் பேசும் மக்களது நலன் கொண்டு என்போன்ற ஒரு சிலரினால் ஆரம்பிக்கப்பட்ட "ஆறுதல்" நிறுவனத்தின் செயற்பாடுகளை மேற்கொண்டு எடுத்துச்செல்ல அரசியல் அதிகாரம் தேவை என உணருகின்றேன். பொருத்தமான அரசியல் அதிகாரம் இன்றி சமூக நலன் திட்டங்களை உரிய முறையில் செயல்படுத்துவது கடினம் என்பது யாவரும் அறிந்ததே. அரசியலை அறிவுசார்ந்த விடயமாகவே நான் பார்க்கிறேன். எமது மக்களின் தேவைகளுக்கு ஏற்ப அரசியலை அறிவுநிலை கொண்டு நோக்க வேண்டியதும் நேர்மையாக செயற்படவேண்டியதும் அவசியம் என நான் கருதுகின்றேன்.

**கேள்வி:-** வடக்கு மக்களின் வருமானத்தையும் வாழ்க்கைத்தரத்தையும் உயர்த்துவதற்கு விசேட செயற்திட்டம் உங்களிடம் உள்ளதா?

**பதில்:** வடக்கு மக்களின் வருமானத்தையும், வாழ்க்கைத்தரத்தையும் மாகாணசபையூடாக பொருத்தமான கொள்கை வகுத்து செயற்திட்டங்களை பிரயோகிப்பதன் ஊடாக உயர்த்த முடியும்.

செயற்திட்டங்களை வகுப்பதும் தனி மனித விடயம் அல்ல. அவை பொருத்தமான துறைபோகிகளை உள்ளடக்கிய குழுவினால் முன்மொழியப்பட வேண்டியவை. வடக்கு,கிழக்கு மாகாணசபையில் 4 வருடங்கள் செயலாளராக நான் கடமையாற்றிய காலத்தில் இப் பிரதேச பொருளாதார வளர்ச்சிக்கு அதன் ஊடாக மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு முன்மொழியப்பட்ட திட்டங்களை தயாரிப்பதிலும் கொள்கை வகுப்பதிலும் நான் பங்கு பற்றி உள்ளேன். இதில் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சில் மட்டுமன்றி ஒட்டுமொத்தமான மாகாணசபையில் பல்வேறு துறைகளுக்காக திட்டத் தயாரிப்புக்களில் பங்குபற்றி செயற்பட்டுள்ளேன். இப்பொழுது எம்மிடம் உள்ள பிரதானமான கேள்வி என்னவென்றால் திட்டத்தயாரிப்புக்களுக்கு தேவையான முழுமையான தரவுகளும் அத்தரவுகள் தருகின்ற தெளிவான செய்திகளும் தயாரான நிலையில் உள்ளதா, அவ்வாறு இருந்தால் அவை அறிவியல் ரீதியாக தயாரிக்கப்பட்டவையா என்பது அடுத்த கேள்வி ஆகும். இதனைச் செய்வதற்கு அரசியல் தலைமைத்துவம் தேவை என்பதும் அத்தலைமைத்துவம் மக்களால் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதும் அவசியமாகும். அத்துடன் மாகாணசபையின் செயற்திட்டங்களில் கீழ்மட்டமக்களது அபிலாசைகள் பிரதிபலிக்கப்பட வேண்டியவை ஆகும்.

கடந்த 30 வருடப் போராட்டத்தின் காரணமாக கிராமிய சமூகக் கட்டமைப்புகள் சிதைந்து, வலுவற்று இருக்கின்ற இக்காலச்சூழலில் கிராம மக்களின்குரலை அமைப்புக்கள் ஊடாகப் பெற்றிருக்க முடியாது என நான் கருதுகின்றேன். எனது நிர்வாக அனுபவத்தின் ஊடாக வடக்கு, கிழக்கு மக்களின் வருமானத்தைப் பெருக்குவதற்கும் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கும் கருக்கள் நிறைய உண்டு. அக்கருக்களுக்கு ஏனையவர்களின் உதவியோடு நவீன பொருளாதாரச் சிந்தனைக்கு ஏற்ப செயற்திட்டங்களையும் கொள்கைகளையும் வகுப்பதற்கு முடியும் என நான் கருதுகின்றேன்.

ஆய்வுகள் இன்றி தகவல்களைப் பெற முடியாது. மக்களது வாழ்வாதாரத்தை பாதிக்கும் அல்லது நிர்ணயிக்கும் ஒவ்வொரு துறைக்கும் ஆய்வுகள் அவசியம். அதனால் மேலெழுந்தவாரியாக என்போன்றவரிடம் இருக்கும் கருக்களுக்கு உருக்கொடுக்கமுடியாது. உருக்கொடுத்து செயலாற்றுவதற்கு மாகாணசபை அதிகாரம் எமக்கு கிடைக்கப்பெற வேண்டும். உதாரணத்திற்கு ஒன்று கூறுவதானால், நான் செயலாளராக கடமையாற்றிய காலத்தில் தமிழ் ஒரு நிர்வாக மொழியாக என்ற ஆய்வினை துறை சார் அறிஞர்களோடு மேற்கொண்டேன்.

**கேள்வி:-** வடக்கு மக்களை திருப்திப்படுத்த மாகாண சபையின் அதிகார வரம்புகள் இடம் கொடுக்கும் என்று நீங்கள் கருதுகின்றீர்களா?

**பதில்:** இந்தக்கேள்விக்கான விடையை நான் இரண்டு கட்டமாக பிரிக்க விரும்புகின்றேன்.

1. மாகாண சபையின் வரம்புகள்
2. மக்களை திருப்திப்படுத்த அதிகார வரம்புகளின் உச்சப்பயன்பாட்டை பெற்றுக்கொள்தல்.

வடக்கு, கிழக்கு மாகாண சபையின் கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராக 4 வருடங்கள் கடமையாற்றிய காலத்தில் மாகாண சபையின் நெளிவு சுழிவுகளை ஆழமாக அறிந்து அதிகார எல்லைக்குள் நின்று பொருத்தமான செயல் முறைக் கட்டமைப்பை கடைப்பிடித்த அனுபவம் எனக்கு உண்டு.

13 ஆவது திருத்தத்தின் பிரகாரம் தற்போது மாகாண சபைக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை உரிய முறையில் கடைப்பிடிப்பதன் மூலம், எமது மக்களைத் திருப்திப்படுத்தி செயற்பட முடியும் என நான் திடமாக நம்புகிறேன்.

எனது அனுபவத்தில் மாகாண சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை மத்திய அமைச்சுக்களால் விடுக்கப்படும் சுற்றுநிருபங்கள் தடைசெய்ய முடியாது. ஒரு உதாரணத்தை கூற விரும்புகின்றேன். மாகாண சபையில் உள்ள பல்வேறு பதவி வெற்றிடங்களுக்கு பொருத்தமானவர்களை நியமிக்கும் அதிகாரம் மாகாண சபைக்கு உண்டு. ஆனால், மந்திரி சபையின் அனுமதி இன்றி சிற்றூழியர் நியமனத்தை தன்னும் மாகாணசபை மேற்கொள்ளக் கூடாது என்று ஒரு சுற்றுநிருபம் அக்காலத்தில் வழங்கப்பட்டது. இதற்கு எதிராக மாகாண சபைகள் செயற்பட முடியாததற்கு காரணமாக அமைந்தது.

மாகாண சபைகள் தமக்கென தமது வருமானத்தை கூட்டுவதற்கு உரிய செயற்பாடுகளில் ஈடுபடாமல் இருந்தமையே சகல விதமான கொடுப்பனவுகளுக்கும் நாம் மத்திய அமைச்சில் தங்கியிருக்க நேர்ந்தது.

(12ஆம் பக்கம் பார்க்க)

# மக்கள் அரசுடன் இருக்கும் வரை சதித்திட்டங்கள் பலிக்காது



மக்கள் அரசாங்கத்துடன் இருக்கும் வரையில் எந்தவொரு சக்தியினாலும் சதித் திட்டங்கள் தீட்ட முடியாது.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளை கூட பொருட்படுத்தாது எதிர்க்கட்சிகள் போலி மனித உரிமை மீறல்கள் குறித்து அறிக்கை தயாரித்து வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனைக் தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்படுத்த ஐக்கிய தேசியக் கட்சியும், ஜே.வி.பியும் முயற்சிக்கின்றன.

பயங்கரவாதத்தை இல்லா தொழித்து நாட்டின் ஒருமைப்பாட்டை நிறுவிய நாட்டுத் தலைவரை காட்டிக் கொடுக்க முயற்சிக்கப்படுகின்றது.

மனித உரிமை மீறல்கள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்கத் துடிக்கும் தரப்பினர், 1988களில் 60000 இளைஞர் யுவதிகளை டயர்களைக் கொண்டு எரித்தனர்.

மக்கள் பலத்தினால் மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தை தோற்கடிக்க முடியாது என்பதனை ஐக்கிய தேசியக் கட்சி விளங்கிக் கொண்டுள்ளது. இதனால், அமெரிக்காவைக் கொண்டு அரசாங்கத்தை கவிழ்க்க முயற்சிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மட்டுமன்றி நாட்டின் எந்தப் பகுதியிலாவது மனித உரிமைகள மீறப்பட்டுள்ளனவா என்பதனை நவநீதம்பிள்ளை பார்க்க முடியும் என அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

## நாய்களுக்கு திருமணம்; பிக்குகளிடம் மன்னிப்பு



(கொழும்பு)

கண்டியில் நாய்களுக்கு கோலகலமாக திருமணம் செய்து வைத்த பொலிஸார் பௌத்த பிக்குகளிடம் மன்னிப்புக் கோரியுள்ளனர். நாய்களுக்கு திருமணம் செய்து வைக்கும் நிகழ்வொன்று கண்டியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு தொடர்பில் மன்னிப்புக் கோருவதாக சிஹல ராவய அமைப்பிடம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சிங்கள கலாசார மரபுகளின் அடிப்படையில் நாய்களுக்கு திருமணம் செய்யப்பட்டது. இந்த நடவடிக்கைக்கு பௌத்த அமைப்புக்களும் கலாசார அமைச்சும் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தது.

சிங்கள மக்கள் திருமண பந்தத்தில் இணைந்து கொள்ளும் கலாசார அடிப்படையில் நாய்களுக்கு திருமணம் செய்ததன் மூலம், சிங்கள மக்கள் இழிவுபடுத்தப்பட்டுள்ளதாக சிஹல ராவய அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது. இந்த நடவடிக்கைக்காக பொலிஸார் மன்னிப்புக் கோரியுள்ளனர்.


## யுனிலீவர் நிறுவனத்தின் தலைவர் பதவியிலிருந்து ஓய்வு

(கொழும்பு)

யுனிலீவர் சிறீலங்கா நிறுவனத்தின் தலைவர் பதவியிலிருந்து அமல் கப்ரால் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதல் ஓய்வு பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2005ஆம் ஆண்டு முதல் யுனிலீவர் சிறீலங்கா நிறுவனத்தின் தலைவர் பதவியை பொறுப்பேற்று நிறுவனத்தை மேலும் வளர்ச்சிப்பாதையில் முன்னெடுத்த பெருமையைக் கொண்ட அமல் கப்ரால், 31ஆண்டுகளுக்கு முன்னர் யுனிலீவர் நிறுவனத்துடன் இணைந்து கொண்டார்.

இலங்கையில் 75 வருடகாலமாக வர்த்தக நடவடிக்கை



களை முன்னெடுத்து வரும் யுனிலீவர் நிறுவனம், இது வரையில் தனது தலைமைப் பொறுப்பில் இரு இலங்கையர்களை மாத்திரமே நியமித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதில் அமல் கப்ரால் இரண்டாவது இலங்கையர் என்பது குறிப்பிடத்தக்கது.

அமல் கப்ரால் யுனிலீவர் நிறுவனத்தில் பணிபுரிந்த காலப்பகுதியில் யுனிலீவர் பங்களாதேஷ், யுனிலீவர் பிரித்தானியா, யுனிலீவர் இந்தியா போன்ற நாடுகளில் பணியாற்றிய அனுபவத்தை கொண்டுள்ளார்.

இவரது இராஜினாமாவை தொடர்ந்து, நிறுவனத்தின் புதிய தலைவராக 'சியா சயிட் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் யுனிலீவர் பாகிஸ்தான் நிறுவனத்தின் உப தலைவர் வாடிக்கையாளர் உறவுகள் மேம்படுத்தல் பிரிவில் பணியாற்றியவராவார்.

இவரின் நியமனத்தின் மூலம் யுனிலீவர் சிறீலங்காவில முதல் பெண் தலைமை அதிகாரியாக நியமனம் பெற்றவர் எனும் பெருமையையும் இவர் தன்வசம் கொண்டுள்ளார்.

## பொலிஸாருக்கு பயந்து ஹெரோயின் விழுங்கிய பெண்

(திருகோணமலை)

திருகோணமலை ஆண்டாங்குளம் பகுதியில் பொலிஸாருக்குப் பயந்து ஹெரோயின் போதைப் பொருள் பைக்கற்றுக்களை விழுங்கிய பெண்ணொருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண் போதைப் பொருளை வைத்திருப்பதாகக் கிடைத்த தகவலின் பிரகாரம் நேற்று மாலை அவரை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதன் போது தன்னிடமிருந்த சில ஹெரோயின் போதைப் பொருள் பபைக்கற்றுக்களை சந்தேக நபரான பெண் விழுங்கியதாக தெரியவருகின்றது.

## வாக்காளர் அட்டைகள் இன்று பகிர்ந்தளிப்பு

(கொழும்பு)

வடக்கு, மத்திய மற்றும் வட மத்திய மாகாண சபைத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் தபால் திணைகளத்திடம் நேற்று ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

வாக்காளர் அட்டைகள் இன்று முதல் குறித்த மாகாண வாக்காளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும்என பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம் மொஹமட குறிப்பிட்டுள்ளார்.

தபால் திணைக்களத்தினால் வாக்காளர் அட்டைகள் பகிர்ந்தளித்தல் நடவடிக்கைகள் இடம் பெறவுள்ளன. அதேவேளை செப்டெம்பர் 13ஆம் திகதிக்கு முன்னர் வாக்காளர் அட்டைகள் பகிர்ந்தளிப்பு நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு தீர்மானித்துள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.


செப்டெம்பர் மாதம் 08ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விசேட வாக்களர் அட்டை பகிர்ந்தளிப்பு நாளாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் குறித்த காலப்பகுதிக்குள் வாக்காளர் அட்டை கிடைக்காதவர்கள் தமது பிரதேச தபால் திணைக் களத்திற்குச் சென்று வாக்காளர அட்டைகளை பெற்றுக் கொள்ள முடியும் என தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.



பெலாரஸுக்கான மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அந்நாட்டு ஜனாதிபதியை அவரது மாளிகையில் சந்தித்து கலந்துரையாடினார். பெலாரஸ் ஜனாதிபதி மாளிகைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அந்நாட்டு இராணுவத்தினர் அணிவகுப்பு மரியாதை செலுத்துவதைக் காணலாம்.

## தங்கம் கடத்த முயன்றவர் கைது



தங்கம் கடத்த முயன்றதாகக் கூறப்படும் 50 வயதான இலங்கையர் ஒருவர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

3 மில்லியன் ரூபா பெறுமதியான 600 கிராம் தங்கத்தை இவர் கடத்த முயன்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நீர்கொழும்பைச் சேர்ந்த இந்தச் சந்தேக நபர் இந்தியா, மும்பைக்கு தங்கத்தை கடத்த முயன்றபோது கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சந்தேக நபரிடமிருந்து தங்கக் கட்டிகளை கைப்பற்றியுள்ளதாக சுங்கத் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்துள்ளார்.

## இளநிலை பட்டப்படிப்புக்கு மாணவர்களை இணைக்கும் திட்டம்

SLIIT
COMPUTING | BUSINESS | ENGINEERING

தகவல் தொழில்நுட்பம், வர்த்தகம் மற்றும் பொறியியல் ஆகிய கற்கை நெறிகளில் பட்டங்களை வழங்குவதில் முன்னிலையில் திகழும் SLIIT கல்வி நிறுவனம் தற்போது 2013/2014 ஆண்டு இளநிலை பட்டப்படிப்பு திட்டத்திற்கான புதிய மாணவர்களை இணைத்து கொள்ள தொடங்கியுள்ளது.

SLIIT கல்வி நிலையத்தில் தமது பட்டதாரி கற்கைகளை தொடர விரும்பும் மாணவர்கள் தமது பெற்றோருடன் எதிர்வரும செப்டெம்பர் மாதம் 14 ஆம் திகதி காலை 9 மணிக்கு மாலபே மற்றும் கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள SLIIT இன் பிரதான பல்கலைக்கழகங்கள் அல்லது மாத்தறை, கண்டி, யாழ்ப்பாணம் மற்றும் குருநாகல் ஆகிய பிரதேசங்களில் உள்ள கல்வி நிலையங்களுக்கு சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

SLIIT இன் 4 வருட தகவல் தொழில்நுட்பத்தில், (IT) B.Sc. கௌரவ பட்டதாரி நெறியானது தகவல் தொழில் நுட்பம், கணனி முறைமை மற்றும் வலையமைப்பு (Net Working) மென்பொருள் பொறியியல், ஒருங்கிணைந்த ஊடகம் (Interactive Media) மற்றும் தகவல முறைமைகள் (Information Systems) போன்ற 5 விசேட துறைகளில் வழங்கப்படுகிறது.

4 வருட வணிக மேலாண்மை BBAவிசேட கௌரவ பட்டதாரி நெறியானது சந்தைப்படுத்தல முகாமைத்துவம், கணக்கியல் மற்றும் நிதி, மனித மூலதன முகாமைத்துவம் (Human Capital Management), தர முகாமைத்துவம் (Quality Management) மற்றும் முகாமைத்துவ தகவல் முறைகள் (Management Information Systems) ஆகிய 5 விசேட துறைகளில் வழங்கப்படுகிறது.


இந்த பட்டதாரி கற்கைக்கு க.பொ.த உயர்தரப் பரீட்சையில் (இலங்கை,லண்டன்) மூன்று பாடங்களில் சித்தி அல்லது அதற்கிணையான பாடத்தில் ஒரே தடவையில் சித்தி அல்லது SLIIT இனால நடத்தப்படும் உளச்சார்பு தேர்வில் (aptitude test) சித்தியடைந்தோர் விண்ணப்பிக்க முடியும்.

பொறியியல் துறையில் கல்வியை தொடர விரும்பும் மாணவர்கள் சிவில், இயந்திரவியல், Material, எலக்ரோனிக் மற்றும் மின் பொறியியல் ஆகிய துறைகளில் 4 வருட B.Sc. Engineering பட்டதாரி கற்கையை தொடர முடியும்.

இருப்பினும், இப் பொறியியல் பட்டப்படிப்பை தொடர்வதற்கு மாணவர்கள் கணிதம் அல்லது பௌதீகவியல் உள்ளடங்கலாக மூன்று பாடங்களில் திறமைச்சித்தி அல்லது SLIIT இனால் நடாத்தப்படும் உளச்சார்பு தேர்வில் சித்தியடைந்திருத்தல் தகைமைகளாக கொள்ளப்படுகின்றன.

SLIIT கல்வி நிலையத்தின் பட்டப்படிப்பு கற்கைகள் அனைத்தும் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தை பெற்றுள்ளது.

# அளவெட்டி ஸ்ரீ நாகவரத நாராயணர் இரதோற்சவ சிறப்பு மலர் -28.08.2013



## ஆலய நித்திய பூசகரின் ஆசிச்செய்தி



அளவெட்டி ஸ்ரீநாகவரத நாராயணர் ஆலய தேர்த்திரு விழா இன்று புதன்கிழமை 28.08.2013 நடைபெறத் திருவருள் கூடியுள்ள நிலையில் நாராயணப் பெருமான் சித்திரத்தேரில் பவனி வருவது நமக்கெல்லாம் மகிழ் வைத் தருவதாகும். பெருமான் தேரில் ஆரோகணித்து எமது மனதில் தோன் றும் தீய எண்ணங்களை அழித்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ எம்பெருமான் அருள் கிடைக்க நாராயணப் பெருமானைத் தொழுது தேரேறி வரும் அவரை வடம் பிடித்து பெரும்பேறு பெறுவோமாக!

கு.ஞானசுதன் நித்தியபூசகர்

## தெய்வப் பிம்பமாகவே அனைத்துமாகும்!



ஸ்ரீநாகவரத நாராயணர் வீற்றிருக்கும் அளவை நாகேஸ்வரம் முனபு தம் பளாவத்தை என அழைக்கப் பட்ட பற்றை நிரம்பிய இடமாக இருந்தது. கலாநிதி சீனியர் விநாசித்தம்பி எனும் அருட்கவிப் புலவரின் அரவணைப்பால் இன்று இரதோற்சவ பெருவிழா நடை பெறும் அளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளது.

கடவுளின் மூன்று தொழில்கள் படைத்தல், காததல், அழித்தல் என்பனவாகும். இதில் காத்தல் தொழிலைச் செய்பவர் என நம்பப்படும் கடவுள் நாராயணர் ஆகும். காலந்தோறும் அவரே உயிர்களைக்காக்கும் பொருட்டு அவதாரமெடுக்கின்றார் என்பது நாராயண பக்தர்களின் நம்பிக்கை அந்த வகையில் கடைசி அவதாரம் இராமரே. நவீன யுகத்தில் வாழ விரும்பும் நாராயண பக்தர்கள் பின்பற்ற

(தொடர்ச்சி 18 ஆம் பக்கம்)

**மலராக்கம்:**
**தேவி பரமலிங்கம்**


ஸ்ரீநாகவரத நாராயணனே போற்றி!
**சாயி போட்டோ**
1010, 11, கே.கே.எஸ்.வீதி,
நாச்சிமார் கோவிலடி.
யாழ்ப்பாணம்.


நாகவரத நாராயணர் தேரோடுக
**சிறீ நதியா நகை மாளிகை**
01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2709

காவணி கோபியர் காவலனே
கம்சவதம்புரி கோமகனே!
**வசந்திஜா எலற்றிக்கல்ஸ்**
100, கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்.

நாகத்திலாடும் நந்தா, கோவிந்தா
நாகவரத நாரணரே போற்றி!
**எஸ்.வி.முருகேசு**
154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 8899

பிரணவத்தின் பெருமுதலே
பேரண்டம் காப்பவனே!
**க.செ.கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்**
அபிஷேகப் பொருட்கள், மருந்துப் பொருட்கள் வியாபாரம்.
76, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.


நாவணி கீதை நயந்தவனே
நாடிய பஞ்சவர் தூதுவனே!
பட்டுப் புடவை, றெடிமேற் உடைகளுக்கு
**மங்கை சில்க்ஸ்**
08,நவீன சந்தை, சுன்னாகம்.

அடியார்க்கு இரங்கும் அரங்கா போற்றி!
**அற்புதா ரேடிங் கம்பனி**
198(404A) ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

BABY MOTHER CARE STATIONARY
430, Hospital Road, Jaffna.

யாழ். நகரில் மக்கள் போற்றும்
ஜவுளிகளின் சங்கமம்
**சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்**
41, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2063

உள்ளமாம் கோவில் உறைந்திடு
முகுந்தா!
**விஷ்ணுபவன்**
350, 354, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0778662330


நினைவு வரமுன் வருநாகேஸ்வர நாரணரே!
**லிங்கன் கிறீம் ஹவுஸ்**
119, கஸ்தூரியார் வீதி, சுன்னாகம்.

நாடுவார்க்கு அருளும் ஞானவாரிதியே
நாகவரத நாராயணர் தேரேறி வருக!
**கஜமுகன் ஹாட்வெயர்ஸ்**
147, 149 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2833

மரகதமா மணிவண்ணா மனோன்மணிக்கு மூத்தவனே!
பட்டுப் புடவைகளின் சங்கமம்
**இளவரசி சேலைச்சோலை**
57, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.



எம்பெருமானே போற்றி! இலட்சுமிநாதா போற்றி!
**அந்தியகால சேவை**
**நண்பன் கிளின்ரன்**
548, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 3518

அளவையூர் நாகேஸ்வர நாதர் தங்கரதம் வருக!
**றூபா பன்முக வர்த்தக நிலையம்**
104 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

அளவை ஸ்ரீநாகவரத நாராயணர்
தங்கத் தேரேறி வாரீர்
கிளர்படை முன்தேரோடி கீதை
சொன்ன மாயவனே!
யாழ். கே.கே.எஸ்.வீதி. அடியான்


நாவகரத நாராயணர் ரதமதில் ஆரோகணித்திட!
**இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்ஸ்**
105, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

# செம உதைதான்





அஷஸ் தொடரில் எமது பந்து வீச்சாளர்கள் நன்றாக வீசினர், ஆனால் துடுப்பாட்டத்தில் சிறந்த இணைப்பாட்டங்கள் அமையவில்லை. கடைசி டெஸ்ட் போட்டியில் சில மாற்றங்களைச்செய்தோம், இனி அணி மேம்பாடடையும் என்று நம்புகிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக அவுஸ்ரேலியாவுக்கு இங்கிலாந்து செம உதை கொடுத்தது என்பது உண்மையே என அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் மெக்ராத் தெரிவித்துள்ளார்.

ஆஷஸ் தொடரில் இயன் பெல்லின் ஆட்டம் முக்கியமானது. அவர் இல்லையெனில் இங்கிலாந்து அணியும் அவ்வளவு நல்ல அணியாகத் தெரியவில்லை. 7 மூத்த வீரர்களை இழந்தால் அதனுடன் அனுபவத்தையும் இழக்க நேர்கிறது. இதனால்தான் ரிக்கி பொண்டிங்கினால் கடைசி கட்டங்களில் ஓட்டங்கள் குவிக்க முடியாமல் போனதற்குக் காரணம். ஆனால் அவர் இளம் வீரர்களுக்கு சொல்லிக் கொடுத்த விடயங்கள் மதிப்பற்ற பொக்கிஷமாகும்.

நான் விளையாடும்போது இரசிகர்களுடன் ஒத்துப் போவேன். பிற நாடுகளுக்குச் சென்றாலும் அங்கு இரசிகர்கள் எனக்கு கடினமான காலத்தை கொடுத்ததில்லை. லீமனை அனைவருக்கும் தெரியும். புரொட்டை அவுஸ்ரேலியர்கள் அழ வைக்கவேண்டும் எனக் கூறியிருந்தார். அவர் கூறியதன் பொருளை அந்த கூற்றிடத்தை வைத்துத்தான் புரிந்து கொள்ள வேண்டும். அது அவரின் தனிப்பட்ட கருத்து. எனக்கு அதைப் பற்றி ஒன்றும் தெரியாது. நடுவரின் மேன்முறையீடு குழப்பம் நிறைந்ததாகவே நான் இப்போது பார்க்கின்றேன். நான் முதன் முதலில் இந்த மேல்முறையீடு முறை குறித்து அதன் சிறந்த விசிறியாகவே இருந்தேன். இப்போது பார்க்கும்போதுதான் புரிகிறது இந்தியா ஏன் அதனை அவ்வளவு தீவிரமாக எதிர்க்கிறது என்று. எனக்கும் அதன் மீது நம்பிக்கை போய்விட்டது.

சகீர்கான் ஆரம்ப காலத்தில் உழைப்பைவிட இப்போது அதிகம் உழைக்கவேண்டும், மேலும் கடினமாக உழைப்பதைத் தவிர வேறு வழியில்லை. அவர் தனக்குத்தானே பயிற்சியில் ஈடுபடுவது சிறந்தது. சகீரிடம் அனுபவம் உள்ளது. ஆனால் எது எப்படியிருந்தாலும் திறமையை நிரூபித்தால்தான் அணியில் நீடிக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# முடியுமா? எங்களை வெல்ல




(லண்டன்)

ஆஷஸ் தொடரை கைப்பற்றிக் கொண்டதன் மூலம் யாராலும் தோற்கடிக்கப்பட முடியாத அணி என்பதை வெளிப்படுத்தியிருக்கின்றோம் என இங்கிலாந்து அணிக் கப்டன் குக் தெரிவித்துள்ளார்.

ஆஷஸ் தொடர் தொடங்கும் முன், இங்கிலாந்து அணி குறித்து பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. சொந்த நாட்டில் நடக்கும் போட்டி என்பதால் இங்கிலாந்து அணிக்கே நெருக்கடி அதிகமாக இருக்கும் என்று கூறப்பட்டது.

ஆனால், எங்கள் அணி போட்டியில் சிறப்பாகச் செயற்பட்டு வெற்றிகளைப் பெற்றது. வேண்டியபோது ஓட்டங்களையும், விக்கெட்டையும் எங்கள் வீரர்கள் குவித்துக்கொண்டனர், கைப்பற்றிக்கொண்டனர்.

ஓவல் டெஸ்டிலும் வெற்றி பெற்றிருந்தால் இன்னும்மகிழ்ச்சியாக இருந்திருக்கும். ஆனால், விதிமுறைகளை மதிக்க வேண்டும். விளையாடுவதற்கு ஏற்ற அளவுக்கு வெளிச்சம் போதுமானதாக இல்லை என நடுவர்கள் முடிவு செய்த பின்னர் என்ன செய்ய முடியும். உண்மையிலேயே நன்கு இருட்டிவிட்டது. அவுஸ்ரேலிய அணி இரண்டாவது இனிங்ஸை இடைநிறுத்தி சவால் விடுத்தது பாராட்டத்தக்கது. சிறப்பாகவே இலக்கை நோக்கி சென்றோம். இன்னும் சில ஓவர்கள் விளையாடமுடிந்திருந்தால் வெற்றி பெற்றிருப்போம். இரசிகர்களின் அமோக ஆதரவு கூடுதல் உற்சாகம் அளித்தது. இந்த சாதனை அணிக்கு கப்டனாக இருப்பதில் மிகுந்த பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன். இதன்மூலம் எங்களை யாராலும் தோற்கடிப்பது கடினம் என்ற நிலையை வெளிப்படுத்தியுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, அவுஸ்ரேலிய அணிக் கப்டன் மைக்கல் கிளார்க் குறிப்பிடுகையில், வெற்றிக்காக கடுமையாக முயற்சி செய்தோம். இங்கிலாந்து அணிக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தொடர் முழுவதுமே எங்களை எல்லா வகையிலும் வீழ்த்திவிட்டார்கள். எங்கள் அணி பந்துவீச்சாளர்கள் மிகச் சிறப்பாக செயற்பட்டார்கள். இந்த தோல்விக்கு ஒட்டுமொத்த அணியையும் குறை சொல்ல முடியாது. ஒருங்கிணைந்து விளையாடத் தவறிவிட்டோம். அதுவே தோல்விக்கு முக்கிய காரணம் என்றார்.

# வென்றது பார்சிலோனா




(மலகா)

மலாகா அணிக்கு எதிரான லா லிகா கால்பந்து தொடரின் லீக் போட்டியில் பார்சிலோனா அணி வெற்றி பெற்றது.

ஸ்பெயினில் லா லிகா கால்பந்து தொடர் நடைபெற்று வருகின்றது. இதன் லீக் போட்டியில் பார்சிலோனா, மலாகா அணிகள் மோதின. காயம் காரணமாக பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரர் மெஸ்சி பங்கேற்கவில்லை. போட்டியின் முதல் பாதியின் கடைசி நிமிடத்தில் பார்சிலோனா அணிக்கு, அட்ரியானோ (44ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்தார்.

இரண்டாவது பாதியில் இரு அணி வீரர்களும் கோல் அடிக்க முயன்ற முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்தது. இறுதியில், பார்சிலோனா அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இத்தொடரில் முதல் போட்டியில் பார்சிலோனா அணி வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# லீமன் மன்னிப்புக் கோரல்

(லண்டன்)

இங்கிலாந்து வீரர் புரொட் மீது தெரிவித்த கருத்துக்களுக்காக அவுஸ்ரேலிய அணியின் பயிற்றுவிப்பாளர் டரன் லீமன் மன்னிப்புக் கோரியுள்ளார். இந்தப் பிரச்சினையிலிருந்து வெளியேற விரும்புவதாகவும் டரன் லீமன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து லீமன் மேலும் தெரிவிக்கையில், ஆஷஸ் தொடர் நிறைவடைந்துள்ள நிலையில், எனது கருத்துக்கள் குறித்து புரொடிடம் கலந்துரையாடினேன். அந்தச் சம்பவம் மிகச்சிறப்பான பாடமாக எனக்கு அமைந்துள்ளது.

இது நகைச்சுவையான நிகழ்ச்சியாகவே எனக்குத் தோன்றுகின்றது. ஆனால் அதில் கருத்துத் தெரிவித்ததன் மூலம் ஏற்பட்ட விளைவுகளிலிருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். நான் இன்னும் நிறைய பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். இன்னும் முன்னேற்றம் அவசியம் என உணர்கின்றேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, டரன் லீமன் தன்னிடம் மன்னிப்புக் கோரியதை உறுதிப்படுத்திய புரொட், அந்த மன்னிப்பை ஏற்றுக் கொண்டதாகவும் தெரிவித்துள்ளார்.

# எண்ணங்களைப் பிரதிபலிப்பேன்

(நியூயோர்க்)

யு.எஸ். ஓப்பன் ரென்னிஸ் தொடரில் பிரித்தானியா இரசிகர்களின் எண்ணங்களை ஈடுசெய்யும் வகையில் எனது ஆட்டம் அமையும் என நட்சத்திர ரென்னிஸ் வீரர் ஆன்டி முர்ரே தெரிவித்துள்ளார். கடந்த ஆண்டு சிறப்பானதாக அமைந்திருந்தது போல் இந்த ஆண்டும் சிறப்பாக அமையும் என்று நம்புகின்றேன். அந்த வகையில் யு.எஸ். ஓப்பன் நடப்புச் சம்பியன் என்பதை வெளிப்படுத்தும் வகையில் எனது ஆட்டம் அமையும். ஒவ்வொரு போட்டியையும் இறுதிப் போட்டி போன்றே ஆடி வருகின்றேன். எதிராளி யார் என்பதை விட போட்டிக் களத்தின் சூழ்நிலைக்கு ஏற்பவே எனது ஆட்டம் அமையும். அதுவே வெற்றியையும் பெற்றுத் தரும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஆடுகளத்தில் சர்ர்ர்ர்ர்ர்... சீ.... கெட்ட பழக்கம்



அவுஸ்ரேலியாவுக்கெதிரான ஆஷஸ் தொடரை வென்ற உற்சாகத்தில் மைதானத்தின் ஆடுகளத்தில் சிறுநீர் கழித்து இங்கிலாந்து கிரிக்கெட் வீரர்கள் அநாகரிகமாக நடந்து கொண்டுள்ளனர்.

இங்கிலாந்து, அவுஸ்ரேலியா அணிகளுக்கு இடையிலான வரலாற்றுசிறப்பு வாய்ந்த ஆஷஸ் தொடர் நடைபெற்றது. இதில் இங்கிலாந்து அணி 3 போட்டிகளில் வென்று தொடரைக் கைப்பற்றியது.

ஆனால் ஒரு போட்டியில் கூட அவுஸ்ரேலிய அணி வெல்லவில்லை. இதனால் அவுஸ்ரேலிய இரசிகர்களும், வீரர்களும் பெரும் சோகத்தில் உள்ளனர். ஏற்கனவே ஒரு போட்டி சமநிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான கடைசி மற்றும் 5ஆவது போட்டியும் சமநிலையில் முடிந்தது. இதனால் 3-0 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி தொடரை வென்றது.


இந்த வெற்றியை இங்கிலாந்து வீரர்கள் மிகவும் அநாகரிகமான முறையில் கொண்டாடியுள்ளனர். அதாவது மைதானத்திற்குள் ஆடுகளத்தில் சிறுநீர் கழித்து தமது வெற்றிக்களிப்பை வெளிப்படுத்தியுள் ளனர்.

இவ்வாறு ஆடுகளத்தில் சிறுநீர் கழித்த செயல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கிரிக்கெட்டின் தாயகமான இங்கிலாந்திலேயே, அதன் வீரர்கள் இப்படி அசிங்கமாக நடந்து கொண்டிருப்பது வரலாறு காணாதஅருவருக்கத்தக்க செயல் என்று வர்ணிக்கப்படுகிறது.

சமீபத்தில் இப்படித்தான் இங்கிலாந்து வீரர் மொன்டி பனிசர் கூட அசிங்கமாக கிளப் ஒன்றில் சிறுநீர் கழித்து கேவலமாக நடந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

கெவின் பீற்றர்சன், ஸ்டூவர்ட் புரொட் ஆகியோர்தான் சிறுநீர் கழித்தவர்கள் என்று கூறப்படுகிறது. அவர்களுடன் மேலும் சில வீரர்களும் சம்பவ இடத்தின்போது இருந்துள்ளனர்.

# இரண்டாவது சுற்றில் முன்னணிகள்



(நியூயோர்க்)

யு.எஸ். ஓப்பன் ரென்னஸ் தொடரின் முதலாவது சுற்றில் நட்சத்திர வீரர்களான நடால், செரீனா உள்ளிட்ட வீரர்கள் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில், கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற 133ஆவது யு.எஸ். ஓப்பன் ரென்னிஸ் தொடர் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

இதில், ரபேல் நடால் முதல் சுற்றில் ரயான் ஹாரிசனை எதிர்கொண்டார். 6-4,6-2,6-2 என்ற நேர் செட் களில் ஹாரிசனை தோற்கடித்து நடால் எளிதாக அடுத்த சுற்றுக்கு முன்னேறினார். இது கடின ஆடுகளத்தில் அவர் பெறும் 16ஆவது தொடர் வெற்றியாகும்.இந்த சீசனில் இதுவரை ஐந்து தோல்விகளை மட்டும் சந்தித்து 54 வெற்றிகளைப் பெற்றுள்ள நடால் இந்த சாதனையை 28 வெற்றியாளர்களுடன் பகிர்ந்து கொள்கின்றார்.

பெண்கள் ஒற்றையர் ஆட்டத்தில் நடப்பு சம்பியன் செரீனா, பிரான்செஸ்கா ஸ்கியாவோனை 6-0, 6-1 என்ற கணக்கில் வீழ்த்தி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில், சீனாவின் லிநா, பெலாரசின் ஆல்கா கோவர்ட்சோவா மோதினர். அபாரமாக ஆடிய லிநா 6-2, 6-2 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார். மற்றொரு போட்டியில், போலந்தின் அக்னிஸ்கா ரத்வான்ஸ்கா, ஸ்பெயினின் சில்வியா சோலர்-எஸ்பினோசா மோதினர். இதில் அசத்தலாக ஆடிய ரத்வான்ஸ்கா 6-1, 6-2 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்றார்.





கட்டுடை கோபாலன் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் சிறப்புற நடைபெற்றது. இதில் சிறார்களின் பல விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் பங்குபற்றிய அனைத்து சிறார்களும் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். சர்வானந்தன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக மானிப்பாய் பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளர் வெ. அன்ரன் ஜோன்சன் கலந்து கொண்டார். சிறார்களின் வினோத உடை நிகழ்வையும், விருந்தினர் சிறார் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் காணலாம். (54)

## விளையாட்டுச் செய்திகள்

# யாழில் அடுத்த மாதம் புல்செல் கால்பந்து

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கால்பந்து அணிகளுக்கிடையிலான அணிக்கு ஐந்து பேர் கொண்ட புல்செல் கால்பந்தாட்டத் தொடர் அடுத்த மாத நடுப்பகுதியில் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ளது.

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடாத்தப்படவுள்ள இப்போட்டி, யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் இடம்பெறவுள்ளது.

இப்போட்டியில் பங்குகொள்ள விரும்பும் அணிகளை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக்கின் துணைத்தலைவர் ஆனந்தராசாவிடம் தொடர்பு கொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

கால்பந்து திருவிழாவாக இடம்பெறவுள்ள இப்போட்டி நிகழ்வில் யாழ். மாவட்ட கால்பந்தாட்ட அணிகள் தமது திறமைகளை வெளிப்படுத்திக்கொள்ளுமாறு யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக்கினர் கேட்டுள்ளனர்.

# டானியல் அதிரடித் துடுப்பாட்டம் வென்றது சென்.பற்றிக்ஸ் கல்லூரி

(யாழ்ப்பாணம்)

டானியலின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி பெரு வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் இரண்டாவது சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதில் கடந்த 20ஆம் திகதி சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணியும், சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி டானியலின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 47 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 215 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டானியல் 59, பியற்றீக் 32, சரேன் 37, ரதீசன் 25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கஜலவன், நிமலன் தலா நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 216 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரியின் பந்துவீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறியதுடன் விக்கெட்டுக்களையும் விரைவாகப் பறிகொடுத்தது. இறுதியில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி 40.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 89 ஓட்டங்களைப்பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் திவியன் 20, லிபிதன் 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பியற்றிக் மூன்று, அனோஜன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். (எஸ்.பி.)



## இலங்கை வங்கியின் வடபிராந்திய கிளைகளுக்கிடையிலான விளையாட்டு

# யாழ்ப்பாண வங்கி சம்பியன்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் வடபிராந்திய கிளைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் யாழ்ப்பாணம் வொறியேர்ஸ் அணி அதிக புள்ளிகளைப் பெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

இலங்கை வங்கியின் வடபிராந்திய கிளைகளுக்கிடையில் கடந்த 24ஆம் திகதி யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் பெரு விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்பட்டன.

இதில் மென்பந்து கிரிக்கெட், வலைப்பந்து, கரப்பந்து போன்ற பல போட்டிகள் நடாத்தப்பட்டன. ஒட்டுமொத்த புள்ளிகள் அடிப்படையில் யாழ்ப்பாணம் வொறியேர்ஸ் அணி கூடிய புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், வன்னி அணி இரண்டாமிடத்தையும், பெனிசுலா ஜெயன்ஸ் அணி மூன்றாமிடத்தையும் பிடித்துக்கொண்டன.

இலங்கை வங்கி பிராந்திய கிளைகளிடையே நடாத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் வொறியேர்ஸ் அணி வெற்றி பெற்றது. கூடிய ஓட்டங்களைப்பெற்ற அணியாக பெனிசுலா ஜெயன்ஸ் அணி பெற்றுக் கொண்டது.

இந்த விளையாட்டுப் போட்டிகளின் சிறந்த வீரராக முல்லைத்தீவு கிளையைச் சேர்ந்த சுயர்கரன், சிறந்த பெண் வீராங்கனையாக சாவகச்சேரி கிளையைச் சேர்ந்த இமயவல்லி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இப்போட்டி நிகழ்வில் வடமாகாண கிளைகளைச் சேர்ந்த சகல இலங்கை வங்கி ஊழியர்கள், அதன் ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டிகளைக் கண்டுகளித்தமை குறிப்பிடத்தக்கது. (42)

# ஹைபுரோட்டினை வெளியாருக்கு விற்கத் தடை

(கொழும்பு)

விளையாட்டு வீரர்களுக்கு இலவசமாக வழங்கப்படும் ஹைபுரோட்டின் வெளியாருக்குச் செல்வதை தவிர்ப்பதற்கு புதிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விளையாட்டு வீரர்களினதும், வீராங்கனைகளினதும் போஷாக்கு மட்டத்தை அதிகரிப்பதற்காக விளையாட்டு வைத்திய நிறுவனம் புரோட்டினை வழங்கி வருகிறது. 5000 ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதி கொண்ட இந்த புரோட்டினை சில வீரர்கள் வெளியாருக்கு விற்பனை செய்வதாக முறைப்பாடும் கிடைத்துள்ளது.

இந்த மோசடியை தவிர்ப்பதற்காக வீரர்கள் பாவித்த புரோட்டின் வெற்று பெட்டிகள் திருப்பி ஒப்படைக்கப்பட்ட பின்னரே இனி மேல் புதிதாக புரோட்டின் வழங்கப்படும். தேசிய அணிகளிலுள்ள 650 விளையாட்டு வீரர்களுக்கும் வீராங்க னைகளுக்கும் ஹைபுரோட்டின் வழங்க 40 இலட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பணம் செலவாவதாகவும் விளையாட்டு வைத்திய நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதனை உடனடியாக தடுக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை விளையாட்டு வைத்திய நிறுவனம் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# நவநீதம்பிள்ளை தன்மீதான அவப்பெயரை நீக்குவாரா?



ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு 5 நாள் விஜயம் ஒன்றை மேற்கொள்ளும் இந்தச் சந்தர்ப்பத்தில், அவரது வருகை சம்பந்தமாக இலங்கையில் உள்ள பல்வேறு தரப்பினரும் பலத்த எதிர்பார்ப்புகளை உருவாக்கி வைத்திருக்கின்றனர். அதற்கான காரணம் சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல.

பொதுவாக உலக அமைப்புகள் எல்லாமே ஆதிக்க நாடுகளின் கட்டுப்பாட்டில் இருப்பது தொன்றுதொட்டு வழமை யாக இருந்து வருகிறது. அதன் காரணமாக அந்த அமைப்புகள் வல்லாதிக்க சக்திகளின் நலன்களுக்காக சேவை புரிவது ஒரு எழுதாத விதியாகவும், மரபாகவும் இருந்து வருகிறது. இதற்கு ஐ.நா மனித உரிமைப் பேரவையும் விதிவிலக்கல்ல.

எனவே தற்போதைய மனித உரிமைப் பேரவை ஆணையாளர் நவநீதம்பிள்ளையும் யாருக்கு சேவையாற்ற வேண்டியிருக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஆனால் அவரைப் பொறுத்தவரை முன்னைய காலங்களில் இந்தப் பதவியில் இருந்தவர்களைவிட வேறொரு பிரத்தியேக அம்சமும் இருக்கிறது. அவர் ஒரு தென் ஆபிரிக்கப் பிரஜையாக இருந்தாலும், வம்சாவழி ரீதியில் தமிழராகவும் இருக்கின்றார். அதன் காரணமாக "இலங்கையில் தமிழருக்கு எதிராகச் சிங்கள அரசு செயற்படுகிறது" என்ற குற்றச்சாட்டு உள்ள சூழ்நிலையில், நவநீதம்பிள்ளை இலங்கை அரசுக்கு எதிராகத் தொடர்ச்சியாக அனல் கக்கி வரும் பின்னணியில், தமிழினச் சிந்தனையொன்றும் அவரது' செயற்பாடுகளில் இழையோடுகிறது என்ற அபிப்பிராயம் சிங்கள மக்களிடம் ஏற்பட்டு இருக்கிறது. அந்தக் கருத்தை அவரது இந்த விஜயம் சுலபமாக நீக்கிவிடும் என்று கூறுவதற்கில்லை.

நவநீதம்பிள்ளை உலக வல்லாதிக்க சக்திகளின் கைப்பொம்மை போலவும், அந்தரங்க நோக்கத்துடனும் செயற்படுகிறார் என்ற குற்றச்சாட்டு பல தரப்புகளாலும் முன்வைக்கப்பட்டு வரப்படுகின்றது. தற்பொழுதுகூட அவரது இலங்கை விஜயம் அவ்வாறே பார்க்கப்படுகின்றது.

தனது கடந்த காலத்தின் செயல்பாடுகளாலும், இலங்கையில் தனது வருகையைக் கொண்டாடும் நபர்கள் யார் யார் என்பதன் காரணமாகவும் சற்று கலவரமடைந்துவிட்ட நவநீதம்பிள்ளை, தான் திறந்த மனதுடனேயே இலங்கை செல்வதாகச் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகினார். அவர், தான் செய்த தவறுகளுக்கு பிராயச்சித்தம் தேடுவதாக இருந்தால், அவர் குறிப்பிட்டது போல, உண்மையிலேயே திறந்த மனதுடன் இலங்கைக்குச் சென்று உள்ளதை உள்ளபடி ஆராய வேண்டும்.

அப்படிப் பார்த்தால், முதலில் இலங்கையில் புலிகளுக்கு எதிரான இறுதிக்கட்டப் போர் நடைபெற்ற போது, தானோ அல்லதுஐ.நா.வோ அதைத் தடுத்து நிறுத்த முயற்சிக்கவில்லை எனபதைச் சுய விமர்சன ரீதியில் அவர் ஒப்புக்கொள்ள வேண்டும். இவர்களது எஜமானர்களான வல்லமை பொருந்திய மேற்கு நாடுகளும் அதைச் செய்யத் தவறின என்பதையும் ஒப்புக் கொண்டாக வேண்டும். குறைந்த பட்சம் ஒரு சிறிய பகுதிக்குள் சுமார் மூன்று இலட்சம் வரையிலான அப்பாவிப் பொதுமக்கள் இருந்த போது, அவர்களை விடுவிக்க நவநீதம்பிள்ளையோ, அவரது சகாக்களோ எவ்வித முயற்சியும் செய்யவில்லை என்பதையும் ஏற்றே ஆக வேண்டும்.

எனவே நவநீதம்பிள்ளை இலங்கை சென்று நிலைமைகளை ஆராயும் போது, இன்றைய அரசை மட்டுமன்றி, இலங்கையில் இன ஒடுக்குமுறைக்கும், அதன் காரணமாக ஒரு உள்நாட்டுப் போருக்கும் இட்டுச் சென்ற காரணிகளான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கங்கள் தொடர்ச்சியாகச் செய்து வந்த, திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை ஆரம்பித்தது, மலையக மக்களின் பிரஜாவுரிமை, வாக்குரிமையைப் பறித்தது, தொடர்ச்சியான இன வன்செயல்கள், அவசரகால - பயங்கரவாதச் சட்டங்கள், மக்கள் மீது குண்டு மற்றும் எறிகணை வீச்சு நடாத்திப் பல்லாயிரக்கணக்கானோரைப் படுகொலை செய்தது போன்ற விடயங்களையும் ஆராய வேண்டும்.

அதேபோல இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயன்ற போதெல்லாம் சிங்களப் பேரினவாதிகளுடன் சேர்ந்து கொண்டு அதைக் குழப்பிய தமிழ் தலைமைகளின் செயற்பாடுகளையும், இன்றைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறு அழிவு யுத்தத்திற்கும், மனித விரோதச் செயற்பாடுகளுக்கும் ஆதரவாக இருந்தார்கள் என்பதையும் ஆராய வேண்டும். அவர்கள் ஒரு பக்கத்தில் சிங்கள விரோதத்தைக் கிளப்பி சாதாரண மக்கள் மத்தியில் குரோதங்களை ஏற்படுத்திக் கொண்டு, மறுபக்கத்தில் தமது அரசியல் சகாக்களான ஐ.தே.க சிங்களத் தலைமையுடன் கூடிக் குலாவுகிறார்கள் என்பதையும் ஆராய வேண்டும்.

அத்துடன் ஆயுத வன்செயல்களில் ஈடுபட்டு பல்லாயிரம் உயிர்களைக் கொன்றொழித்ததுடன், இனப்பிரச்சினைத் தீர்வைத் தொடர்ந்து குழப்பி வரும் இனவாத சக்திகளான ஜே.வி.பி மற்றும் சிங்கள இனவாதக் குழுக்கள் பற்றியும் ஆராய வேண்டும்.

நவீதம்பிள்ளையின் இலங்கை விஜயம் வெறுமனே இலங்கை நிலைமைகளை அறிவதற்கான ஒன்று மட்டுமல்ல. இந்த விஜயம் எப்பொழுதும் இலங்கைக்கு எதிராக அந்தரங்க நிகழ்ச்சி நிரலுடன் செயற்பட்டு வருகிறார் என்ற, அவர் மீது ஏற்பட்டுள்ள களங்கத்தை நீக்குவதற்கும் அவருக்குக் கிடைத்த ஒரு சந்தர்ப்பமு மாகும் என்பதையும் அவர் கவனத்தில் கொள்வது அவசியம்.

# தீப்பற்றிய தேவாலயம்!



அந்த தேவாலயத்தில் எல்லோரும் ஞாயிறு தோறும் மிகச் சரியாக ஒன்பது மணிக்குத் தவறாமல் கூடிவிடுவார்கள், காரணம், இருபது கலைஞர்கள் கொண்ட இசைக்குழு தேவகீதத்தைச் சொக்கிப் போகும் அளவுக்கு இசைக்கும். யாரும் ஒரு நொடியைக்கூடத் தவறவிடாமல் அந்த இன்னிசையைக் கேட்பது வழக்கம். பக்தர்கள் நேரம் தவறாமல் தேவாலயத்திற்கு வருவதற்கு அது முக்கிய காரணம் என்று சொல்லலாம்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை ஒன்பது மணிக்குச் சில நிமிடங்கள் இருக்கும்போது, பக்தர்கள் தேவாலயத்தின் அருகே வந்து கொண்டிருந்தபோது, பெரிய வெடிச்சத்தம் இடிபோலக் கேட்டது. உடனே தேவாலயம் பற்றி எரிய ஆரம்பித்து விட்டது.

தீப்பிழம்புகள் நாலாபக்கமும் சூழ்ந்தன. எல்லோரும் பதறிப் போனார்கள். பக்தர்கள் ஒன்பது மணிக்குத்தான் வருவார்கள் என்றாலும், இசைக்குழு எப்பொழுதும் ஒன்பது மணிக்கு முன்னதாகவே வந்து வாத்தியங்களைச் சரிபார்த்துக் கொள்வது வழக்கம். எனவே எல்லோரும் அனிச்சையாக கடிகாரத்தைப் பார்த்தார்கள். மணி சரியாக ஒன்பது. எங்கும் அழுகைக் குரல். மக்கள் தீச்சுடர்களை மீறி உள்ளே நுழைந்து இசைக் குழுவினரைக் காப்பாற்றப் பாய்ந்தார்கள். தீயணைக்கும் படையினர் உரிய பாதுகாப்புடன் உள்ளே சென்றார்கள். விரைவில் திரும்பி உதட்டைப் பிதுக்கினார்கள்.

உள்ளே சமையல் வாயு சிலிண்டர்கள் வெடித்ததால் இந்தத் தீ விபத்து என்று எல்லோரும் பேசிக் கொண்டார்கள்.


உள்ளே சென்று வந்த ஒரு தீயணைப்புப் படைவீரர், "அப்படித்தான் இருக்கும்" என்றார். அத்துடன் "இருபது பேரில் ஒருவர் கூடப் பிழைத்திருக்க முடியாது" என்றும் துக்கம் தோய்ந்த குரலில் சொன்னார். கூடியிருந்த பக்தர்கள் மயக்கம் போட்டு விழாத குறை. போயும் போயும் இசைக் கலைஞர்களுக்கு இப்படி ஒரு துர்மரணம் ஏற்பட்டுவிட்டதே என்று எல்லோரும் வருந்தினார்கள்.

இவர்கள் இப்படிக் கவலையுடன் பேசிக் கொண்டிருந்தபோதே, வரிசையாக அங்கே இருபது கார்கள் வந்து நின்றன. என்ன ஆச்சரியம். கார்களிலிருந்து அந்த இசைக் கலைஞர்கள் சொல்லி வைத்தாற்போல் வந்து இறங்கினார்கள்.

அன்று ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு சொந்த வேலை .இருந்ததனால் எல்லோருமே அன்று பத்து நிமிடங்கள் தாமதமாக வந்தார்களாம்.

அப்பாடா, தாமதத்தினால் பிழைத்தார்கள் என்று பக்தர்கள் எல்லோரும் பெருமூச்சு விட்டார்கள். சில சமயங்களில் விதி நல்ல பாதையிலும் செல்லும்.

# நாணயக்கார - விக்னேஸ்வரன் சம்பந்திகள் போல் இங்கு ஆயிரக்கணக்கில் உருவாக வேண்டும் - குசலஞான தேரர்



இலங்கையில் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண முதன்மை வேட்பாளர் சி.வி. விக்னேஸ்வரன் போன்ற சம்பந்திகள் போல் ஆயிரக்கணக்கில் உருவாக வேண்டும். அப்போது தான் இனமத தீவிரவாதம் தகர்த்தெறியப்படும் நல்லுறவு நிலவும் என கொழும்பு இலங்கை மன்றக்கல்லூரியில் சனியன்று இடம்பெற்ற சர்வமத தலைவர்கள் மாநாட்டில் உரையாற்றிய வண. குசலஞான தேரர் தெரிவித்துள்ளார்.

நாம் எல்லோரும் மனிதர்கள். பிறந்த வகையில் நாம் இன மதம் கொண்டு பிரிக்கப்பட்டிருக்கிறோம். இது தற்காலிகமானது. அதை மறந்து இனங்களுக்குள்ளே திருமணம் செய்யும் போது பல விபரீத விளைவுகளை தடுக்க முடியும். மொழிப்பிரச்சினையும் தீர வாய்ப்புண்டு.

அதற்காக அவர்கள் மதம் மாற வேண்டிய தேவையில்லை. அவரது மதத்தைப் பேணும் அதேவேளை ஏனையவரது மதத்தையும் மதித்து நடக்க முடியும். இன, மத, மொழி பேதம் பார்த்து பாடசாலைகள் அமைக்கப்பட்டதே இலங்கையின் முதல் சாபக் கேடு. ஒருவரையொருவர் புரியாமல் உள்ளனர். இலங்கையில் இன, மத, மொழி ரீதியான பாடசாலை முறைமை ஒழிக்கப்பட வேண்டும். அதேபோல் இன மத ரீதியிலான அரசியல் கட்சிகளும் ஒழிக்கப்பட வேண்டும்.

# சினிமா சினிமா


◆ "எனக்கும் இயக்குநர் கௌதம் வாசுதேவ்மேனனுக்கும் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், நானும் கௌதம்மேனனும் பழகியது சிறப்பான தருணங்கள். எங்களுக்குள் நல்ல நட்பு இருக்கிறது. "வாரணம் ஆயிரம்" படத்துக்குப் பின் அவருடன் இணையும் வாய்ப்பு அமையவில்லை. அவர் என்னிடம் கதை சொல்லும் போது அது பிடிக்காவிட்டாலும் ஏற்று இசை அமைத்திருக்கிறேன். இப்படி நான் பணியாற்றியது கௌதம் மேனனுக்கு மட்டும்தான். சிலகாட்சிகளுக்கு நான் இசை அமைக்கும் முறை பிடிக்காவிட்டால் என் முகத்துக்கு நேராகவே அதை சொல்லுவார். இப்படித்தான் நாங்கள்பழகினோம். அவருடன் பணியாற்றாமல் இருப்பது எனக்கு இழப்பு இல்லை. ஆனால் அவருக்கு நல்ல படங்களை உருவாக்கும் திறமை ஆசிர்வதிக்கப்பட்டிருக் கிறது. அவரின் திறமை எனக்கு எப்போதும் பிடிக்கும். எதிர்காலத்தில் அவருடன் இணைந்து பணியாற்ற தயாராக இருக்கிறேன்."


- ஹாரீஸ் ஜெயராஜ்















◆ அவ்வப்போது, ஏதாவது ஒரு நடிகையுடன் கிசுகிசுக்கப்படுவது ஆர்யாவின் குணவிசேசம். அந்த நடிகை களுடன் வெளிப்படையாக ஊர் சுற்றி, செய்திகள் வரவைப்பதிலும் கில்லாடி! அந்த வரிசையில், சமீப காலம் வரை நயன்தாராவுடன், "கிசுகிசு"க்கப் பட்டவர், இரண்டாவது உலகம் படத்திற்கு பின், அனுஷ்காவுடன், "கிசுகிசு"க்கப்பட்டு வருகிறார். தனக்கு ஒரு நாள் படப்பிடிப்பு இல்லையென்றாலும், ஐதராபாத்துக்கு பறந்து விடும் ஆர்யா, அங்கு, அனுஷ்கா நடித்து வரும் ராணி ருத்ரம்மா தேவி படப்பிடிப்பு தளத்திலேயே, முகாம் போட்டு விடு கிறாராம். ஆர்யாவுடன் அமர்ந்து, மணிக்கணக்கில் பேசும் அனுஷ்கா, அவரைத் தன் வீட்டுக்கு அழைத்து சென்று, அம்மாவிற்கும் அறிமுகப்படுத்தி உரையாடுமளவிற்கு குடும்ப நண்பர்களாகி விட்டனராம்!

◆ கோலிவுட் ஹீரோக்கள் நேரடி ஹிந்தி படங்களில் நடிப்பது போல், பொலிவுட் ஹீரோக்கள் நேரடி தமிழ்ப்படங்களில் நடிப்பது குறைவு. கமலின் அழைப்பை ஏற்று "ஹேராம்" படத்தில் நடித்தார் ஷாருக்கான். கதையின் அழுத்தத்தை உணர்ந்து "ஆரண்ய காண்டம்" படத்தில் நடித்தார் ஜாக்கி ஷெராப். "கோச்சடையான்" படத்திலும் சிறப்பு தோற்றம் ஏற்றுள்ளார். அமிதாப் தமிழில் நடிக்க விருப்பம் தெரிவித்திருந்தாலும், அந்த வாய்ப்பு அவருக்குக் கை கூடவில்லை. இது போக, பொலிவுட்டின் முன்னணி ஹீரோக்கள் தங்களது படங்கள் தமிழகத்திலும் வெளியாக ஆர்வம் காட்டுகின்றனர். இந்நிலையில் டான்ஸ் சக்ரவர்த்தி என்று பொலிவுட்டில் பெயர் பெற்ற மிதுன் சக்ரவர்த்தி "யாகாவாராயினும் நாகாக்க" என்ற படத்தில் நடிக்கிறார். இந்தப் படத்தின் ஹீரோ ஆதி. சத்யபிரகாா' இயக்குகிறார்.

◆ "இங்க என்ன சொல்லுது" என்ற படத்தில், வி.டி.வி. கணேஷின் மனைவியாக நடித்து வரும் மீரா ஜாஸ்மின், இந்த வேடத்தில் நடிப்பதற்காக, முன்னணி ஹீரோயினாக நடித்த போது வாங்கியதை விட, கூடுதல் சம்பளம் பெற்றுள்ளார். ஆக, சம்பளத்தை உயர்த்திக் கொடுத்தால், இமேஜ் பார்க்காமல், எந்த நடிகருடனும் மீரா ஜாஸ்மின் நடிப்பார் என்று, செய்திகசிந்து விட்டதையடுத்து, மேலும், சில வயதான ஹீரோக்களும், தங்களுடன் டூயட் பாட, மீராவுக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

◆ பாய்ஸ் படத்தில் அறிமுகமான சித்தார்த், பெரும்பாலும், நகரத்து கதைகளிலேயே அதிக மாக நடித்தவர். இப்போது, ஜிகர்தண்டா படத்தில், முதல் முறையாக மதுரை இளைஞராக நடித்துள்ளார். பீட்சா இயக்குனர் கார்த்திக் சுப்புராஜ் இயக்கியுள்ள இப்படத்தில், லுங்கியை மடித்துக் கட்டி, மாட்டை அடக்கும் காட்சியிலும் நடித்திருக்கிறாராம் இந்த சொக்ளேற் போய்!.

◆ 50, 60 களில் உலக சினிமா ரசிகர்களைக் கலக்கிய நடிகைசோபியா லோரன். இன்றைய ரசிகர்களுக்கு, இந்த ஹொலிவுட் நடிகை பற்றி அவ்வளவாகத் தெரியாதிருக்கலாம். ஆனால், 1950இல், இத்தாலியைச் சேர்ந்த சோபியா லோரன், ஹொலிவுட்டுக்கு வந்து, பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார். அக்கால முன்னணி ஹொலிவுட் கதாநாயகர்களான மார்லன் பிரான்டோ, சால்ட்டன் ஹெஸ்டன், போல் நியூமன் மற்றும் கிளார்க் காபில் போன்றோருடன் நடித்து உலகமெங்கும் உள்ள ரசிகர்களைப் பலகாலம் கிறங்கடித்தவர். இப்போது மீண்டும் நடிக்க வந்திருக்கும் சோபியா லோரனுக்கு வயது இப்போது எவ்வளவு தெரியுமா? 78 தான்! இவரது மகனான, எட்வார்டோ போன்ரி இயக்கும் படத்தில் தான் நடிக்கிறார்.


◆ எல்லாரும் பேசிக் கொண்டிருப்போம்.

"எனக்கு வேலை உடனடியாக இருக்கிறதா? இல்லாவிட்டால் கொஞ்சம் தூங்கலாமா?" என்று கேட்பார்.

"சரி, தூங்குங்கள்" என்று சொல்லிவிட்டால், போதும், அடுத்த விநாடியே தூங்கிவிடுவார். அதே போல் தூங்கி எழுந்திருக்கும்போது தூங்கினார் என்று சொல்ல முடியாதபடி அவ்வளவு சுறுசுறுப்பாக வேலை செய்ய ஆரம்பித்துவிடுவார்.

சிவாஜிகணேசனைப் பற்றி டைரக்டர் பி.ஆர். பந்துலு கூறியது.

## உலகிலேயே அழகான குதிரை!



துருக்கியில் இருக்கும் இந்தக் குதிரை தான், உலகிலேயே மிக அழகான குதிரை என்ற பெயரை வாங்கியுள்ளது. தங்க நிறத்தில் இருக்கும் இக்குதிரை, சாலையில் நடந்து வந்தால், ஏதோ தங்கத் தேர் நேரில் வருவது போல், ஜொலிப்பதாக மக்கள் கூடிநின்று பார்வையிடுகிறார்கள். இதன் நிமிர்ந்த நடையும், ஒய்யாரமும், ஜொலி ஜொலிப்பும் பார்ப்பவர்களை கொள்ளை கொள்கிறது. இன்றைய தகவல் தொடர்பு வீச்சில், நேரடியாக குதிரைகளைக் கூட்டி ஓரிடத்தில் அணிவகுப்பு வைத்துப் போட்டி நடத்தாமலே உலகழகுக் குதிரையாக இது ஏற்கப்பட்டுவிட்டது!

## மலேசிய அழகி தமிழ்ப்பெண்!

ஏழைகளின் வாழ்க்கை வளம் பெற, தங்கள் சொத்தின் பெரிய பகுதியை வழங்கும் கோடீஸ்வரர்களின் பெயர்கள், "போர்ப்ஸ்" பத்திரிகையில் வெளியிடுவதுண்டு. இவர்களில், 27வயது மலேசிய அழகியின் பெயரும் இடம் பெற்றுள் ளது. அவர் பெயர், டெபோரா ப்ரியா ஹென்றி. இவர், இரண்டு முறை, "மிஸ் மலேசியா" அழகி பட்டம் பெற்றவர். இவரது கொள்ளு தாத்தா, தமிழகத்தில் இருந்து மலேசியாவிற்கு குடியேறியவர். விவரணப் படங்கள் எடுப்பது, பெட்ரோவின் பொழுது போக்கு. அகதிகளின் வாழ்க்கை பற்றி, படம் எடுக்க, முகாம்களுக்கு சென்ற போது, அங்கு கண்ட காட்சிகள், அவரைக் கலங்கடித்தது.

அவர்களைப் போல், வாழ்க்கை யில் அல்லல்படுவோருக்கு பண உதவி செய்து, மன ஆறுதல் பெற நினைத்தார். அப்படித் தான், தன் பெரும் சொத்துகளின் ஒரு பகுதியை அளித்து, கொடையாளிகள் பட்டிய லில் இடம் பிடித்து இருக்கிறார். இவர் தாய், அயர்லாந்து நாட்டைச் சேர்ந்தவர். அயர்லாந்தில் பிறந்த பெட்ரோ, வளர்ந்தது மலேசியாவில். இருந்தும், தனக்கு தமிழ் உறவு இருப்பதை பெருமையாக கூறுகிறார்.



## கடவுளும் கிரேக்கரும்



கிரேக்கர்கள் ஒவ்வொரு கிரகங்கத்தையும் கடவுளாகக்கருதி வழிபட்டனர்.

புதன் - தொழிலின் கடவுள்
வெள்ளி - காதல் மற்றும் அழகின் கடவுள்
செவ்வாய் - போரின் கடவுள்
வியாழன் - உயிர்கள் எல்லாவற்றுக்கும் கடவுள்
சனி - உழவின் கடவுள்
யுரேனஸ் - சொர்க்கத்தின் கடவுள்
நெப்டியூன் - கடலின் கடவுள்
புளூட்டோ - பாதாளத்தின் கடவுள்

# யாழில் உற்பத்தியாகும் "கள்" மன்னாருக்கு அனுப்ப ஏற்பாடு



யாழ். மாவட்ட தென்னை பனைவள சங்கங்கள் மற்றும் சமாச நிர்வாகத்தினரும் பிரதிநிதிகளும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து தமது தேவைகள் மற்றும் பிரச்சினைகள் குறித்து எடுத்துக் கூறியதுடன் அவற்றிற்கான தீர்வினையும் பெற்றுக் கொண்டனர். அமைச்சரவர்களின் யாழ். பணிமனையில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச்சந்திப்பில் கடந்த காலங்களில் தமது சங்கத்திற்கும் பனந்தொழில்சார் வல்லுநர் குடும்பங்களிற்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் காட்டிய கரிசனைக்கும் மேற்கொண்ட உதவிகளுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்ட பிரதிநிதிகள் தமது தேவைகள் குறித்தும் எடுத்துக் கூறினார்கள்.

குறிப்பாக பனை தென்னை வளத்தினை பயன்படுத்தி தொழில் முயற்சிகளை மேம்படுத்தல், அவற்றின் உற்பத்தி தராதரத்தினை அதிகரித்தல், மற்றும் கலால் திணைக்களத்துடன் முறையான தொடர்புகளைப் பேணி தொழில் முயற்சிகளை மேற்கொள்ளல் உட்பட பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. இக்கலந்துரையாடலில் வடபிராந்திய கலால் திணைக்கள அத்தியட்சகர் கிறிஸ்டி அவர்களும் உடனிருந்தார். மேற்படி சங்க, சமாச பிரதிநிதிகளின் வேண்டுகோள்கள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் மேலதிக திட்டங்கள் தொடர்பில் அவர்களுடன் கலந்துரையாடி, உடனடி நடவடிக்கையாக தென்னை பனைவள உற்பத்திகளில் கலால் திணைக்களத்தின் நடவடிக்கைகள் தொடர்புபட்டிருப்பதனால் அத்தியட்சகரின் அலோசனைகள் அபிப்பிராயங்கள் பெறப்பட்டு முடிவுகள் முன்னெடுக்கப்பட்டன.

குறிப்பாக யாழ். மாவட்டத்தில் உற்பத்தி அதிகரித்துக்காணப்படும் கள்ளினை அது பற்றாக்குறையாக உள்ள மன்னார் மாவட்டத்திற்கு போத்தலில் அடைத்து அனுப்புவதென்றும் இதன்மூலம் கூடிய பலாபலன்களை பனந்தொழில்சார் பயனாளிகள் பெற்றுக் கொள்ள முடியும் என்பதும் கண்டறியப்பட்டது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுடனான யாழ். மாவட்ட தென்னை பனைவள சங்கங்கள் மற்றும் சமாச நிர்வாகத்தினர் மற்றும் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போது பனை அபிவிருத்தி சங்க தலைவர் பசுபதி சீவரத்தினம், வடபிராந்திய கலால் திணைக்கள அத்தியட்சகர் கிறிஸ்டி ஆகியோர் உடனிருந்தனர்.

# இலங்கை இரவில் ஜனாதிபதி பங்கேற்பு



(கொழும்பு)

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு பெலாரஸ் சென்றுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மின்ஸ்க் நகரில் இலங்கை கலைஞர்கள் நடாத்திய கலாசார நிகழ்வில் கலந்து கொண்டார்.

இலங்கையின் சம்பிரதாய நடனங்களைக் கொண்ட "இலங்கை இரவு" என்ற பெயரில் நடாத்தப்பட்ட இந்த நிகழ்ச்சியை பெலாரஸ் மக்கள் மிகவும் ஆர்வத்துடன் பார்த்து மகிழ்ந்தனர்.

பெலாரஸ் பிரதி பிரதமர் எனடோலி டொசிக்- கலாசார அமைச்சர் பொரிஸ் ஸ்வெட்லோ இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் மற்றும் ரஷ்யாவுக்கான இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்க ஆகியோரும் இந்த கலாசார நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# மாகாண சபையின்...

(5ஆம் பக்கத்தொடர்ச்சி...)

இதனாலேயே அவர்களது சுற்றுநிருபத்தை மீற முடியவில்லை உரிய பொருளாதார திட்டங்களை, வருமான அதிகரிப்புக்கான கொள்கைகளை வகுத்து எமது மாகாண சபையின் வருமானத்தின் மூலமே ஊதியங்களை வழங்குவதற்குரிய நிலையை ஏற்படுத்துவோமானால் நாம் சுற்றுநிருபத்தை பொருட்படுத்தத் தேவையில்லை.

**கேள்வி:-** வடக்கு பாடசாலைகளை கல்வியை அபிவிருத்தி செய்ய உங்களிடம் செயற்திட்டங்கள் ஏதும் உண்டா?

**பதில்:**: இதற்கு நான் செயலாளராக கடமையாற்றிய காலத்தில் எனது வழிகாட்டலின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்கள் அதன் மூலம் பொதுப் பரீட்சை பெறுபேறுகளில் எமது மாணவர்கள் முதல் நிலையில் இருந்ததும் பதிலாக அமையும் வடலிகள் வானுயரும்' இலக்கோடு செயற்படுபவன் நான். இதற்கு அவசியமான முன்பள்ளிக் கல்விக்கு வடக்கு கிழக்கு கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட செயல்திட்டங்கள் நல்ல உதாரணம் ஆகும்.

எமது பிரதேசம் கடந்த 30 வருடங்களாக இடம் பெற்ற உள்நாட்டு யுத்தம் காரணமாக எமது பிரதேச மாணாக்கர்களின் கல்விப் பெறுபேறுகள் பெரிதும் பாதித்ததோடு இலங்கையிலேயே மிகக்குறைந்த கல்விப் பெறுபேறு கொண்ட மாகாணமாக மாறியது.

உலகளாவிய ரீதியில் எம்மிலும் பார்க்க கூடுதலாக கல்விப் பாதிப்புக்களை எதிர்நோக்கிய பல நாடுகள் கடைப்பிடித்த கல்விக் கொள்கைகள், திட்டங்கள் எமக்கு முன்னுதாரணமாக அமைநதுள்ளன. இவற்றை நான் ஆழமாக அறிந்துள்ளேன். இந்த அறிவும் அனுபவமும் நிச்சயமாக எமது மாணவர்கள் மீண்டும் முதல் நிலைக்கு வருவதோடு அறிவியல் அடிப்படையில் உலகத்தோடு போட்டி போடக்கூடிய நிலைக்கு கொண்டு வரமுடியும் என நான் திடமாக நம்புகின்றேன்.

**கேள்வி:-** வடக்கில் கலாசார சீரழிவுகள் அதிகரித்து விட்டதாக குற்றம் சாட்டப்படுகின்றதே. மாகாணசபை அதிகாரத்தை எடுப்பவர்கள் அதை எப்படி கையாள முடியும்?

**பதில்:** முதலில் கலாசார சீரழிவு என எதனைக் கருதுகின்றோம் என்று பார்க்கவேண்டும். கலாசாரங்கள் மாற்றமடையும் என்பது தவிர்க்கமுடியாது. ஆனால் எமக்கே உரித்தான பண்பாட்டு விழுமியக்கோலங்களை நவீன நுகர்வோர் கலாசாரம் பாதிக்கும். இத்தன்மை எல்லா நாட்டிற்கும் பொருந்துவது. உலகமயமாக்கலின் பின்னர் பொருளாதாரவிருத்திக்கு தேவையான சந்தைவாய்ப்பு, மனிதவாய்ப்பு எல்லைகளைக் கடந்தவையாக உலகரீதியில் ஏற்பட்டுள்ளது. ஒரு பொருளின் விற்பனை வாய்ப்புக்களும் ஒரு நாட்டின் உற்பத்தி வளர்ச்சியும் அவற்றுக்குரிய



சந்தையின் தன்மை, அளவு என்பதில் தங்கியுள்ளன என பொருளாதார அறிஞர்கள் கூறுவர். பல் புதிய நுகர்வுப் பொருட்கள் எல்லைகளைக் கடந்து உலகரீதியாக அறிமுகமாகும். நுகர்வோர் தமக்கு நன்மை பயக்குமென அல்லது வாழ்க்கைக்கு அத்தியாவசியமென கருதும் நுகர்வுப்பொருட்களை நுகர்வு செய்யும் அறிவு கொண்டவர்களாக அல்லது தகவல்களைப் பெற்றவர்களாக மாறவேண்டும். அதற்கு அவர்களது நுகர்வு சார்ந்த அறிவு வளர்க்கப்பட வேண்டும்.

நுகர்வு கலாசாரத்தை தவிர்க்க முடியாது அதேவேளை எமக்கென உரிய விழுமியங்களையும் பாதுகாக்க வேணடும் என்று முனையும்போதே கலாசாரம் சீரழிகின்றது என்ற எண்ணக்கரு தோன்றும். எமக்கெனவே உரிய சிறப்பான பண்பாட்டு விழுமியங்களை நாம் பாதுகாத்து பேணும்போது தான் எம்மினம் ஒரு தனித்துவமான இனமாக தன்னை நிரூபிக்கமுடியும். இதில் இன்னொரு விடயம் தலைமுறை இடைவெளியாகும். எமது மூதாதையர் வாழ்ந்த சூழல் இப்போது இல்லை. அக,புற சூழ்நிலைகள் மாற்றமடைந்துள்ளன. அதனால் நாம் முன்னர் கடைப்பிடித்த பண்பாட்டு விழுமியங்களை தொடர்ந்து கடைப்பிடிக்க முடியாதவர்களாக மாறி விடுகின்றோம்.

தொடர்பாடல் சக்தி ஏனைய சக்திகளிலும் பார்க்க வலுவானதாக உலகரீதியாக மாற்றமடைந்து வருகின்றது.

எமது இளைஞர்களும்,யுவதிகளும் அந்த தொடர்பாடல் சக்தியினால் ஈர்க்கப்பட்டுள்ளனர். இதிலிருந்து எவ்வாறு விடுபடுவது அல்லது கையாள்வது என்பது ஆழமாக அறிவியல் ரீதியாக அணுகப்பட வேண்டியதாகும். நாம் கூறுகின்ற வடலிகள் வானுயரும் என்ற இலக்கோடு பாடசாலைக் கல்வியிலும் நாளாந்த வாழ்க்கை நிகழ்ச்சிகளிலும் எமது பண்பாட்டு விழுமியங்கள் பற்றிய மனமாற்றத்தினை, பொருத்தமான கொள்கைகளை வகுத்து அக் கொள்கைக்கு ஏற்ப திட்டங்களை தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டும். இதனை மாகாணசபை அதிகாரத்தை கைப்பற்றுவதன் மூலம் செய்யமுடியுமெனக் கருதுகின்றேன்.

**கேள்வி:-** வடக்கு மாகாணசபையில் அரசாங்கத்திற்கு இணக்கமான ஒரு ஆட்சி உருவாகுவதால் என்ன நன்மை என நினைக்கின்றீர்கள்? சர்வதேசம் தமிழ் மக்களை கைவிட்டு விடாதா?

**பதில்:** இதற்கு பதிலளிக்கும்போது நான் ஒரு கேள்வியை கேட்க விரும்புகின்றேன். சர்வதேசம் தங்கள் நலன் கருதாது எங்கள் நலனை மட்டுமே கருததில் கொண்டு எப்போதாவது உதவியுளளதா? உரிமைப்போராட்ட வரலாற்றை உற்றுநோக்குவோமேயானால் இதற்கான விடை கிடைக்கும். ஆசியாவை கட்டுப்பாட்டுக்குள் வைக்க விரும்பும் உலக அதிகாரப்பசி கொண்டோர் எமது நாட்டினை தங்களது செல்வாக்கினுள் வைக்க விரும்புவர். அதற்கு ஏற்ப எமது உரிமைப்போராட்டத்தை கையாளுவர். ஆகவே சர்வதேசம் எம்மை கைவிட்டு விடுமா? என்று நினைக்கும்போது நாம சர்வதேசத்தினால் அதிகளவு நன்மை அடைந்தோமா? அல்லது பாதிப்புக்குள்ளானோமா? என சீர்தூக்கி பார்ப்போமேயானால் நாம் நிறைய பாதிப்புக்களை அடைந்தோம்.

இணக்கமான ஓர் ஆட்சி என்பது அடிமை ஆட்சிமுறையல்ல என்பதை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். இணக்க அரசியல் முறையில் இருந்து விலகி மத்திய அரசாங்கத்தினை எதிரியாக அல்லது எமது உரிமைகளை தர மறுப்பவர்களாக கருதி கடந்த காலத்தில் நாம் மேற்கொண்ட அணுகுமுறைகளினால் நாம் அடைந்தவை எவை? அவற்றை பட்டியலிட நான் விரும்பவில்லை. சுருங்கக்கூறின் எமது இருப்பு ஒரு கேள்விக்குறியான விடயமாக மாறிவிட்டது என சுருக்கமாக கூறலாம். இதனை மாற்றி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி அவர்களது தேவைகளை நிறைவுசெய்து அரசியல் சமூக பொருளாதார மேம்பாடுகளை ஏற்படுத்த வேண்டுமானால் கடந்தகால அணுகுமுறைகள் பொருத்தமற்றவை என்பதை தெளிவாக நாம் புரிந்து கொள்ளலாம்.

இந்த இடத்தில் நான் ஒன்றுகூற பெரிதும் விரும்புகின்றேன். அரசியல் என்பது அறிவியல் சார்ந்த விடயமாகும். தேர்தல்கள் அரசியல் அதிகாரத்தை பெற்றுக்கொள்வதற்கான ஒரு கருவி. ஆகவே வாக்காளர்கள் இந்த மாகாண சபைத் தேர்தலை ஒரு அறிவியல் நிலையிலிருந்து பார்த்து உணர்வாக சிந்தித்து வாக்களிக்க வேண்டும்.

# மரணித்தவர்களின் பெயரால் அரசியல் இலாபம் பெறமுயற்சி



தியாகம் புரிந்தவர்களும் அவர்களின் குடும்பத்தினரும் மட்டுமே தியாகங்களுக்கு உரிமைகோர முடியும் அவர்கள் மட்டும்தான் தியாகத்தைப்பற்றிப் பேசமுடியும். எனவே உயிர்த்தியாகங்கள் புரிந்தவர்களின் தியாகத்தை துஸ்பிரயோகம் செய்யும் வகையில் அவர்களின் பெயரால் அரசியல் இலாபம் தேட முனைபவர்கள் தொடர்பில் மக்கள் விழிபபுடன் இருக்கவேண்டும் என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார். கடந்த ஞாயிற்றுக் கிழமை முட்கொம் பனில் நடைபெற்ற வடக்கு மாகா ணசபைத் தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்துகொண்டு உரை யாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் 17 கட்சிகளில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தி நாம் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்றோம் எமதுகட்சி ஒரு சிரேஸ்ர மந்திரிசபை அமைச்சரை உள்ளடக்கிய மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டது. அந்தவகையில் நாம் எம்மிடமுள்ள அரசியல் பலத்தை வைத்துக்கொண்டு அரசாங்கத்துடன் பேரம்பேசி எமது மக்களின் வாழ்வியல் மேம்பாட்டுக்கும் பிரதேசங்களின் கட்டுமானங்களுக்குமான பல்வேறு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றோம் இது மறுக்கப்படமுடியாத உண்மை. ஏனெனில் கடந்த இருபத்தைந்து வருடங்களாக எமது கட்சியின் அரசியல் பிரசன்னம் இல்லாதிருந்திருப்பின் எமது மக்கள் இன்றும் எவ்வித முன்னேற்றங்களும் அற்ற ஒரு இருண்ட யுகத்திலேயே வாழ்ந்துகொண்டிருந்திருப்பார்கள்.

அதனடிப்படையில் வடக்கு கிழக்கு மாகாண மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அரசின் பங்காளிக்கட்சியாக நாமும் முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தி சில கட்சிகளும் மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தழிழ் கட்சிகளும் இவர்களோடு சிங்கள மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பல அரசியல் கட்சிகளுமாக இடதுசாரிக்கட்சிகள் இணைந்து அரசாங்கத்துடன் இணக்க அரசியலில் ஈடுபட்டு வருகின்றன. அதில் சிறுபான்மைக்கட்சிகள் இந்த இணக்க அரசியலினூடாக தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களின் நலன்கள் சார்பாக செயற்பட்டு வருகின்றனர்.

இது இவ்வாறிருக்க அன்று போராடிய இளைஞர்கள் சிந்திய குருதிக்கும் வியர்வைக்கும் இன்று சிலர் உரிமை கோருகின்றார்கள். இந்தப் போராட்டத்தோடு எவ்வித தொடர்புமற்ற அந்த மனிதர்கள் யுத்தத்தால் நாளாந்தம் மக்கள் அல்லற்பட்டு செத்துக் கொண்டிருந்தவேளை நாட்டின் பாதுகாப்பு நிறைந்த பகுதிகளிலும் வெளிநாடுகளிலும் குடும்பங்களோடு சுகபோகமாக வாழ்ந்தார்கள், அவர்களின பிள்ளைகளையும் பாதுகாப்பாகவும் யுத்தத்தின் சாரலையேனும் அறியாதவகையில் வெளிநாடுகளுக்கு அனுப்பியிருந்தார்கள். ஆனால் இன்று அவர்கள் யுத்தத்தால் மரணித்தவர்களின் தியாகத்தின் பெயரால் சிம்மாசனம் ஏறத்துடித்துக் கொண்டிருக்கின்றார்கள். உண்மையில் தியாகம் புரிந்தவர்களும் அவர்களின் குடும்பத்தினரும் மட்டும்தான் தியாகங்களுக்கு உரிமைகோர முடியும் அவர்கள் மட்டும்தான் தியாகத்தைப்பற்றிப் பேசமுடியும். எனவே உயிர்த்தியாகங்கள் புரிந்தவர்களின் தியாகத்தை துஸ்பிரயோகம் செய்யும் வகையில் அவர்களின் பெயரால் அரசியல் இலாபம் தேட முனைபவர்கள் தொடர்பில் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றார்.

இக் கலந்துரையாடலில் முட்கொம்பன் பிரதேசத்தின் கிராம அபிவிருத்திச்சங்கத்தின் ஐக்கியமக்கள் சுதந்திரமுன்னணியில் போட்டியிடும் வேட்பாளர்களான அன்ரன்அன்பழகன், பிரகலாதன் தவநாதன் ஆகியோரும் மற்றும் மக்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சினால் மகளிர் அபிவிருத்தி அலுவலர்களின் முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சைக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இடம்பெறவுள்ளதுடன் பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் கொழும்பில் நடாத்தப்படவுள்ளது.

விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 20ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்குபடுத்தல் வெளிநாட்டுப்பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் பெலவத்தை,பத்திரமுல்லை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படுவதுடன் கடித உறையின் இடதுபக்க மேல் முலையில் பரீட்சையின் பெயரைக்குறிப்பிட்டு அனுப்பி வைக்கவேண்டும்.

மேலதிக விபரங்களை 23.08.2013 வர்த்தகமானியை பார்வையிடமுடியும்.

## பூநகரி முழங்காவில் பகுதிகளில் சூடுபிடிக்கும் தேர்தல் பிரசாரம்

பூநகரி, முழங்காவில் பிரதேசங்களில் மாகாணசபை தேர்தல் களம் சூடு பிடிக்கத்தொடங்கியுள்ளது. பல்வேறு அரசியல்கட்சி வேட்பாளர்களும் உறுப்பினர்களும் கிராமம் கிராமமாக வீடுகளுக்குச் சென்று பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதேநேரத்தில் பூநகரி வாடியடி நகரப்பகுதியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அலுவலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டு பிரசார நடவடிக்கை முடுக்கிவிடப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

பூநகரி நகரப் பகுதியில் ஒட்டப்பட்டுள்ள தேர்தல் சுவரொட்டிகளை பூநகரி பொலிஸ் பகுதியினர் உடனுக்குடன் அகற்றி வருவதையும் காணமுடிகிறது. (112)

## திணைக்களத் தலைவர்களுடன் ஆளுநர் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)


வடமாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் திணைக்கள தலைவர்களுடனான கலந்துரையாடல் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் அண்மையில் யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது அமைச்சுக்கள் ரீதியாக தற்போதைய செயற்திட்டங்கள் அவற்றின் முன்னேற்ற செயற்பாடுகள் என்பன விரிவாக கலந்துரையாடப்பட்டன. அத்துடன் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பர்க்வும ஆராயப்பட்டு ஆளுநரினால் உரிய தீர்வுகள் வழங்கப்பட்டன.

வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதி பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் இதில் கலந்து கொண்டார்கள்.



# ஆயுர்வேதம்



## சுகப் பிரசவத்துக்கு என்ன செய்ய வேண்டும்?

சிசேரியன் மூலம் குழந்தைப் பிறப்பு அதிகமாகிவிட்ட இந்நாட்களில், சுகப்பிரசவத்தின் மூலம் அடையும் ஆரோக்கியத்தைத் தாய்மார்கள் இன்று பெரிதும் இழந்துவிட்டனர். சுகப்பிரசவம் ஆவதற்கான வழி முறைகளை ஆயுர்வேதம் குறிப்பிட்டுள்ளது.

கருவுற்ற தாய் சாப்பிடும் உணவிலிருந்து பிரியும் சத்தான பகுதி மூன்றுவிதமாகப் பிரிக்கப்பட்டு ஒரு பாகம் தாயைப் போஷிப்பதற்கும் மற்றொரு பாகம் கர்ப்பம் வளர்ச்சியடைவதற்கும், இன்னொரு பாகம், தாய்ப் பாலை வளர்க்கவும் உபயோகப்படுகிறது. மேலும் கர்ப்பத்தின் இதயம் தாயாரின் தாதுக்களின் அம்சத்தாலுண்டாக்கப்பட்டு தாயாரின் இதயத்தோடு இணைக்கப்பட்டிருப்பதால் கர்ப்பத்தின் விருப்பங்கள் தாயாரின் மூலமாகப் பிரதிபலிக்கின்றன. கர்ப்பிணிக்குத் தனது இதயமொன்றும், கர்ப்பத்தின் இதயமொன்றுமாக இரு இதயங்களிருப்பதால் அவளுக்கு 'தௌஹ்ருதிநீ' என்று பெயர். கர்ப்பிணிக்கு ஏதேனும் ஒரு பொருளின் மீது ஆசையேற்பட்டால் அது கர்ப்பத்தின் இச்சையென்று அறிந்து அவளுக்கு அதைக கொடுத்தல் வேண்டும். கர்ப்பிணிக்கு ஏற்படும் இச்சையைத் தடுப்பதால், பிறக்கும் குழந்தை, கூனாகவோ, முடமாகவோ, குள்ளனாகவோ, குருடனாகவோ, முட்டாளாகவோ பிறக்கும். கர்ப்பத்தின் நாபியிலிணைக்கப்பட்டிருக்கும் தொப்புள் கொடி மூலமாகவே உணவின் சத்தும் வீர்யமும், வயல்களுக்குப் பாய்ச்சப்படும் வாய்க்கால் நீர் போலக் கர்ப்பத்தையடைகின்றன.

கருவுற்ற முதல் மாதம் முதலே உண்ண வேண்டிய உணவுமுறைகளையும், செய்யக் கூடாத காரியங்களையும் ஆயுர்வேதம் கூறுகிறது. அவற்றைச் சரியானபடி செய்து வந்தாலே சுகப் பிரசவம் உண்டாகும். அவை –

**முதல் மாதம்:** இனிப்பு, குளிர்ச்சி, திரவம் இவை அதிகமாக உள்ள உணவும், வேண்டிய அளவு குளிர்ந்த பாலும் சாப்பிட வேண்டும்.

**2 ஆவது மாதம்:** பழக்கமுள்ள உணவை, அதிமதுரம், திராட்சை முதலிய இனிப்பான சரக்குகள் சேர்த்துக் காய்ச்சிய பாலுடன் உபயோகிக்கவும்.

**3 ஆவது மாதம்:** சம்பா அரிசியினாலான அன்னத்தைப் பாலுடனோ அல்லது தேன், நெய் முதலியவை கலந்த பாலுடனோ உட்கொள்ளச் செய்யவும்.

**4 ஆவது மாதம்:** பாலுடனும், வெண்ணெயுடனும் சேர்த்த உணவையோ அல்லது ஆட்டு மாமிசத்துடன் இதமான உணவைச் சாப்பிடலாம். தினந்தோறும் பசுவெண்ணெய் கொட்டைப் பாக்களவு கொடுக்கவும்.

**5 ஆவது மாதம்:** பாலும், நெய்யும் கலந்த ஆகாரம் அதிகமாக உபயோகிக்கவும்.

**6 ஆவது மாதம்** : நெருஞ்சில் சேர்த்துக் காய்ச்சிய நெய்யை அளவாகச் சாப்பிட்டு வரவும். சோற்றைக் கூழாக்கிச் சாப்பிடுதல் நல்லது.

**7 ஆவது மாதம்:** மார்பிலேற்படும் அரிப்புக்கு இலந்தைக் கஷாயத்துடன் அதிமதுரம் சேர்த்துக் காய்ச்சிய நெய்யை உள்ளங்கையளவு உள்ளுக்குச் சாப்பிட்டு, வெளிப் பிரயோகத்துக்குச் சந்தனம், கோரைக் கிழங்கு, கஸ்தூரி மஞ்சள் இவற்றைப் பூசவும். அரளி இலை போட்டுக் காய்ச்சிய எண்ணெய் தடவலாம். அரிப்பு ஏற்பட்டால், சொறியக் கூடாது. தாங்க முடியாவிடில் மெதுவாகத் தடவிக் கொடுக்கலாம். ஓரிலை என்னும் மருந்துச் சரங்கைப் போட்டுக் காய்ச்சிய இனிப்புடன் கூடிய உணவு வகைகளைச் சிறிது உப்பு, நெய் சேர்த்து, மிதமாகச் சாப்பிட்டு, சிறிது தண்ணீரைப் பருகவும்.

**8 ஆவது மாதம** நெய்விட்ட பால் கஞ்சியைப் பருகவும்.

**9 ஆவது மாதம்:** அதிமதுரம் முதலிய இனிப்புத் திரவியங்கள் சேர்த்துக் காய்ச்சிய எண்ணெய்யால் எனிமா கொடுக்கவும். அதையே பஞ்சில் தோய்த்து பிறப்புறுப்பில் வைக்கவும். இதனால் வயிறு, இடுப்பு, பக்கம், முதுகு, முதலான இடங்கள் மிருதுவாகி, வாதம் கீழ்நோக்குவதோடு, மலம், சிறுநீர் அவற்றின் நிலைமைகளிலிருந்து வருவதால், கர்ப்பமும் சரியானபடி புஷ்டியடைந்து சுகப் பிரசவமுண்டாகிறது. பிறந்த குழந்தைக்குப் பால் எவ்வாறு அவசியமோ, அதைக் காட்டிலும் கர்ப்பிணிக்குப் பால், நெய் இவை கலந்த ஆகாரம் அத்தியாவசியம் என்பது கவனிக்கத்தக்கது.

---

### கர்ப்பிணி செய்யக் கூடாத காரியங்களும் அதனால் ஏற்படும் தீமைகளும்:

1. மிகவும் உயர்ந்ததும், சிரமத்தைக் கொடுக்கக் கூடியதுமான மேடு பள்ளங்களுள்ளதும், கடினமாக உள்ளதுமான இடங்களிலும் இருக்கைகளிலும் உட்காரக் கூடாது.

2. மலம், சிறுநீர் உந்துதல்களை அடக்கக் கூடாது. கடுமையான அல்லது தனக்கு உகந்ததல்லாத உடற்பயிற்சி செய்யக் கூடாது.

3. மல்லாந்து படுத்துக் கொள்ளக் கூடாது. அதனால் தொப்புள் கொடி குழந்தையின் கழுத்தில் சுற்றிக் கொள்ளும்.

4. அதிக காரம், சூடான வீர்யமுள்ள உணவுகளைப் பயன்படுத்தக் கூடாது. வயிற்றுக்குப் போதாமல் சாப்பிடக் கூடாது. இவற்றால் சில சமயம் குழந்தை இறக்க நேரிடலாம். அல்லது அகாலத்தில் நழுவலாம். அல்லது சூம்பிப் போகலாம்.

5. உடம்பை மூடிக் கொள்ளாமல் படுத்துக் கொண்டாலும், இரவில் சஞ்சாரம் செய்தாலும் சிசுவுக்குச் சித்த பிரமை உண்டாகும்.

6. சண்டை, கலகங்களில் ஈடுபட்டால் சிசுவுக்குக் காக்கை வலிப்பு உண்டாகும்.

7. எப்போதும் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தால் பயப்படும் சுபாவமுள்ள குழந்தை பிறக்கும். இவையனைத்தும் சீரானபடி கடைப்பிடித்தால் சுகப் பிரசவத்தைக் கெடுக்கும்.

# அழிவுகள் அகற்றப்பட்ட பாதை நோக்கி நகர்கிறோம்

யுத்தத்தின் சத்தங்களும், அழிவுகளும் அகற்றப்பட்டு தெளிவான பாதையை நோக்கி நாங்கள் நகரத்தொடங்கி இருக்கின்றோம் என ஈ.பி.டி.பி யின் யாழ்.மாவட்ட அமைப்பாளரும், வடமாகாண சபைத்தேர்தலில் ஐ.ம.சு.முன்னணியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளருமான கந்தசாமி கமலேந்திரன் (கமல்) அவர்கள் தெரிவித்துள்ளார்.




வடமாகாண சபைத்தேர்தலை முன்னிட்டு ஈ.பி.டி.பி யின் தேர்தல் பிரசார ஒன்றுகூடல்கள் அண்மையில் வடமராட்சி மற்றும் தென்மராட்சி பிரதேசங்களில் பல்வேறுபட்ட இடங்களில் நடைபெற்றன. இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், மாகாண சபை முறைமையை நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்ற நிலையில் எமது கொள்கைக்காக பல இன்னுயிர்களை விலையாகக கொடுத்து, கொள்கைப்பற்றுடன் எதற்குமே சளைக்காது எமது நீண்ட நெடும் அரசியல் பயணம் தொடர்கிறது. தோழமையுடன் உறவாடிய தோழர்களின் உயிர்த் தியாகங்களுடன் தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுக்க திட சங்கற்பம் பூண்டு எமது தலைவரின் உன்னதவழியில் செயற்பட்டு வருகின்றோம். ஆனால், இறுதி யுத்தத்தில் வன்னியில் இருந்து தப்பியோடி தென்னிலங்கையில் சுகபோகம் அனுபவித்தவர்கள் இறுதிப்போரில் உயிரிழந்த தமிழ் மக்களிற்காகவும், அவர்கள் பட்ட துன்பங்களுக்காகவும் நீலிக் கண்ணீர் வடிககின்றனர். அம் மக்களின் உயிரிழப்புக்களை தமது தேர்தல் வெற்றிக்காக கூட்டமைப்பு பயன்படுத்தி வருகின்றது.அத்துடன் தமிழ் மக்களாகிய நாம் இருப்பவற்றை பாதுகாத்துக்கொண்டு இல்லாதவற்றை பெறுவதற்கான நடவடிக்கையினை முன்னெடுக்கவேண்டும். அதைவிடுத்து இருப்பவற்றையும் இல்லா தொழிக்கின்ற நிலை ஏற்பட ஒருபோதும் இடமளிக்கக்கூடாது. யுத்தத்தின் சத்தங்கள் இப்பொழுது எமது தேசத்தில் இருந்து முற்றாக தூக்கி வீசப்பட்டுள்ளது. அழிவுகளும் அகற்றப்பட்டு தெளிவான பாதையை நோக்கி நாங்கள் நகரத் தொடங்கி இருக்கின்றோம். கண்ணீர் காவியங்களாக இருந்த எமது மக்களின் வாழ்க்கை சுபீட்சகரமாக மறுமலர்ச்சி அடைந்து வருவதுடன் எமது பிரதேசங்கள் பலவிதமான அபிவிருத்தியைக் கண்டுவருகிறது. இந்த சந்தர்ப்பத்திலே உங்களுடைய சிந்தனைகள் தெளிவான பாதைகள் நோக்கியும் சரியான தலைமையை நோக்கியதாகவும் இருக்கும் என நம்புவதுடன் சமுதாயத்திற்கு சரியான பாதையினைக்காட்டவும் தவறமாட்டீர்கள் என நம்புகிறேன். எனக் கேட்டுக் கொண்டார்.

இவ் ஒன்றுகூடல்களில் வடமாகாண சபைத் தேர்தலில் ஈ.பி.டி.பி யின் சார்பில் ஐ.ம.சு.முன்னணியின் முதன்மை வேட்பாளர் தவராசா, வேட்பாளர்களான சிறிரங்கேஸ்வரன்(ரங்கன்), சூ.அலெக்சான்டர் (சார்ள்ஸ்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பால் கொள்வனவு துரிதம் கால்நடை வளர்ப்போர் மகிழ்ச்சி

(பூநகரி)

பூநகரி கால்நடைவளர்ப்போர் கூட்டுறவுச்சங்கத்தின் பால் கொள்வனவு செய்து சந்தைப் படுத்தும் நடவடிக்கைகளால் மாட்டுப் பண்ணையாளர்கள் மாதந்தோறும் நல்ல வருமானத்தை ஈட்டும்நிலை ஏற்பட்டுள்ளதாக சிறுபான்மைச் சொந்தக்காரர்கள் தெரிவிக்கின்றனர்.

தினமும் சேகரிக்கப்படும் பல நூற்றுக்கணக்கான லீற்றர் பாலில் தமது உற்பத்திகளுக்கு தேவையான பால் போக மிகுதிப்பால் தினமும் நெஸ்லே நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்படுவதாக சங்கத்தின் தலைவர் தெரிவிக்கிறார்.

மாதம் ஒரு தடவை ஆயிரக் கணக்கான நல்லினக் கோழிக் குஞ்சுகள் தருவிக்கப்பட்டு மக்களுக்கு விநியோகிக்கப்படுவதால் கிராம மக்கள் கோழிவளர்ப்பில் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர். எதிர்வரும் 3 ஆம் திகதி கோழிக் குஞ்சுகள் விநியோகிக்கப்பட விருப்பதால் தேவையானோர் பதிவை மெற்கொண்டு வேண்டிய குஞ்சுகளைப் பெறமுடியுமென தெரிவிக்கப்படுகிறது. (112)

# துறவறத்திற்கு கண்டனம்

பிரபல நடிகர் சனத்குணதிலகவின் துறவற வாழ்விற்கு பௌத்த பிக்குகள் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளனர்.

முழுச் சங்க சமூகத்தையும் அவமரியாதை செய்யும் வகையில் சனத் குணதிலக பௌத்த பிக்குவாக துறவறம் பூண்டுள்ளார் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.பௌத்த துறவறத்தின் மீது அக்கறையுடையவர்கள் இந்த நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கியிருக்க மாட்டார்கள்.

நடிப்பு நோக்கத்திற்காக துறவறத்தில் நுழைவது ஏற்றுக் கொள்ளக் கூடியதா? உலக ஆசைகளைத் துறந்து மெய்யான அர்ப்பணிப்புடன் பௌத்த பிக்குவாக மாறியிருக்க வேண்டும். மாறாக, அனுபவம் பெற்றுக் கொள்ளும் நோக்கில் பௌத்த துறவறத்தை பூணுவது கண்டிக்கப்பட வேண்டியது என சோபித தேரர் தெரிவித்துள்ளார்.


# வவுனியா சிறைக்கு மாற்ற நடவடிக்கை

(வவுனியா)

போதைப்பொருள் பாவனையால் குற்றவாளியாகும் நபர்களை புனர்வாழ்வளிப்பதற்கு சேனபுரவில் அமைக்கப்பட்டுள்ள புனர்வாழ்வு மையத்திற்கு அனுப்பி வைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தற்போது சேனபுர புனர்வாழ்வு மையத்தில், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் சிலருக்கு புனர்வாழ்வளிக்கப்படுவதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் பீ.எஸ்.விதானகே குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களை வவுனியா சிறைச்சாலைக்கு மாற்றிய பின்னர், போதைப்பொருள் பாவனையால் குற்றவாளியாகும் நபர்களை சேனபுரவிற்கு அனுப்புவதற்கு திட்டமிட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.



# பரமர் சங்கமம்

'ஆலையில்லா ஊருக்கு இலுப்பைபூ சக்கரை"எண்ட பழமொழி இப்பத்தே புதுக்கவிதைபோல தான் எனக்குப் படுகுது.புதுக்கவிதைகள் அரைவாசி விளங்கியும் மீதி, விளங்காமலும்தானே எழுதப்பட்டு வருகின்றன.அதைப்போல ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சக்கரை ஆனதெப் படி?இலுப்பைப்பூ உவர்ப்புச் சுவைதரக்கூடியது. ஆலையும் இலுப்பைப்பூவையும் இணைத்துக்கொண்டது. 'முழங்காலுக்கும் மொட்டந் தலைக்கும்"எடுத்துக்கொண்ட ஒப்பீடாகவே படுகிறது.ஆயினும் பழமம் எனச்சொல்லப்படும் பின் நவீனத்துவ உணர்வினை வரவழைத்து நோக்கின் ஒரு பொருள் இல்லாத இடத்து இலுப்பைப்பூவைப் போன்ற உவர்ப்புக்கூட சக்கரையாக இனிக்கும் எனத்தானே கொள்ள வேண்டும்.

சமீபத்தில் நடந்தேறிய 41ஆவது இலக்கியச் சந்திப்பில் பெண்ணியம் பெண் கவிதைகள் பற்றி அதிகமாகப்பேசப்பட்டிருந்தது.புலம்பெயர்ந்து இலக்கிய பெண்ணாக வாழ்ந்துவருபவரான சுமதிரூபன் என்பார் உண்மை நிகழ்வுகளை வெளிப்படுத்தி இருந்தார். அத்தான் முறையானவர் தன்னுடைய குழந்தைப்பருவத்தில் பாலியல் உணர்ச்சிகளைக் கிளறியதாகவும், அதனில் இருந்து ஒதுங்கிப் புலம் பெயர்ந்து கனடாவில் இருக்க அங்கேயும் அந்நபர் வந்து விட்டதாகவும் வெளிப்படுத்தி இருந்தார். அவரது வெளிப்படுத்தலை துணிவென உணர்ந்து கொண்ட பலர் கருத்துரைக்கு பெரும் வரவேற்பு வழங்கியதை அனுபவிக்க முடிந்தது.சில வருடங்கள் முன்பாக பெண் எழுத்தாளர் சந்திரகாந்தா முருகானந்தன் மகளிர் தினக்கதையாக "ஞாயிறுதினக்குரலில்"எழுதி இருந்த "பெரியத்தான்"சிறுகதையும் இவ்வாறான கருவைச் சித்தரித்திருந்தது. ஒருவழிப்பாதையாகச் சொல்லப்படும் கதைக் கருவூலங்களில் ஆண்களின் சில்மிசங்கள் பெண்களால் வெளிப்படுத்துவது அதிகமாகக் காணப்படுகிறது. அதேவேளை பெண்களின் சில்மிசங்கள் வெளிப்படுத்தப்படுவதில்லை. அதுவும் 'ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சக்கரையாக"ஆண்களின் சில்மிசங்கள் அமைந்து விட்டதாக் அமையலாம். பெண்களுக்கு ஆண்களால் விளைவிக்கும் இடையூறுகள் இலுப்பைப்பூ போன்றே கசப்பான சங்கதி ஆயினும் சுவையூட்டு "கிசுகிசுவாக விளங்குவதனால் சக்கரையாக இருக்குமோ?உலகத்தில் நடக்காத சங்கதிகளே இல்லை என்றிடலாம்.அதனை மறைத்து வைத்து கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்படுத்துகையில் சுவையாகவும், துணிச்சல் மனப்பான்மை கொண்டதாகவும் கருதப்படுகின்ற மாயை அல்லவா இது? பொதுவாக உயிரினங்கள் அனைத்துமே உடலைப்பேண உழைத்து உண்டு புஷ்டிசேர்கையில் ;பாலியல் உணர்ச்சிகளுக்கு உள்ளாவது இயல்பாக உள்ளதால்,அதன் பின்விளைவுகள் இத்தகைய கிளர்ச்சி கலை,இலக்கியம், சினிமா,என்பவற்றின் ஊடாக வெளிப்படுவதும்,படுத்துவதும் இனிப்பாகத்தானே இருக்கும்.இல்லையே பின்னை.....

# முரசின் இன்றைய பலன்




(28.08.2013 புதன்கிழமை)


விஜய வருஷம் ஆவணி மாதம் 12 ஆம் திகதி.
அட்டமி முழுநாளும் அமிர்தசித்தநாமயோகம் கார்த்திகை நட்சத்திரம்
பி.ப 04.14 வரை,பின் ரோகிணி
இராகுகாலம 12.05- 01.35 வரை.
சுபநேரம 04.35- 06.05 வரை.


ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | சகோதரர் உதவியினால் வெளியூர் யோகம், பணவரவு,நட்பினால் தொழில் வாய்ப்பு, வங்கியால் உதவி,சிறைவாசம் முடிதல். |
| ரிஷபம் | பரீட்சை முடிவினால் ஆனந்தம், திருமணம் கைகூடல், பொன்னான சந்தர்ப்பம் ஒன்றைத் தவற விடுதல், நோய்க்கு வைத்திய முயற்சி,பணவரவு. |
| மிதுனம் | வேகத்தை விட விவேகத்தினால் தப்பிவிடல், மனைவியுடன் நிலவிய தகராறு மறைதல்,மக்களின் நடத்தையினால் மனக்கிலேசம்,நோய் நீங்கப்பெற்று மனை திரும்பல். |
| கடகம் | தாயாரின் நோய் நீங்கும் நிலைப்பாடு, வாடகைக்கு மனை வியாபார நிலையம் தேடித்திரிதல், சுபகாரியமொன்று நடாத்தபணம் கடன் பெறல். |
| சிம்மம் | வேலைவசதி பெற பிரமுகரின் கருணை,பிதாவின் உதவியினால் வர்த்தக நிலையம் திறக்கும் யோசனை, பரீட்சை முடிவினால் கல்வி மேலும் தொடரும் நிலைப்பாடு. |
| கன்னி | தற்காலிகமாக பயணத்தை ஒத்தி வைத்தல், மனையில் மங்கள நிகழ்ச்சி,தம்பதியர் மத்தியில் கருத்து வேற்றுமை தாண்டவமாடல்,தொழில் பற்றிய கலக்கம். |
| துலாம் | தொடர்ந்து நச்சரித்ததால் பணவரவு,இடப்பக்க உறுப்பு விபத்தினால் பாதிப்படைதல்,புலன் விசாரணையின் பின்னர் விவாகத்தைக்கைவிட்டு விடுதல். கௌரவப் பதவிக்கு சிபார்சு. |
| விருச்சிகம் | வியாழசுகமின்மையால்காரியத்தில்தடங்கல், இடைததங்கல் நாட்டினின்றும் தாயகம் திரும்பும் அவலம், சொத்துப்பிரச்சினை சகோதர உறவு கெடச்செய்தல். |
| தனுசு | கண்டதே காட்சி கொண்டதே கோலமெனத் திரிந்ததால் மனத்துக்கம்,நோய்கட்டுப்பாட்டுக்கு வரல், முரண்பாடு தீர்ந்து மனச்சந்தோஷம்,காலாவதியான மருந்துப் பொருட்கள் பற்றிய கவனம். |
| மகரம் | காயங்கள் ஏற்படலாம்,மாமன் உறவினால் வசந்தம் காதலில் வீசிய புயல் தணிதல்,திருட்டுப்போன பொருட்கள் கிடைத்தல்,மருத்தீடு பற்றிய நம்பிக்கையினால் பரபரப்படைதல். |
| கும்பம் | தொழிலினின்றும் இளைப்பாறும் உத்தேசம், சகோதரர் உறவில் ஏற்பட்டிருந்த விரிசல் மறைதல், குழந்தைப் பாக்கியம்,வாகனயோகம்.பணவரவு. |
| மீனம் | வேலைசெய்ய வருபவர்களால் திருட்டுப்போகும் அபா யம்,சுபகாரியம் நடாத்த கடன்கேட்கும் நிலை, ஆவணங்கள் கொண்டு செல்ல மறந்ததினால் தண்டம். |

6. மு.ப. 9 மணிக்கு 20 நிமிடம் என்னும் நேரத்தை நியம நேரத்தில் அருகிலுள்ள கடிகாரத்தில் காட்டுக.




7.  வீட்டிற்கு தென்மேற்கு திசையில் பந்து ஒன்றை வரைந்து காட்டுங்கள்.



8. படத்தில் விரிகோணங்களை X அடையாளப்படுத்திக் காட்டுக.

9. தரப்பட்டது அரியம் என்றால்



1. உச்சிகள் எத்தனை? ....................

2. செவ்வக முகங்கள் எத்தனை? ....................

10. வட்டவடிவமான வெள்ளி நிறமல்லாத நாணயங்களில் பெறுமதி குறைந்த நாணயம் எது? ....................

**(15) அட்டவணையை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | காலி |
| | | | | | நீர்கொழும்பு | 112 |
| | | | | கொழும்பு | 112 | 260 |
| | | | கண்டி | 315 | 210 | 550 |
| | | மன்னார் | 540 | 185 | 238 | 120 |
| | அம்பாறை | 280 | 270 | 210 | 280 | 150 |
| புத்தளம் | 300 | 250 | 170 | 180 | 125 | 200 |

1. மன்னாரிலிருந்து நீர் கொழும்புக்குள்ள தூரம் எத்தனை கிலோமீற்றராகும்? ....................

2. கொழும்பிலிருந்து அம்பாறைக்குள்ள தூரம் எத்தனை கிலோமீற்றராகும்? ....................

3. அட்டவணைகாட்டி நிற்பதைக் கொண்டு மிகக்கூடிய தூரம் கொண்ட இரு நகரங்களும் எவை? ....................

4. 540km தூரங்களை உள்ளடக்கிய இரு நகரங்களும் எவை? ....................

5. ஒருவர் கண்டியிலிருந்து கொழும்பிற்கு வந்து கொழும்பிலிருந்து காலிக்குச் சென்றால் அவர் பயணஞ் செய்த மொத்த தூரம் எவ்வளவு?

கண்டி → கொழும்பு → காலி .................... + .................... = ....................

**(16) பின்வரும் தலைப்புக்கு பொருத்தமான ஆறு வாக்கியங்கள் எழுதுக.**
இலக்கணரீதியிலான தொடர்பு சரியாக அமைய வேண்டும்.
"நான் விரும்பும் கிராமிய விளையாட்டு"

1. ....................
2. ....................
3. ....................
4. ....................
5. ....................
6. ....................



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - II
1மணி 15 நிமிடம்

# கல்வி முரசு

வெளியீடு



**பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை தருக**

ஓடும் உதிரத்தில் - வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப்பார்த்தாலும் - சாதி
தெரிவதுண்டோ அப்பா

நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற்குலத்தார்
தின்மை செய்பவரே - அண்டித்
தீண்ட ஒண்ணாதார்

1. இப்பாடல் மூலம் மக்களுக்கு உபதேசம் செய்தவர் யார்? ....................
2. உதிரம் என்பதன் ஒத்த சொல்லைத் தருக? ....................
3. "மேற்குலம்" என்பதன் எதிர் சொல்லைத் தருக? ....................
4. உலகம் விரும்பும் மக்கள் எத்தகையோராவர்? ....................
5. 'தீமை' என்ற சொல்லை விளக்கிநிற்கும் இன்னுமொரு சொல்லை பாடலிருந்து எழுதுக.? ....................
6. 'செய்பவரே' என்ற சொல்லை பன்மையில் குறிப்பிடுக? ....................
7. சாதி வேறுபிரித்து அறியமுடியாத இரு விடயங்கள் எவை? ....................
8. படர்க்கை ஒருமைப் பெயர்ச் சொல்லொன்றை பாடலிருந்து எழுதிக்காட்டுக? ....................
9. 'மேற்குலத்தார்' என்ற சொல்லை பிரித்தெழுதுக? ....................
10. செயற்படுபொருள் அடைமொழி ஒன்றை குறிப்பிடுக? ....................

**(2) பின்வரும் எழுத்துக்களில் காணப்படும் உயிர்க்குறிகளின் பெயர்களை எழுதுக.**

1. மை .................... 2. விரி ....................
3. சீ .................... 4. வே ....................

**(3) பின்வரும் பேச்சுவழக்கு சொற்களின் சரியான தமிழ்ச் சொல்லை எழுதுக.**

1. புள்ளங்க .................... 2. சிரித்சோம் ....................
3. அவையள் .................... 4. அழுறாய் ....................

**(4) பொருத்தமான குறியீடுகள் இட்டு மீண்டும் அவற்றை எழுதிக்காட்டுக.**

பரதன் குகனிடம் நாம் கங்கையைக் கடக்க வேண்டும் என்று கூறினான்

....................

**(5) மரபு தொடர்களின் உட்பொருளை குறிப்பிடுக.**

1. எலும்பும் தோலும் .................... 2. சுகதுக்கம் ....................

**(6) ஒலி மரபுச்சொற்களை பயன்படுத்தி வாக்கியத்தை பூரணப்படுத்துக.**

1. ஆந்தை அலறும் அதுபோல தேனீ ....................
2. புலி உறுமுவது போல மயில் ....................

**7) வெற்றிடத்தை நிரப்புக.**

1. எழுபத்தைந்தாவது ஆண்டு முடிவில் எடுக்கப்படும் விழா ..............................
2. விபத்துக்களில் சிக்கியவர்களுக்கு உடனடியாக அளிக்கப்படும் சிகிச்சை ..............................

**(8) இரு வாக்கியங்களையும் சேர்த்து ஒரு வாக்கியமாக எழுதுக.**

1. மழை பெய்தது
2. காடுகள் அடர்ந்து வளர்ந்தன.

..............................

**(9) பின்வரும் ஆங்கில சொற்களின் கருத்தை தமிழில் எழுதுக.**

1. Good .............................. 2. We are going ..............................
3. Thank you ..............................

**(10) பின்வரும் தமிழ் சொற்களுக்கான ஆங்கிலச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.**

1. சுகம் எப்படி ..............................

**(11) பின்வரும் சிங்கள சொற்றொடரின் கருத்தை தமிழில் எழுதுக.**

1. நங்கி பத் உயனவா ..............................

**(12) மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. மணமில்லா பூக்களின் கூட்டம்
   1. ரோஸா, மல்லிகை 2. செவ்வரத்தை, காட்டுமல்லிகை
   3. மல்லிகை, பவளமல்லிகை 4. சுரைபூ, செம்பருத்திப்பூ

2. கூட்டுப்பழமாக கொள்ளக்கூடியது.
   1. வாழைப்பழம் 2. பலாப்பழம் 3. கொய்யாப்பழம் 4. திராட்சைப்பழம்

3. சைக்கிள் ஓரிடத்திலிருந்து இன்னுமொரு இடத்திற்கு நகர உதவியாக இருப்பது.
   1. பற்சில்லுகள் 2. சங்கிலி 3. மிதி 4. தடுப்பு

4. மிக விஷமுடைய பிராணியாக கொள்ளக் கூடியது.
   1. பூராண் 2. மண்புழு 3. புலிமுகச்சிலந்தி 4. கீரி

5. பின்வருவனவற்றுள் கூட்டமாக வாழும் தலைவனை இனங்காண முடியாத இயல்பை கொண்டிருப்பவை
   1. கடியான் 2. மான் 3. மந்தை 4. கோழி

6. விவசாயத்துக்கு உதவும் தோழன் பின்வருவனவற்றுள் எது?

1.  2.  3.  4. 

7. வற்றலாக்குதல் மூலம் பேணக்கூடிய உணவொன்று.
   1. கிழங்கு 2. மீன் 3. மாம்பிஞ்சு 4. மரவள்ளி

8. துருப்பிடித்த ஊசி யொன்று கையில் குத்திய வேளை அதன் விஷத்தினைப் போக்க பயன்படுத்தக் கூடியது?
   1. பாம் பூசுதல் 2. மரமஞ்சளை அவித்து குடித்தல்
   3. சுடு நீரில் ஒத்தடம் வைத்தல் 4. டிட்டோல் பூசி கழுவுதல்




9. இப்பையைச் சுற்றி தைக்க உகந்த தையல் அலங்காரம் எது?



1. சோம் தையல் 2. கம்பளித்தையல்
3. நூலோடுதல் 4. கோழிக்கால் தையல்

10. பொதுவாக வாகனங்கள் தயாரிக்க தேவைப்படும் மூல வளம் எது?
    1. இரும்பு 2. அலுமினியம் 3. பித்தளை 4. வெள்ளி

11. சந்தைகளில் ஈக்களை விரட்ட கையாளும் இரசாயனப் பொருள்
    1. காபைட் 2. மலத்தீன் 3. ஸ்பிரிட் 4. மண்ணெண்ணெய்




12. 

இவ் உடுக்கோலம்
1. கலப்பை 2. பெருநாய்
3. சிறுநாய் 4. தேள்

13. ஊதுவர்த்தி புகை மூலம் அறியக்கூடிய காற்றின் பண்பு.
    1. காற்று வீசும் திசை 2. காற்றின் பயன் 3. காற்றின் வேகம் 4. காற்றின் பயணம்

14. இலங்கையில் சனத்தொகை கூடிய மாவட்டம் எது?
    1. கொழும்பு 2. அநுராதபுரம் 3. கண்டி 4. இரத்தினபுரி

**(13) பின்வரும் உபகரணங்களினால் ஆற்றக்கூடிய பணியைக் குறிப்பிடுக.** (14 புள்ளிகள்)

1. .............................. 2. .............................. 3. .............................. 4. ..............................

| அறுவடை செய்தல், பலகையை அழுத்தமாக்கல், ஆணிபிடுங்குதல், பலகையை வெட்டல், சுரையை இறுக்குதல், திருகாணிகளை கலட்டல் |
|---|

(04 புள்ளிகள்)

**(14) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. குமார் ஒரு நாளைக்கு 6 மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை இரண்டு மேசைக்கரண்டிகள் வீதம் மருந்து குடிப்பார் எனின் 1 வாரத்தில் அவர் குடிக்கும் மருந்தின் அளவை ml இல் தருக?


..............................

2. மோட்டார் கார் ஒன்று 15 நிமிடங்களில் 8km தூரம் பயணம் செய்யும் எனின் 1 மணித்தியாலம் 30 நிமிடங்களில் அது பயணிக்கக் கூடிய தூரம் எத்தனை கிலோமீற்றர்?

..............................

3. சம நிறையுள்ள 5 விசுகோத்து பைக்கற்றுகளின் நிறை 3kg 750g ஆகும் எனின் ஒன்றின் நிறை யாது?

..............................

4. 

தரப்பட்ட ஒரு சதுர சென்றிமீற்றர் இடைவெளியில் அறையப்பட்ட ஆணிப்பலகை ஒன்று என நினைத்து அதில் $8cm^2$ சென்றிமீற்றருக்கான உருவொன்றை வரைந்து காட்டுக. / இணைத்துக்காட்டுக.

5. கழிக்குக. $\frac{3}{4} - \frac{5}{8} = \square$

# ஆசிரியர்கள் அரசியலுரிமையை சரியாகப் பயன்படுத்தவேண்டும்

## -இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள்-

மாகாண சபைத் தேர்தலில் அதிபர்களும் ஆசிரியர்களும் தமது அரசியல் உரிமைகளை சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சங்கத்தின் தலைவர் வி.ரி.சகாதேவராஜா, பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

அரசியல் சார்ந்த கருத்துக்களில் தெளிவில்லாதவர்களுக்கு தெளிவை ஏற்படுத்த வேண்டியது அதிபர்கள், ஆசிரியர்களின் தலையாய கடமையாகும். மாணவப் பருவத்திலேயே அரசியல் அறிவைப் பெற்றுக் கொள்வதற்கு வழிகாட்டிகளாக இருப்பவர்கள் ஆசிரியர்களே. அரசியல் விஞ்ஞானத்தை ஒரு பாடமாகக் கற்பிக்கும் ஆசிரியர்கள் இதில் மிக முக்கியமானவர்கள்.

அரசியலில் ஈடுபடுதல், வாக்களிக்கும் உரிமை, வாக்களிப்பு முறை என்பன தொடர்பாக எமது மக்களிடத்தே நெடுங்காலமாக தெளிவின்மை காணப்படுகின்றது. அதற்கு கடந்த காலங்களில் தேர்தல்களில் மக்களுக்கு முறையான விருப்பங்கள் இருக்கவில்லை என்பது உண்மை. அதற்கு கடந்தகால தேர்தல்களில் நம்பிக்கையின்மை மற்றும் ஜன நாயகத்தில் நம்பிக்கையின்மையை காரணமாகக் கூற முடியும்.

ஆனால் அந்த விருப்பமின்மை தொடருமாக இருந்தால் அரசியல் ரீதியாக பெறக்கூடிய உரிமைகள், வெளிப்படுத்தக் கூடிய கருத்துக்கள் என்பவற்றை ஜனநாயக விரோதிகள் துஸ்பிரயோகம் செய்வதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தும்.எந்தவொரு தேர்தலாக இருந்தாலும் அது ஜனநாயக முறைப்படி நடைபெறுவதனை உறுதிப்படுத்துபவர்கள் அதிபர் ஆசிரியர்களே. இவர்களில் பெரும்பாலானவர்கள் தேர்தல் கடமைகளில் ஈடுபடுபவர்கள். பொதுவாக எம்மவர்கள் கடந்தகாலங்களில் மிகக் குறைவான வீதத்திலேயே வாக்களித்திருந்தார்கள்.

அந்நடைமுறை இம்முறை தொடர்ந்தால் நம்மை நாம் ஆளுகின்ற நிலை எம்மை விட்டுச் சென்று விடும்.தெரிந்தோ தெரியாமலோ தேர்தலொன்றுக்குள் உள்ளீர்க்கப்பட்டுள்ளோம். எனவே 100 வீதம் வாக்களிப்பதை உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும்.

எனவே நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலில் அனைத்து வாக்காளர்களும் வாக்களிக்கும் உரிமையைச் சரியாகப் பயன்படுத்துவதற்கு அதிபர்களும் ஆசிரியர்களும் வழிகாட்டிகளாக இருக்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றோம்.ஆரம்ப வருடாந்த சம்பளமாக ரூபா 74160.00ஐ பெறுகின்றவர்களுக்கும் அதற்கு மேலே பெறுகின்றவர்களுக்கும் வருடாந்த சம்பளஏற்றமாக ரூபா 1560.00 யும் அதற்கு மேலேயும் பெறுகின்ற பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு அரசியல் உரிமைகள் கிடையாது.அதாவது இலங்கை கல்வி நிர்வாக சேவை அனைத்து தரத்திலும் உள்ளவர்களுக்கும் இலங்கை ஆசிரிய கல்வியாளர் சேவை அனைத்து தரத்திலும் உள்ளவர்களுக்கும் அரசியல் உரிமை கிடையாது.

ஆனால் அதிபர் சேவை, ஆசிரிய சேவை அனைத்து தரத்திலும் உள்ளவர்களுக்கு அரசியல் உரிமை உண்டு. இதனை அதிபர்கள் ஆசிரியர்கள் சரியாகப புரிந்து கொண்டு நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் தமது பங்களிப்பினை பூரணமாகப் பயன்படுத்தி மாணவர்களுக்கான இளைஞர், யுவதிகளுக்கான, மக்களுக்கான முறையான தேர்தல் விதிமுறைகளையும் வாக்களிக்கும் முறைகளையும் தெளிவுபடுத்தி சகலரையும் வாக்களிக்கச் செய்யுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.




# கூட்டமைப்பின் எழுச்சிப்பாடல் இறுவட்டு வெளியீடு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாபெரும் பொதுக்கூட்டம் வவுனியா குருமண்காடு கலைமகள் திறந்தவெளி விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றது.

கூட்டமைப்பின் ஐந்து கட்சித் தலைவர்களான இரா.சம்பந்தன், வீ.ஆனந்தசங்கரி, தர்மலிங்கம் சித்தார்த்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரும், வட மாகாண சபை முதலமைச்சர் வேட்பாளர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் வவுனியா மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களும் மாலை அணிவிக்கப்பட்டு குருமண்காடு சந்தியிலிருந்து கலைமகள் திறந்தவெளி விளையாட்டரங்கிற்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தலைமையில் கூட்டம் ஆரம்பமானது. இக்கூட்டத்தின் ஆரம்ப நிகழ்வாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வவுனியா மாவட்ட ஒன்பது வேட்பாளர்களும் மக்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்கள்.

இதனையடுத்து கட்சித்தலைவர்கள மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், வீ.ஆனந்தசங்கரி, தர்மலிங்கம் சித்தார்த்தன், சுரேஷ்பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், யோகேஸ்வரன், அரியநேந்திரன், வட மாகாணசபை முதலமைச்சர் வேட்பாளர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் உரையாற்றினார்கள். இதனைத் தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எழுச்சிப்பாடல் இறு வட்டு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனால் வெளியிட்டு வைக்கப்பட்டது.




# ஐ.நா.அறிக்கை வெளியாகும் வரை

# சிரியா மீது தாக்குதல் நடத்தவேண்டாம்

## அமெரிக்காவிடம் ரஷ்யா வேண்டுகோள்

சிரியாவின் நிலவரம் குறித்து ஐ.நா. அறிக்கை வரும் வரை காத்திருக்குமாறும் இராணுவ நடவடிக்கைக்கு அவசரம் காட்ட வேண்டாம் எனவும் ரஷ்யா அமெரிக்காவிடம் வேண்டு கோள் விடுத்துள்ளது.

சிரியாவில் ஜனாதிபதிக்கு எதிராக நடந்து வரும் போராட்டத்தில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் டமாஸ்கசின் புறநகர்ப்பகுதியில் கடந்த 21ஆம திகதி நடந்த தாக்குதலில் சிறுவர்கள் உட்பட நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டதாக தகவல்கள் வெளியாகின.

இந்தச்சம்பவம் உலகம் முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், சிரியா மீது தாக்குதல் நடந்த அமெரிக்கா தயாராக உள்ளது.

இதனைத் தொடர்ந்து இரசாயனத்தாக்குதல் நடந்த இடத்தில் ஆஞ்சலா கேன் தலைமையிலான ஐ.நா. குழுவினர் ஆய்வு நடத்துகின்றனர்.

சிரிய விவகாரம் குறித்து பிரான்ஸ் ஜனாதிபதி பிராங் கோய்ஸ் ஹோலண்டேவும், இங்கிலாந்து பிரதமர் டேவிட் கமரூனும் தொலைபேசியில் ஆலோசனை நடத்தினர்.

சிரியாவில் இரசாயன குண்டு தாக்குதல் குறித்து தாமதமின்றி ஆய்வு நடத்த வேண்டும் என்று ஜேர்மனியின் வெளிவிவகாரத் துறை அமைச்சர் குய்டோ வெஸ்டர்வெல்லே தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்வது மத்திய ஆசியாவில் போர் பதறத்தை ஏற்படுத்தும் என ரஷ்யா, சீனா, ஈரான் போன்ற நாடுகள் எச்சரித்துள்ளன.

ஐ.நா. குழுவினர் ஆய்வு நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கும் வரை சிரியாவில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளக்கூடாது என ரஷ்ய வெளிவிவகார செயலர் அலெக்சாண்டர் லுகாசேவிச் விடுத்துள்ள அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

# ரம்யாவின் லோக்சபா வெற்றி ஆண்களின் முகத்தில் விழுந்த அடி



நடிகை ரம்யா லோக்சபா தேர்தலில் வெற்றி பெற்றது சில ஆண்களின் முகத்தில் விழுந்த அடியாகும் என்று நடிகை குஷ்பு தெரிவித்துள்ளார்.நடிகை ரம்யா கர்நாடக லோக்சபா தேர்தலில் மாண்டியா தொகுதியில் வெற்றி பெற்றுள்ளார்.



காங்கிரஸில் பல காலம் உள்ள ரம்யா இதன் மூலம் மக்கள் மத்தியில் தனக்கு இருக்கும் செல்வாக்கை நிரூபித்துள்ளார். இந்நிலையில் ரம்யாவின் வெற்றி குறித்து நடிகை குஷ்பு ட்விட்டரில் கூறு கையில், நடிகை ரம்யா லோக்சபா தேர்தலில் வெற்றி பெற்றது மகிழ்ச்சி தருகிறது.

இது, அவர் குறித்து கீழ்த்தரமாக கேள்விகளை கேட்ட சில ஆண்களின் முகத்தில் விழுந்த அடியா கும்.மேலும் பெண்கள் அரசியலுக்கு வந்து மரியாதை மற்றும் கௌரவத்துடன் வாழ சிறந்த சமூகம் கிடைக்க போராட வேண்டும். இதனை ரம்யா ஆரம்பித்தது மகிழ்ச்சி அளிக்கிறது என்றும் அவருக்கு என்னுடைய வாழ்த்துக்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

# மசோதாவாக்கொடுப்பின் போது சோனியாவிற்கு உடல்நலம் பாதிப்பு



திடீரென ஏற்பட்ட உடல்நலக்குறை காரணமாக காங் கிரஸ் தலைவர் சோனியா காந்தி தில்லி எய்ம்ஸ் மருத்துவ மனையில் இதய நோய் சிகிச்சைப் பிரிவில் அவர் அனுமதிக்கப்பட்டார்.

அவருக்கு மூச்சு விடுவதில் பிரச்சினை இருந்ததால் அதுதொடர பான மருத்துவப் பரிசோதனைகள் நடாத்தப்பட்டன. அவரது உடல் நிலை சீராக உள்ளது. எனவே கவலைப்படத் தேவையில்லை என்று எய்மஸ் டாக்டர்கள் கூறியுள்ளனர்.மக்களவையில் நேற்று முன்தினம் இரவு உணவுப் பாதுகாப்பு மசோதா தொடர்பான வாக்கெடுப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, சோனியாகாந்திக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டது. சுமார் 8.15 மணியளவில் நாடாளுமன்றத்தில் இருந்து சோனியா காந்தி வெளியேறினார்.

மத்திய அமைச்சர் குமாரி செல்ஜா, காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி ஆகியோர் சோனியா காந்தியை காரில் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். குமாரி செல்ஜாவின் கைகளைப் பிடித்தபடி சோனியா காந்தி நாடாளுமன்றத்தில் இருந்து வெளியே வந்தார்.சோனியா காந்திக்கு ஏற்கெனவே காய்ச்சல் இருந்து வந்தது. இதற்காக ஞாயிற்றுக்கிழமை இரவே அவர் டாக்டரிடம் சிகிச்சை பெற்றுள்ளார்.

உலகச் செய்திகள்

## தெய்வப் பிம்பமாகவே அனைத்துமாகும்!

(7ஆம் பக்கத்தொடர்சி...)

வேண்டியது இராமரின் கொள்கைகளையே.

அருட்கவிஜயா அவர்கள் ·பிரசங்கம் செய்யும் போது கூறினார் நாராயணர் ஒவ்வொரு முறையும் அவதாரம் எடுக்கும் போதும் பூலோகத்தில் தனியே வந்து இங்குள்ள சுகபோகங்களை அனுபவிப்பதால் வந்த வேலையை முற்று முழுதாக செய்து முடிப்ப தில்லை. இதைக் கருத்திற்கொண்டே இராம அவதாரத்தில் மகாலட் சுமி சீதை அவதாரம் எடுத்து துணைக்கு வந்தார் என்பார்.

இராமாயணம் பலரால் எழுதப்பட்டாலும் மூலம் வான்மீகி முனிவருடையதே. முனிவர் இராமாயணம் படைக்க ஆரம்பிக்கும் போது பல கேள்விகளுக்கு விடைதெரியாதாம். ஆனாலும் எமது நன்மை கருதி தனக்குத் தெரிந்தவற்றைக் கொண்டு ஆரம்பித்தார். பின்பு தடைகள், தடங்கல்கள் வரும்போது சம்பந்தப்பட்ட பாத்திரங்கள் மறுபிறப்பாக எங்கு உள்ளனவோ அவற்றை ஞானத்தால் அறிந்து அவர்களுடன் தொடர்பை ஏற்படுத்தி நடந்தவற்றை அறிந்து இயற்றினாராம். இவ்வாறு அவர் படும் கஷ்டத்தைக் கருத்திற்கொண்ட பிரபஞ்சம் அவர் கஷ்டத்தைக் குறைக்கும் பொருட்டு இராமாயணப் பாத்திரங்கள் இறக்க அவர்களை கறையான் வடிவில் அவர் இருந்த இடத்திற்குக் கீழே படைத்ததாகவும் ஓர் ஐதீகம் உண்டு.

இராமாயணத்தில் வரும் இராவணன் எமது நாட்டவர் அவர் ஓர் சிவபக்தன் உண்மையில் நாம் எமது சுயநலம் கருதி இறப்பை ஏற்க மறந்தாலும் அழித்தல் என்பது ஓர் இன்றியமையாத தேவையாகும்.

நினைப்பதை செய்து முடிக்க மரணத்தையும் துச்சமாக மதித்து முயற்சிப்பவன் இலட்சியவாதி. அந்த வகையில் இராவணன் ஓர் இலட்சியவாதி ஓர் சிவபக்தனுக்கு இருக்க வேண்டிய அடிப்படைப் பண்பு அதுவே, அதை இராவணன் கடைசிவரை கைவிடவில்லை. இராவணனும் ஓர் சிறந்த வீரனே. தாய் தகப்பனுக்குப் பிறந்த பிள்ளைகள் எல்லோரும் ஒரே மாதிரி இருப்பதில்லை. இதில் இருந்து என்ன தெரிகின்றது ஓர் உயிரின் பிறப்பில் தனிய தாய், தகப்பன் மட்டும் பங்கு வகிப்பதில்லை. அதையும் தாண்டி பிரபஞ்சத்தின் பல ரூபங்களும் பங்கு வகிக்கின்றது. எனவே தாய், தகப்பனின் கடமையுடன் நாம் பிறந்தது ஏன் என ஆராய்ந்து கடமை செய்ய வேண்டும். பல சமயச் சடங்குகள் ஏன் செய்கின்றோம் எனத்தெரியாமல் செய்கின்றோம் அதைத் தெரிந்து செய்வதே என்றும் நன்மை பயக்கும்.

ஓர் நாராணய பக்தனுக்கு இருக்க வேண்டிய ஓர் நற்பண்பு மன்னித்தல் பிற உயிர்களைக் காத்தல் என்பனவாகும். இதையே இராமர் கடைசிவரை கைக் கொண்டார். தனது தாய், தகப்பனின் கடமை தாண்டி அதையும் செய்தார் என்பதுடன் செய்ய வைக்கப்பட்டார் எனவும் கூறலாம். இதற்கு இராவணனும் ஓர் காரணம். பிரபஞ்சம் தனது சமநிலை கருதி இப்படிப் பலரை புதிது புதிதாக உருவாக்கிக் கொண்டே இருக்கும் எமக்கு சிலர் எதிரிகளாக, சிலர் நண்பர் களாக, சிலர் துரோகிகளாகத் தெரியலாம். ஆனால் பிரபஞ்ச அன்னைக்கு அனைவரும் தனது குழந்தைகளே. அந்த வகையில் எல்லா வற்றையும் கடவுளின் ரூபமாகப் பார்ப்பதுவே எமக்கு இயன்றளவு நன்மை பயக்கும்.

நாகேஸ்வரம் -தி.வரோதயன்

# 127 ஆண்டுகள் தயாரிப்பு இரகசியத்தை பாதுகாக்கும் "கொக்கோ கோலா"




18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தலைவலிக்காக நிவாரணம் தேடி மருந்துக் கடைகளுக்கு வந்தவர்களுக்கு கடைக்காரர்கள் ஒரு இரகசியப் பொருளை தண்ணீரில் கரைத்து வழங்கினர்கள்.

இதை சாப்பிட்ட பலருக்கு உடனடியாக தலைவலி இல்லாமல்போனது அந்த "இரகசிய மருந்து" தான் நாளடைவில் போத்தல்களில் அடைக்கப்பட்டு "கொக்கோ கோலா" என்ற வணிகப் பெயருடன் உலக நாடுகளில் உள்ள விற்பனை கூடங்களில் பிரபலமடைந்தது.

அமெரிக்காவின் அட்லாண்டா நகரில் கொக்கோ கோலாவின் தலைமை அலுவலகம் உள்ளது. இங்குள்ள ஒரு பாதுகாப்பு பெட்டகத்தில் உச்சகட்ட பாதுகாப்புடன் 127 ஆண்டுகால பழமை வாய்ந்த கொக்கோ கோலாவின் தயாரிப்பு இரகசியம வைக்கப்பட்டுள்ளது.சில மாதங்களுக்கு முன்னர், இந்த தயாரிப்பு இரகசியம் தொடர்பான குறிப்புகள் தன்னிடம் இருப்பதாகவும், அவற்றை வெளியிடாமல் இருக்க ஓர் பெருந்தொகையை கொக்கோ கோலா நிறுவனம் தனக்கு தர வேண்டும் என்றும் ஒருவரால் மிரட்டல் விடுக்கப்பட்டது.

1886ஆம் ஆண்டு தொழில் முறையாக தொடங்கப்பட்ட அட்லாண்டாவில் உள்ள கொக்கோ கோலா நிறுவனம் 1910ஆம் ஆண்டு ஏற்பட்ட ஒரு தீ விபத்தில் பெரும் பாதிப்பை சந்தித்தது.

மெல்ல, மெல்ல அந்தப்பாதிப்பில் இருந்து விடுபட்டு குளிர் பானங்களின் தயாரிப்பில் முடிசூடா மன்னனாக கொக்கோ கோலா இன்றளவும் திகழ்கிறது. உலகளாவிய ரீதியில் சிறந்த வர்த்தக அடையாளப் பெயராக 2011 ஆம் ஆண்டு கொக்கோ கோலா தேர்வு செய்யப்பட்டது.

கொக்கோ கோலாவின் தயாரிப்பு இரகசியம் எங்கோ ஓரிடத்தில் பத்திரமாக வைக்கப்பட்டுள்ளது என்பது பலரும் அறிந்த விடயம் ஆனால், அட்லாண்டாவில் உள்ள தொழிற்சாலையில் உச்சகட்ட லேசர் விளக்குகளின் பாதுகாப்பில் அந்த ரகசியம் பாதுகாக்கப்பட்டு வருகிறது என்பது தற்போது தெரிய வந்துள்ளது.

அந்தப் பாதுகாப்பு பெட்டகத்[illegible] தற்போது நாள்தோறும் ஆயிரக்கணக்கான கொக்கோ கோலா பிரியர்கள் கண்டு களைப்பு நீங்கி, களிப்படைந்து வருகின்றனர்.

# அலெக்ஸாண்டரின் கல்லறை



உலகின் தோற்கடிக்க முடியாத மன்னர்களில் ஒருவராக திகழ்ந்தவர் மாவீரன் அலெக்ஸாண்டர்.

இவர் கி.மு. 323 இல் தனது 32 ஆவது வயதில் காலமானார். இக்காலப்பகுதியில் எகிப்து, பேர்ஷியா, ஆசியாவையும் கைப்பற்றியிருநதான்.கி.மு.323இல் ஜுன் 10 அல்லது 11 ஆம் திகதி பாபிலோனில். இருப்பினும் இவரது மரண திகதி மற்றும் மரணத்திற்கான காரணம் தொடர்பில் பல விவாதங்கள் இன்றும் இடம்பெற்ற வண்ணமே உள்ளன.

இந்நிலையில் பேரரசன் அலெக்ஸாண்டரின் கல்லறையை கண்டுபிடித்துள்ளதாக ஆராய்ச்சிகள் மூலம் தெரிவித்துள்ளது.

கிறீஸ் நாட்டின் எதேன்ஸ் நகரிலிருந்து வடக்கே 370 மைல் தொலைவில் இக்கல்லறை அமைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆரம்பத்தில் அலெக்ஸாண்டரின் கல்லறை எகிப்திலேயே உள்ளதாக ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டுவந்தது.

இந்நிலையில் முக்கியத்துவம் மிக்க நபரொருவரது கல்லறையை கண்டுபிடித்துள்ளதாக தொல்பொருள் ஆராய்ச்சியாளர் ஐகடாரினி பெரிஸ்டெரி தெரிவித்துள்ளார்.அப்பகுதியில் பாரிய மண் மேடுபோன்ற பகுதியொன்றைக் கண்டுபிடித்துள்ளனர். இதனைச் சூழ பளிங்கு கற்களால் சுவர் அமைக்கப்பட்டுள்ளது. இச்சுவரானது கி.மு. 4 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கக்கூடுமென கணிக்கப்பட்டுள்ளது.

# சென்ற இடமெல்லாம் ஆர்ப்பாட்டம் சலனமின்றிச் சென்றார் நவிப்பிள்ளை





(யாழ்ப்பாணம்)

யுத்த அனர்த்தங்களினால் இறந்த மற்றும் காணாமற்போனவர்களின் உறவுகளின் ஒன்றியத்தினால் நவநீதம்பிள்ளை பயணித்த வீதியில் பழைய பூங்காவுக்கு எதிரில், விசாரணைகள் நடத்தவேண்டும் என பல்வேறு சுலோக அட்டைகளை ஏந்தியவாறு நூற்றுக்கணக்கானோர் தமது எதிர்ப்பை தெரிவித்திருந்தனர்.

இவ்வொன்றியத்தின் கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மட்டக்களப்பு போன்ற பகுதிகளின் கிளையினர் கலந்துகொண்டிருந்தனர்.

'ஜெனீவா விசாரணை புலிகளை நியாயப்படுத்த மட்டுமா?', 'ஜெனிவா மனித உரிமை பேரவை கேட்பது, பேசுவது புலிகள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்ளின் கோரிக்கைகளை மட்டுமா', 'சுரேஷ் பிரேமச்சந்திரனே! மண்டையன் குழுவின் சித்திரவதையில் கொல்லப்பட்டவர்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை வேண்டாமா?', '30 வருடம் நடைபெற்ற யுத்தத்தில் காணாமற்போனவர்கள் குறித்து பேசாமல் இறுதி 3 மாதத்தில் மட்டும் காணாமற்போனவர்களைப் பற்றி பேசுவது ஏன்?', 'புலிகள் சிறுவர்களைக் கடத்திச் சென்ற போது சிறிதரன், சம்பந்தன், மாவை சேனாதிராசா, பிரேமச்சந்திரன், சுமந்திரன் எங்கே போனார்கள்?' என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவண்ணம் நூற்றுக்கணக்கானோர் இவ் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். 9.00 மணியளவில் அவ் வீதியால் வந்த நவநீதம்பிள்ளை குழுவினர் வாகனங்களை மெதுவாக செலுத்தி இவ் எதிர்ப்புக்களை பார்த்த வண்ணம் சென்றனர். (இ)

## சூடானுடன் இராணுவ ஒத்துழைப்பு



இராணுவ உறவுகளை விஸ்தரிப்பது குறித்து சூடானுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. சூடான் இராணுவ பிரதிநிதிகள் குழு ஒன்று கொழும்பிற்கு விஜயம் செய்துள்ளனர். இரு நாடுகளுக்கும் இடையிலான இராணுவ உறவுகளை வலுப்படுத்திக் கொள்வது குறித்து சூடான் இராணுவ பிரதிநிதிகளும், பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவிற்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

இரு தரப்பு உறவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் குறித்து இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சில் இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

## யாழ். நூலகத்தில் கோலம் போட்டார் நவி



யாழ். பொது நூலகத்திற்கு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை வருகை தந்தபோது, வரவேற்பதற்காக அங்கு இடப்பட்டிருந்த கோலம் அவரது காலால் தவறுதலாக கலைந்து விட்டது. இதனையடுத்து அந்தக் கோலத்தை அதேபோன்று அவர் வடிவமைத்தார்.

## இந்திய...

புத்தளம் நீதவான் பாரத விஜயரத்ன முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன் போதே செப்ரெம்பர் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அவர் உத்தரவிட்டார்.

## மனித உரிமை...

செய்ய முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

அவசரமாக முறைப்பாடு செய்ய வேண்டியிருந்தால் இந்த இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மனித உரிமை ஆணைக்குழு இலங்கையில் 1996 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட காரணத்தினால் அவசர அழைப்பு இலக்கமாக 1996 நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## காணாமற்....

நவிப்பிள்ளை, தான் அங்கு சென்று இவற்றை வாசித்து கட்டாயமாக உரியமுறையில் நடவடிக்கை எடுப்பேன் எனவும் எமக்கு வாக்குறுதி அளித்துள்ளார்.

இச்சந்திப்பு எமக்கு மகிழ்ச்சியாக இருக்கின்றது. நேரடியாக நாமும் பாதிக்கப்பட்டவர்களும் வழங்கியமையாலும் இது நம்பிக்கையூட்டுகின்றது. எமக்கு வழங்கப்பட்ட 15 நிமிடமும் நாம் எமது பிரச்சினைகள் குறித்து சரியாக கூறியுள்ளோம். இச்சந்திப்பு திருப்தியாக இருப்பதாக வணக்கத்துக்குரிய அருட்தந்தை செபமாலை தெரிவித்தார். (இ)

## சுயாதீன...

சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு, சுயாதீன தேர்தல் ஆணைக குழு, சுயாதீன நீதிச்சேவைகள் ஆணைக்குழு ஆகியன உருவாக்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கு மெய்யாக ஆர்வம் காட்டினால் 17 ஆம் திருத்தச் சட்டத்தை மீள அமுல் செய்ய வேண்டுமெனவும் அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி பூரண ஒத்துழைப்பு வழங்கும் எனவும் கயந்த கருணாதிலக்க குறிப்பிட்டுள்ளார்.

## தேர்தல் பிரசாரத்தில்...

கொண்டிருந்த போது சாவகச்சேரி நகரப்பகுதிக்கு அண்மையிலேயே மேற்படி இரு குழுக்களுக்குமிடையில் மோதல் வெடித்தது. இரு தரப்பினரும் நேரடியாக மோதலில் குதித்தனர். கையில் அகப்பட்ட தடி, பொல்லுகளை கையில் ஏந்தி மோதிக்கொண்டனர். இந்த மோத லிலும் சிலர் காயமடைந்திருக்கின்றனர்.

இந்த அடிதடி உச்சக்கட்டத்தை அடைந்தபோது ஒரு தரப்பிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து மறுதரப்பும் பதிலுக்கு துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. வீதிப்போக்குவரத்துக்கள் தடைப்பட்டன. வீதியெங்கும் பதற்றம் தலைதூக்கியது. காயமடைந்தவர்கள் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

இச்சம்பவம் குறித்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டிருக்கிறது.


# தென்கொரிய பிரதமர் கொழும்பு வருகிறார்

தென் கொரிய பிரதமர் சன்ங் ஹொன்ங் வொன், இரண்டு நாள் உத்தியோகபூர்வ சுற்றுப் பயணம் மேற்கொண்டு இன்று கொழும்பு வருகிறார். 1977 ஆம் ஆண்டுக்கு பின்னர் தென் கொரிய பிரதமர் ஒருவர் இலங்கைக்கு வருவது இதுவே முதன் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விஜயத்தின் போது தென் கொரிய பிரதமர், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உட்பட அரசியல் உயர் அதிகாரிகள் பலரையும் கண்டு கலந்துரையாடலில் ஈடுபட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதன் போது இரு நாடுகளுக்கிடையிலான உறவினை மேம்படுத்துவது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படும் என தெரிவிக்கப்படுகிறது. இச் சுறறுப் பயணத்தின்போது தென் கொரிய பிரதமர் இலங்கை - கொரிய சுற்றுச்சூழல் அழகுபடுத்தல் தொடர்பான நிகழ்வின் ஒரு பகுதியில் கலந்து கொள்ளவுள்ளதுடன் கொழும்புத் துறைமுகத்தையும் சென்று பார்வையிடவுள்ளார்.

# அதிக விளைவுதரும் சோயா அவரைகள் கண்டுபிடிப்பு



மரபணு தொழில்நுட்பத்தின் ஊடாக அதிக விளைச்சலை தரக்கூடிய சோயா அவரை வகையை உற்பத்தி செய்வதற்கு புதிய முறையொன்றை விஞ்ஞானி ஒருவர் கண்டுபிடித்துள்ளார்.

மரபணு தொழில்நுட்பத்தின் ஊடாக சோயா அவரை வகையொன்றை மீள் உற்பத்தி செய்யும் நடவடிக்கை மிகவும் கடினமானது என சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் விவசாய ஆய்வுப் பிரிவின் விஞ்ஞானியான பேராசிரியர் யசரத் அமரசிங்க தெரிவித்துள்ளார்.

விசேட தொழில்நுட்பத்தின் ஊடாக இந்த புதிய முறையை கண்டுபிடித்துள்ளதாக அவர் கூறியுள்ளார். இதனூடாக புதிய வகை சோயா அவரை வகையொன்றை அறிமுகப்படுத்த முடியும் என சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் விவசாய ஆய்வுப் பிரிவின் பேராசிரியர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# கருக்கலைப்பு மாத்திரைகளுடன் போலி மருத்துவர் கைது

(கொழும்பு)

கருக்கலைப்பு வில்லைகள் உள்ளிட்ட மேலும் 20 ஆயிரத்திற்கும் அதிகமான வில்லைகளை சட்டவிரோதமாக நாட்டிற்குள் கடத்திவந்த போலி வைத்தியர் ஒருவர், கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மும்பாயிலிருந்து நேற்று அதிகாலை 5.00 மணியளவில் இநதப் போலி வைத்தியர் விமான நிலையத்தை வந்தடைந்ததாக சுங்க ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி குறிப்பிட்டார்.

சுமார் 20 இலட்சம் ரூபா பெறுமதியான இந்த வில்லைகள் பொதிகளுக்குள் மறைவாக கொண்டுவந்தபோது பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டு, சுங்கப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சந்தேநபர் இரத்தினபுரி பகுதியைச் சேர்ந்த 45 வயதான ஒருவர் என்பது தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# தேர்தல் வன்முறை; இதுவரை 36 பேர் கைது

(கொழும்பு)

தேர்தல் வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய 36 பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாணசபைத் தேர்தல்களுடன் தொடர்புடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேர்தல் சட்ட விதிகள் மீறப்பட்டமை தொடர்பில் மூன்று மாகாணங்களிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதுவரையில் 68 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கட்சிகளுக்கு இடையிலான மோதல்களை விடவும் உட்கட்சி மோதல்கள் தொடர்பிலேயே அதிகளவான முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## எங்கள் உறவுகள்...

அண்ணனை விடுதலை செய்யக்கோரி கதறியழுதமை எல்லோரையும் கலங்க வைத்தது. தாம் அரசிடம் ஒப்படைத்த பிள்ளைகளை காணவில்லை என்றால் இதற்கு சர்வதேசம்தான் பதில் சொல்ல வேண்டும், விசாரிக்க வேண்டும் என கோஷம் எழுப்பினர்.

கணவனை இழந்த பெண்கள், தந்தையரை இழந்த குழந்தைகள் என நூற்றுக்கணக்கானோர் கொழுத்தும் வெயிலில் தமது கவனயீர்ப்பு போராட்டத்தை நடத்தினர்.

சிலமணிநேரம் அப்பகுதி எங்கும் அவலக்குரல் ஓங்கி ஒலித்துக் கொண்டிருந்தது. இவர்களின் போராட்டத்தைத் தொடர்ந்து நவநீதம்பிள்ளையிடம் மகஜர் சமர்ப்பிக்க மக்கள் திரண்ட போதிலும் அவர் நூலகத்தின் பின்புற வாயிலால் சென்றமையால் மகஜர் கையளிக்க முடியாமல் போனது. எனினும் இவர்களின் பிரதிநிதிகளால் ஐ.நா. அலுவலகத்தில் வைத்து இம்மகஜர் கையளிக்கப்பட்டது. (இ,பா)

# யாழ்.குடா நிலைவரம் நவிப்பிள்ளைக்கு எடுத்துரைப்பு

## பல தரப்புக்களுடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து குடாநாட்டின் நிலைமைகள் குறித்து ஆராய்ந்ததுடன் பல்வேறு தரப்பினரையும் சந்தித்தார்.

நேற்றுக் காலை 8.00 மணிக்கு வடமாகாண ஆளுநர் இல்லத்திற்குச் சென்ற நவிப்பிள்ளைக்கு வரவேற்பளிக்கப்பட்டதுடன், ஆளுநருடனான சந்திப்பு இடம்பெற்றது.

ஒரு மணி நேரம் இடம்பெற்ற இச்சந்திப்பில் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்த அனர்த்தங்களினால் இறந்த மற்றும் காணாமற்போனவர்களின் ஒன்றிய உறுப்பினர்கள் மற்றும் உறவுகள் என நூற்றுக்கணக்கானவர்கள் பழைய பூங்கா எதிரில் பதாகைகள் தாங்கியவண்ணம் கூடியிருந்தனர்.

ஆளுநர் இல்லத்திலிருந்து புறப்பட்ட நவிப்பிள்ளை இதனைத் தனது வாகனத்தை நிறுத்தாமல் போகும் போதே அவதானித்த வண்ணம் யாழ். பொது நூலகம் நோக்கிச் சென்றுள்ளார். அங்கு அவருக்கு வரவேற்பளிக்கப்பட்டது.

வடமாகாண பிரதம செயலாளர் விஜயலட்சுமி ரமேஸ் தலைமையில் வடக்கில் அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்திகள், முன்னேற்பாடுகள் குறித்து விளக்கப்பட்டதுடன், மாவட்டச் செயலாளரும் தமது மாவட்ட அபிவிருத்தி தொடர்பாக நவிப்பிள்ளைக்கும் அவருடன் வந்துள்ள ஐ.நா. உறுப்பினர்களுக்கும் விளக்கமளித்தனர்.

கடந்த காலங்களை விடவும் யுத்தம் நிறைவடைந்த நிலையில் நாட்டில் உள்ள அபிவிருத்தித் திட்டங்களின் வளர்ச்சிப் போக்கு குறித்து விரிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் மாவட்டங்களின் செயலர்கள், வடமாகாண ஆளுநர், ஆளுநரின் செயலாளர் மற்றும் திணைக்களங்களின் உயரதிகாரிகள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடல் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் யுத்தத்தின் போது காணாமற்போனவர்களின் உறவுகள் பொதுநூலக வீதியால் திரண்டு பெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்திக் கொண்டிருந்ததுடன், மகஜர் ஒன்றையும் கையளிக்க முற்பட்டனர்.

எனினும் கூட்டம் நிறைவடைந்து நவநீதம்பிள்ளையின் குழுவினர் நூலக பின் கதவால் கோவில் வீதியினுள் ஐ.நா.வின் அலுவலகம் நோக்கிச் சென்றனர். நூற்றுக்கணக்கானோர் இவ்வார்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர். நண்பகல் 12.00 மணி வரை ஐ.நா. அலுவலகத்தில் சிவில் பிரதிநிதிகளைய்ு நவிப்பிள்ளை சந்தித்துக் கலந்துரையாடியதுடன், யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தை முடித்துக் கொண்டு கிளிநொச்சி பயணமானார். (இ)



# எழுத்தாளர் தனேந்திரா நேற்றுக் காலமானார்

அங்கிலிக்கன் திருச்சபையின் அருட்பணியாளரும், சென்.ஜோன்ஸ் கல்லூரியின் சமூகவியல் ஆசிரியருமான அருட்பணி வி.பி.தனேந்திரா அடிகளார் நேற்று இறைவனுக்குள் நித்திரையடைந்தார்.

தனது சிறு வயதிலிருந்தே ஆன்மீகத்தில் நாட்டம் கொண்ட அடிகளார் இறைபணிக்கென தன்னை முழுமையாக அர்ப்பணித்தார். இறைபணியோடு மட்டும் நின்று விடாது தனது எழுத்தாற்றல் மூலம் உள, சமூக, சமயக் கருத்துக்களை பத்திரிகைகள், சஞ்சிகைள், நூல்கள் வாயிலாக முன்வைத்தார்.

அறுபதுக்கு மேற்பட்ட புத்தகங்களை எழுதியும், தொகுத்தும் இறை தொண்டாற்றிய அடிகளார் ஆழமான இறையியல் சிந்தனை கொண்டவர். இவரின் இழப்பு திருச்சபைக்கும், திருச்சபை சார்ந்தவர்களுக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

# வேலணையில் இன்று நடமாடும் சேவை

(வேலணை)

வேலணை பிரதேச செயலர் பிரிவில் இன்று 'கபே' அமைப்பின் ஆதரவுடன் நடமாடும் சேவை ஒன்று நடைபெறவுள்ளது.

வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஷன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நடமாடும் சேவையில் காலம் கடந்த பிறப்பு, இறப்பு காலம் கடந்த திருமணப் பதிவு இல்லாதிருப்பது, தேசிய அடையாள அட்டை இல்லாது இருப்பது தேசிய அடையாள அட்டை பழுதானது அல்லது தொலைந்து ஆகியவற்றினைப் பெற்றுக்கொள்வதற்காக இந்த நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

மேலும் கடந்த மாதம் வேலணை பிரதேச செயலகத்திலும் புங்குடுதீவு சர்வவோதய வளாகத்திலும் இந்த நடமாடும் சேவை இடம்பெற்றிருந்த போது இந்தச் சந்தர்ப்பங்களைத் தவறவிட்டவர் களுக்கென சந்தர்ப்பங்களை அளிக்கும் முகமாக இந்த நடமாடும் சேவை இன்று இடம்பெறுகின்றது. எனவே இந்தச் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுக்கொண்டுள்ளார். (05)

# முள்ளிவாய்க்கால், சூரியபுரம் மக்கள் நவிப்பிள்ளையிடம் மகஜர் கையளிப்பு

(கிளிநொச்சி)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை நேற்றுப் பிற்பகல் இறுதிப்போர் இடம்பெற்ற புதுமாத்தளன், முள்ளிவாய்க்கால் பகுதிக்குச் சென்று பொதுமக்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

பிற்பகல் 2.30 மணிக்கு புதுமாத்தளன் பகுதிக்குச் சென்று அங்கு மீள்குடியேறியுள்ள பொதுமக்களுடன் கலந்துரையாடி அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து கொண்டார். தொடர்ந்து உள்வீதி வழியாக முள்ளிவாய்க்கால் பகுதிக்குச் சென்று அங்கு பொதுவான ஒரு இடத்தில் கூடியிருந்த மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் அவர்கள் மத்தியில் சிறிது நேரம் உரையாற்றியுள்ளார்.

இப்பகுதியில் வைத்து பொது மக்கள் தமது காணிகளை விடுவித்தல், காணாமற் போனவர்களை மீட்டல் உட்படப் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மகஜரினைக் கையளித்தனர்.

தொடர்ந்து கேப்பாபுலவு, சூரியபுலம் மீள்குடியேற்றக் கிராத்திற்குச் சென்ற நவிப்பிள்ளை அடங்கிய குழுவினர் அங்கு பொதுமக்களைச் சந்தித்து கலந்துரையாடினர். அங்கு வைத்தும் மக்களால் மேற்படி கோரிக்கைகள் அடங்கிய மகஜர் கையளிக்கப்பட்டது.

மகஜரைப் பெற்றுக்கொண்ட நவிப்பிள்ளை மக்களின் கோரிக்கைகள் அடங்கிய இந்த மகஜரில் உள்ள விடயங்கள் குறித்து இலங்கை அரசாங்கத்துடன் கலந்துரையாடுவதாகவும், இது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் கவனத்திற்கு கொண்டு செல்வதாகவும் உறுதியளித்தார்.

இந்நிகழ்வில், முல்லை மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலர்கள், கிராம அலுவலர்கள் மற்றும் அரச அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (40)

# திண்மக்கழிவு அகற்ற புதிய வாகனங்கள் தருவிப்பு




(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபைக்கென குப்பைகளை அகற்றுவதற்கு நவீன ரக கொம்பக்ட் ட்ரக் வாகனங்கள் இரண்டு பெறப்பட்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் அவை உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டுள்ளன.

நேற்றுப் பகல் நல்லூரிலுள்ள யாழ். மாநகரசபை வளாகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் மேற்படி இரு வாகனங்களும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் யாழ். மாநகரசபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசாவிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டன.

ஒரு கோடியே 30 இலட்சம் பெறுமதியான இக்கொம்பக்ட் ட்ரக் வாகனங்களுக்காக உள்ளூராட்சி அபிவிருத்திக்கான கடன் நிதியத்தில் இருந்து ஒரு கோடி ரூபாவும் மாநகரசபை நிதியிலிருந்து 30 இலட்சம் ரூபாவும் பெறப்பட்டிருந்ததாக யாழ். மாநகரசபை ஆணையாளர் பிரணவநாதன் தெரிவித்துள்ளார்.

# பிரித்தானிய அதிகாரிகள் மட்டக்களப்பில்

(மட்டக்களப்பு)

நவம்பர் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள பொது நலவாய மாநாட்டுக்கு வருகை தரும் பிரதிநிதிகள் மற்றும் வெளிநாட்டு இராஜதந் திரிகள் குழுவொன்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

இது தொடர்பான முன்னேற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக நேற்று பிரித்தானிய தூதுவராலயத்தின் உயரதிகாரிகள் குழுவொன்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்தது.

கொழும்பிலுள்ள பிரித்தானிய தூதுவராலயத்தின் அரசியல் பிரிவுக்கான தலைமை அதிகாரி டயனியல் பீட்டர் மற்றும் அரசியல் பிரிவு அதிகாரி மகிந்திரா ரட்ணவீர ஆகியோர் மட்டக்களப்புக்கு விஜயம் செய்தனர்.

இவர்கள் மட்டக்களப்பு மாநகர சபைக்கு சென்று மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளர் கே.சிவநாதனைச் சந்தித்ததுடன் மட்டக்களப்பு சிவில் சமூக அமைப்பின் தலைவர் எஸ். மாமங்கராஜா மற்றும் மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனத் தலைவர் வி.இரஞ்சித மூர்த்தி மட்டக்களப்பு வர்த்தக சங்க தலைவர் எம்.செல்வராஜா ஆகியோரை சந்தித்ததுடன் மட்டக்களப்பு நகரிலுள்ள ஜாமியுஸ்ஸலாம் ஜும் ஆ பள்ளிவாசலுக்கு சென்று அந்த பள்ளிவாசல் நிர்வாகத்தினரை சந்தித்து கலந்துரையாடியதுடன் பள்ளிவாசலையும் சுற்றி பார்வையிட்டனர்.

# மின்தடை பற்றிய அறிவித்தல்

கிளிநொச்சி-சுன்னாகம் இடையே அமைக்கப்பட்டுள்ள 132,000 வோல்ட் அதியுயர் அழுத்த மின் மார்க்கத்தின் இணைப்பு வேலைகளுக்காக இன்று மதியம் 12.30 தொடக்கம் மாலை 5.30 மணி வரை உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப்பிரதேசம், பட்டணப்பகுதி, யாழ்.மாநகரசபைப் பகுதி, குருநகர், பாசையூர், காக்கைதீவு, மீனாட்சிபுரம், கொட்டடி, நாவாந்துறை, யாழ்.பிரதான வீதி, பண்ணைப் பகுதி, கந்த ரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், அராலி, காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப்பகுதி, சுன்னாகம், மல்லாகம், தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், கரந்தன் பிரதேசம், நீர்வேலிப் பிரதேசத்தின் ஒரு பகுதி, கல்வியங்காடு முதல் திருநெல்வேலி வரையான பிரதேசம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ் பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# கொரியாவின் திட்டமிடல் நிபுணர் கிழக்கு மாகாணம் விஜயம்

(மட்டக்களப்பு)

கொரிய அரசாங்கத்தின் பௌதீக திட்டமிடலுக்கான பிரதான ஆய்வு நிறுவனமான கிறிஸ் அமைப்பின் பணிப்பாளர் ஜின் ஜோல்-ஜுல் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார்.

கிழக்கு மாகாணத்திலுள்ள பலதரப்பட்ட அமைப்புக்கள், உள்ளூராட்சி மனறங்கள் நகர அபிவிருத்தி அதிகார சபை அடங்கலாக முக்கிய நிறுவனங்களின் தலைவர்களை சந்தித்து கலந்துரையாடினார். கிழக்கு மாகாண முதலமைச்சர் அலுவலத்திற்கு வருகை தந்த பணிப்பாளர் ஜின் ஜோல்-ஜுல், கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீதுடனும் கலந்துரையாடினார்.

பணிப்பாளர் ஜின்ஜோல்-ஜுலு டன் முதலமைச்சர் மற்றும் கிழக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் யு.எல்.ஏ. அஸீஸ், ஆசிய மன்றத்தின் ஆசிய அபிவிருத்தி அதிகாரி செல்வி யங்கிம், நிகழ்சித்திட்ட அதிகாரிகளான எம்.எஸ். றிஸாட், எம்.ஐ.எம். வலீத், தம்மிக்க மகேந்திர ஆகி யோரும் கலந்து கொண்டனர்.

# ஜோதிலிங்க தரிசனம்; அணிதிரளும் பக்தர்கள்

(திருநெல்வேலி)

ஜோதிலிங்க பவனி கடந்த ஞாயிற்றுக்கிழமை கைதடி அரச முதியோர் இல்லத்தில் அமைந்துள்ள விநாயகர் ஆலயத்தை வந்தடைந்தது. நேற்று முன்தினம் மதியம் 12.00 மணி வரை லிங்க தரிசனம் நடைபெற்றது.

கைதடி வாழ் மக்கள், இல்ல முதியவர்கள் மற்றும் பலரினால் தியானம், அமைதி போன்ற நிகழ்வுகள் இம்பெற்றன. இரண்டு ஜோதி லிங்கங்கள் பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தினால் எடுத்து வரப்பட்டன.

இரண்டு ஜோதிலிங்கங்களும் சீதாப்பிராட்டியினால் வணங்கப்பட்டவை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரம்மகுமாரிகளின் ஜோதி லிங்க பவனி தற்போது பல இடங்களிலும் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (137)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஆகஸ்ட் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.